விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 12 திங்கட்கிழமை (28.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 009

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# புதிய அரசியல் அமைப்பில் தமிழருக்கான தீர்வு திட்டம்!

## நிபுணர் குழுவை உருவாக்கியது தமிழ் மக்கள் பேரவை





(யாழ்ப்பாணம்)

**அரசாங்கம் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வரவுள்ள தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் அபிலாசைகள், கருத்துக்கள் அடங்கிய தீர்வுத் திட்ட ஆலோசனைகள் புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படுவதற்காக அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் என அறிவித்துள்ளதை, தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்கள், இதற்காக பல தரப்பட்ட நிபுணர்களை உள்ளடக்கியதான அரசியல் விவகாரங்களுக்கான உப குழு ஒன்றையும் உருவாக்கியுள்ளனர்.**

தமிழ் மக்கள் பேரவையின் இரண்டாவது கூட்டம் நேற்று காலை ஒன்பது மணியளவில் யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்று, பின்னர் மதியம் பன்னிரண்டு மணியளவில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றும் நடைபெற்றது. இதில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளனர். பேரவையின் இணைத தலைவர்களான முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வைத்திய நிபுணர் பூ.லக்ஸ்மன், த.வசந்த

24

# எம் அடையாளங்கள் பறிக்கப்படும் ஆபத்தை உணர்ந்து கொண்டுள்ளோம்

## அதனால்தான் அமைப்பை உருவாக்கினோம்-லக்ஷ்மன்

(யாழ்ப்பாணம்)

எமது அடுத்த சந்ததியில் எமக்கான அடையாளங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டுவிடும் என்ற ஆபத்தை உணர்ந்து கொண்டதன் காரணமாகத்தான் தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பை உருவாக்கியுள்ளோம். அதை சரியான முறையில் புரிந்து அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் 2 ஆவது அமர்வு நேற்றையதினம்

23ஆம் பக்கம் பார்க்க

# புதிய அரசியலமைப்பை உருவாக்க சர்வதேச ஆதரவு தேவையில்லை

## நீதியமைச்சர் விஜேதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக உருவாக்கப்படவுள்ள புதிய அரசமைப்புக்கு சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என்று நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

1978ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தனவால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையுடன், இல

24ஆம் பக்கம் பார்க்க

## பேஸ்புக் பாவனைக்கு வயதெல்லை அவசியம்!

(கொழும்பு)


இளைஞர்கள் மத்தியில் அதிக இடம்பிடித்துள்ள சமூக வலைத்தளமான முகப்புத்தக (பேஸ்புக்) பாவனைக்கு உரிய வயதெல்லையை நிர்ணயிக்க, அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பாடசாலை மாணவர்கள், சிறுவர்களை குறிவைத்து அண்மைக்

24ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் மக்கள் பேரவை கட்சியல்ல; மக்களின் நலனுக்கான இயக்கம்

## விசித்திர விமர்சனங்களுக்கு சி.வி.முற்றுப்புள்ளி



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களின் கட்சிகளுக்கு எதிரானதல்ல. தமிழ் மக்களின் நலன்களுக்கும் எதிரானதல்ல. தமது தனித்துவத்தை மக்கள் மீது திணிக்க எத்தனிக்கும் ஒரு இயக்கமும் அல்ல. மாறாக மக்கள் நலம் நாடும் ஒரு மக்கள் இயக்கமே அது. இதன் தலைமைத்துவம் தனி மனிதர்களின் செல்வாக்கில் கட்டி எழுப்பப்பட்டதன்று. மக்கள் மனமறிந்த, மக்களுடன் மக்களாக வாழ்ந்து வருவோரின் தலைமைத்துவத்தைக் கொண்டது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், விடுதலைக்காகப் போராடும் எந்த ஒரு

04ஆம் பக்கம் பார்க்க

## ஆட்சி மாற்றத்துக்கு சீன ஊடகம் புகழாரம்

(கொழும்பு)

2015ஆம் ஆண்டின் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் உலகின் முக்கியமான தேர்தல்களில் முதன்மையானது என்று சீன செய்திச் சேவை புகழாரம் சூட்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இலங்கையானது சீனாவின் முக்கிய நட்பு நாடாக விளங்கியது.

எனினும் ஆட்சிமாற்றத்தின் பின்னர் அந்த நிலைமை மாறி தற்போது சீனாவும் ஒரு நட்பு நாடு என்றளவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க

## கடும் மழை தொடரும்!

(கொழும்பு)

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் இன்றைய தினமும் கடும் மழை பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க

## கொள்கையை ஏற்றுக்கொண்டு சுமந்திரனும் இணையலாம்!

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையில் எமது கொள்கையை ஏற்றுக்கொள்ளும் எவரும் இணையலாம், அது சுமந்திரனாக இருந்தாலும் நாம் ஏற்றுக் கொள்வோம் என வடக்கு மாகாண முதலமைச்சரும் பேரவையின் இணைத் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். பேரவையின் முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று மதியம் 12

24ஆம் பக்கம் பார்க்க

## கட்சித் தலைவர்கள், கல்வியியலாளர்களுடன் அரசியல் உப குழு தெரிவாகியது

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் நடவடிக்கைகளுக்கான உபகுழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த உபகுழு தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமென பேரவையின் இணைத் தலைவர்கள் அறிவித்துள்ளனர். இதில் பல தரப்பட்ட கட்சிகளின் தலைவர்கள் உறுப்பினர்கள் மற்றும் கல்வி

24ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ‘அருள்நெறி விழா’ விருது வழங்கல்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு அறநெறி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான விருது வழங்கும் “அருள்நெறி விழா” நேற்றையதினம் யாழ் நீராவியடி இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

யாழ் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற சித்திரம், நடனம் (தனி, குழு), வில்லிசை, பண்ணிசை, பேச்சு, கட்டுரை, நாடகம் ஆகியபோட்டிகளில் பிரதேச மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்ற மாணவர்களை தெரிவு செய்து மாவட்ட மட்ட ரீதியில் போட்டிகளை நடத்தி அதில் வெற்றிபெற்ற 307 மாணவர்களுக்கு நேற்றைய தினம் விருதுகள் வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமிஜி சர்வரூபானந்த மகராஜ், யாழ்ப்பாண சின்மயாமிஷன் சுவாமி ஜாக்கிரத சைதன்ஜா, தருமசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தானு மகாதேவகுருக்கள், சர்வதேச இந்துகுருமார் ஒன்றியதலைவர் சிவஸ்ரீ ப.மனோகரகுருக்கள், வீணாகானகுருபீட தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவகுருக்கள் கலந்து கொண்டு ஆசி உரைகளை நிகழ்தியதோடு பிரதம விருந்தினர்களாக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தில்லைநடராஜா, யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் மற்றும் பிரதேச செயலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர். (செ-9)

## பிரகீத் எக்னெலிகொட கடத்தல்; இராணுவ அதிகாரிகளிடம் விசாரணை

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் மற்றும்தற்போதைய இராணுவ மற்றும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளிடம் விசாரணை நடத் தப்படவுள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் எஸ்.சாலி, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய ஆகியோரிடமே இந்த வாரம் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன. பிரகீத் எக்னெலிகொட விவகாரம் மட்டுமன்றி, வர்த்தகர்கள் கடத்தப்படடு கப்பம் கோரப்பட்டது குறித்தும், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை நடத்தப்படவுள்ளது.

முன்னாள் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்புச் செயலர்கருணாசேன ஹெற்றியாராச்சி ஆகியோருக்கும் விளக்கமளிக்கப்படவுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளைஏற்கெனவே இராணுவப் புல னாய்வுப் பிரிவின் இரண்டு மூத்த அதிகாரிகள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பருப்பு, சீனிக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

சீனி மற்றும் மைசூர் பருப்பு என்பவற்றுக்கு அரசாங்கம் விதித்துள்ள அதிகபட்ச கட்டுப்பாட்டு விலையை நீக்க வேண்டும் என்று மொத்த விற்பனையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அவ்வாறு நீக்காத பட்சத்தில், இந்த பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அதிக பட்ச கட்டுப்பாட்டு விலை நிர்ணயத்தின் காரணமாக, இறக்குமதி செய்யப்படுகின்ற விலையைக் காட்டிலும், குறைந்த விலையில் உள்நாட்டில் சந்தைப்படுத்த வேண்டி ஏற்படுகிறது.

இதனை சமாளிக்க முடியாது என்று புறக்கோட்டை மொத்த விற்பனையாளர் சங்கத்தின் செயலாளர் கே.நாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதன் காரணமாக இந்த பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## அமெரிக்க வதிவிட உரிமைக்கு பொன்சேகா மீண்டும் விண்ணப்பம்

(கொழும்பு)

முன்னாள் படைத்தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அமெரிக்கா செல்வதற்கான வதிவிட உரிமை (கிறீன் காட்) அட்டைக்கு மீண்டும் விண்ணப்பித்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள தனது மகள்களைப் பார்வையிடுவதற்காக அவர் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நுழைவுஅனுமதிக்கு விண்ணப்பித்திருந்த போதிலும், அவருக்கு நுழைவு அனுமதியை வழங்க அமெரிக்கத் தூதரகம் மறுத்து விட்டது.

இந்நிலையில், அமெரிக்கா செல்வதற்காக அவர் காலாவதியாகியிருந்த தனது வதிவிட உரிமைப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கு விண்ணப்பித்துள்ளார்.

ஆயினும் வதிவிட உரிமை பத்திரம் புதுப்பித்தல் நடவடிக்கை அமெரிக்க துதரகத்தினால் மேற்கொள்ளப்படுவதில்லை. அது தொடர்பிலான நடவடிக்கைகள் அமெரிக்காவிலேயே மேற்கொள்ளப்படும்.

இதனால், வதிவிட உரிமைப் பத்திரத்தைப் புதுப்பிக்க கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்துக்கான பதிலை சரத்பொன்சேகா எதிர் பார்த்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-12)

## அலரிமாளிகையில் இருந்தேன் - மகிந்த

(கொழும்பு)

2004ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்ட போது தான் அலரிமாளிகையில் இருந்ததாகவும், கடல் நீர் ஊருக்குள் வந்துளளதாக கூறியும் தான் நம்பவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுனாமி ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் மாத்தறையில் நடைபெறவிருந்த நிகழ்வொன்றில் கலந்துக்கொள்வதற்காக தான் தயாராகியிருந்தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)


### உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்(வ-து)

**பதவி வெற்றிடம்**

பதவி : கிளை முகாமையாளர்

கல்வித்தகைமை : க.பொ.த.சாதர்ரண தரம் சித்தி.

விண்ணப்ப முடிவுத்திகதி : 07.01.2016

பொது முகாமையாளர்
உடுப்பட்டி ப.நோ.கூ.சங்கம்
22-12-2015 (C-3147)

### றோயல் கால்நடை வைத்தியசாலை இடமாற்றம்

திருநெல்வேலி சந்திக்கும் விவசாய பண்ணைக்கும் இடையில் பலாலி வீதியில் செயற்பட்டு வந்த மேற்படி கால்நடை வைத்தியசாலை தற்சமயம் தட்டாதெரு சந்தியில் அதே பெயருடன் செயற்பட்டு வருகின்றது.

முன்னர் இவ் வைத்தியசாலை செயற்பட்டு வந்த இடத்தில் தற்சமயம் இயங்கிவருகின்ற கால்நடை வைத்திய நிலையத்திற்கும் இடமாற்றப்பட்டு செயற்பட்டு வருகின்ற றோயல் ( தனியார் ) கால்நடை வைத்திய சாலைக்கும் இடையில் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என்பதை அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்
021320 7561
(2996)

### கண்ணீர் காணிக்கை

அமரர் வின்சன் வின்ஜக்ஷன்



மலர்வு 1990.04.04
உதிர்வு 2015.12.25

எம்முடலில் ஓருயிராய் எம்முடன் பள்ளியிலே
ஏக்கமுடன் கல்வி கற்ற எம் தோழா,
ஏனடா! இந்த அவசரம் எம்மை விட்டு பிரிந்திட:
சாலையிலே சென்ற உனக்கு
சாவு தான் முடிவென்றால்
சாலையிலே யார் தான் இவ்வுலகில்
சாந்தி பெறு என்று சொல்லி... சாந்தி... பெற எமக்கு
சாந்தி பெறும் வயதல்ல
எழுந்து வா எம் தோழா!
உன்னுயிராய் வாழ்ந்த எம் உறவுகளை
கண் விழித்து பாராயோ கடைசியாய் ஒரு முறை
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆழ்ந்த துயரத்துடன்
நண்பர்கள்
சென்.ஜோன்ஸ் கல்லூரி A/L 2009
(2997)

### கண்ணீர் அஞ்சலி

அமரர் இந்திரதாசன் சுதர்சன்





கிளி/ முருகானந்தா கல்லூரியின்
பழைய மாணவர் சங்க செயலாளரும்
பாடசாலை அபிவிருத்திக் குழுவின் உறுப்பினரும்
கரைச்சி பிரதேச சபை
உப அலுவலகப் பொறுப்பாளருமாகிய
அமரர் இந்திரதாசன் சுதர்சன் அவர்களது
அகாலமரணமடைந்த செய்தி கேட்டு
ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ள அவரது
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தி அடையவும்
பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
கிளி / முருகானந்தா கல்லூரி
(C-3149)

# சுன்னாகம் நீரினை குடிக்க முடியுமா குடிக்க முடியாதா ?




## உரிய பதில் வேண்டி மக்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

**சுன்னாகம் நீரினை குடிக்கமுடியுமா? குடிக்க முடியாதா? தெளிவான பதிலை மத்திய, மாகாண அரசுகள் வழங்க வேண்டுமென வலியுறுத்தி சுன்னாகம் முனியப்பர் ஆலயம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தை சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது.**

நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகிய மேற்படி போராட்டம் தொடர்ந்து ஒரு மணித்தியாலம் வரை நடைபெற்றிருந்தது. இப்போராட்டத்திற்கு சுன்னாகத்தை சேர்ந்த பொது மக்கள் ஆதரவினை வழங்கி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சுன்னாகம் நிலத் தடி நீரில் கழிவெண்ணெய் கலக்கப்பட்டதாக கூறப்பட்டதனை அடுத்து வடக்கு மாகாண சபையினால் சுன்னாகம் தண்ணீர் தொடர்பில் ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட நிபுணர் குழு மேற்படி தண்ணீரில் பாரவுலோகங்கள் மற்றும் கழிவெண்ணெய் கலக்கவில்லை என்று அறிக்கை வெளியிட்டிருந்த போதிலும்,

அந்த தண்ணீர் குடிப்பதற்கு உகந்ததா? என்பது தொடர்பில் எவ்வித பதிலும் நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்படவில்ல. குடிப்பது தொடர்பில் தாம் கூற முடியாது எனவும் அதனை தேசிய நீர் வளங்கள் வடிகாலமைப்பு சபையே கூற முடியும் எனவும் நிபுணர் குழு செய்தியாளர்களிடம் கூறியுள்ளது.

இந்நிலையில் கழிவெண்ணெயால் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் சுன்னாகம் நீரினை பருக முடியுமா? முடியாதா? என்பது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அரசியல் வாதிகளோ, அல்லது ஆய்வினை மேற்கொண்ட நிறுவனங்களோ அறிவிக்க வில்லை. இந்த அறிவிப்பினை வெளியிட கோரியே மத்திய, மாகாண அரசுகளை வலியுறுத்தி மேற்படி ஆரப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், பொய்யான அறிக்கைகளால் பூச்சாண்டி காட்டாதீர்கள், எங்கள் குடிநீரை குடிக்கலாமா? உங்கள் ஆய்வு என்ன சொல்கின்றது?, பாட்டன் பூட்டி கட்டிய கிணற்றில் எவ்வாறு கழிவெண்ணெய் வந்தது? அந்நிய கம்பனிகளுக்கு மக்களை தாரை வார்க்காதே எனப்பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் ஏற்பாட்டுக்காரர்களால் வழங்கப்பட்டிருந்தன. (இ-4)

## உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மகிந்த தலைமையில் புதிய கட்சி



அடுத்த வருடம் முற்பகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மற்றும் எ்திர்கால அரசியல் நடவடிக்கைகள் போன்றவற்றை இலக்கு வைத்து "எமது ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணி" என்ற பெயரில் அரசியல் கட்சியொன்றை உருவாக்குவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி மேற்கொண்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மகிந்த ராஜபக்ஷ தலைமையில்உருவாகும்"எமதுஸ்ரீலங்கா சுதந்திர முன்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்மகிந்த அணி, தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய, வாசு தேவ நாணயக்கார தலைமையிலான இடதுசாரிஜனநாயகமுன்னணி உள்ளிட்ட மேலும் பல அமைப்புக்களும் இந்தப் புதிய கட்சியில் இணைந்து செயற்படவுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அரசாங்கம் உள்ளூராட்சி சபை களுக்கான தேர்தல் அறிவிப்பை விடுத்ததும் இந்த அரசியல் சக்தி குறித்து அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நாடளாவிய ரீதயில் காணப்படுகின்ற உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் தொடர்ச்சியான வேண்டு கோளுக்கமையவும் முயற்சியின் விளைவாகவுமே இந்த முன்னணி தோற்றம் பெறுவதாகவும் சொல்லப்படுகின்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் மகிந்த அணியினர் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியால் வழங்கப்பட்ட தேசியப் பட்டியல் பகிர்வு மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் நியமனம் உள்ளிட்ட பல செயற்பாடுகளை கடுமையாக எதிர் த்த மகிந்த அணியினர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக்கட்சிகள் சிலவற்றுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தனர்.

இவ்வாறான நிலையிலேயே எதிர்வரும் தேர்தலில் மகிந்த அணியினர் புதிய முன்னணியில் போட்டியிடத் தீர்மானித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மத்திய வங்கியின் ஆளுநருக்கு எதிராக வாசுதேவ வழக்கு?

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வழக்குத் தொடர தீர்மானித்துள்ளார்.

நாட்டின் அரசியல் அமைப்பின் அடிப்படையில் அர்ஜுன் மகேந்திரன் இலங்கையின் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்படவில்லை.

நாட்டின் அரசியல் அமைப்பிற்கு உட்பட்டுச் செயற்படுவதாக உறுதியளிக்கும் பதவிப் பிரமாணமொன்றை இதுவரையில் அர்ஜுன் மகேந்திரன் செய்யவில்லை.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் ஓர் சிங்கப்பூர் பிரஜையாவார்.

இலங்கை அரசியல் அமைப்பிற்கு அமைவாக அவர் பதவிப் பிரமாணம் செய்துகொளள வில்லை.

இந்த விடயம் குறித்து கோப ஆணைக்குழுவிலும் கேள்வி எழுப்பத் திட்டமிட்டுள்ளேன்.

எதிர்வரும் நாட்களில் அர்ஜுன் மகேந்திரனை பணி நீக்குமாறு கோரி வழக்குத் தொடர நடவடிக்கைஎடுக்கப்படும்.

அர்ஜுன்மகேந்திரன்உரிய முறையில் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளாமை குறித்த ஆதாரங்களை திரட்டி அதன் அடிப்படையில் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என வாசுதேவ நாணயக்கார வார இறுதி பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

## மக்களுக்குச் செவி சாய்ப்பதனை எதிர்க்கட்சி இழிவாக கருதுகிறது

### கபீர் ஹாஸிம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்களுக்கு செவி சாய்ப்பதனை எதிர்க்கட்சி இழிவாக கருதுகின்றது என ஐக்கிய் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாஸிம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டது மக்களுக்கு செவி சாய்க்கும் நோக்கிலாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நெகிழ்வுப் போக்குடன் மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து, ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வரவு செலவுத்திட்டத்தில் மக்களுக்கு நிவாரணங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

வரவு செலவுத்திட்ட குழு விவாதங்களின் போது மக்கள் பிரதிநிதிகள் முன்வைத்த கருத்துக்களுக்கு அமையவே வரவு செலவுத்திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

மக்களின் நலனை முதன்லைப்படுத்தியே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. எனினும் எதிர்க்கட்சியின் அழுத்தங்களுக்கு அடி பணிந்து விட்டதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்துவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்தார்.

சிங்கள வார இறுதி பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஹிருணிகாவின் செயற்பாடு குறித்து ஐ.தே.கட்சி விரைவில் ஆராயவுள்ளது



நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவின் செயற்பாடு தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து விடுமுறையின் பின்னர் ஆராயப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

கடந்த வாரத்தில் தெமட்டகொடையில் இளைஞர் ஒருவரை மெய்ப்பாதுகாவலர்கள் கடத்திய குற்றச்சாட்டு தொடர்பில் ஹிருணிகா மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்த கடத்தல் ஹிருணிகாவின் வாகனத்திலேயே இடம்பெற்றுள்ளது.

இந்தநிலையில் கட்சி இனனும் இந்த விடயம் தொடர்பில் கூடி ஆராயவில்லை என்று கட்சியின் செயலாளர் கபீர் ஹாஸிம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விசாரணைகள் தொடர்வதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

## வாகன விபத்தில் 4 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)


கொழும்பு கண்டி பிரதான வீதியின் நெலும்தெனிய பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்து தொடர்பில் டிப்பர் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

நெலும்தெனிய பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியகட்சருமான ருவன் குணசேகர கூறினார்

உயிரிழந்த நால்வருள் இரண்டு பெண்களும் அடங்குகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

மெல்போர்ன் டெஸ்ட்

# அவுஸ்திரேலியாவின் கருணையற்ற ஆட்டத்தால் பரிதாப நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி



சரியும் ஹோல்டரின் விக்கெட்

ஆஸியின் முன்னணி வீரர்கள் 4 பேர் சதம் கண்ட பொக்சிங் டே டெஸ்ட் போட்டியில், மே.தீவுகள் 6 விக்கெட்டுக்களை 91 ஓட்டங்களுக்கு பறிகொடுத்து மிகவும் பரிதாப நிலையில் உள்ளது.

அவுஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் மெல்போரனில் நடைபெற்று வருகிறது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மே.தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஜோ பேர்ன்ஸ் (128), கவாஜா (144), அணித் தலைவர் ஸ்மித் (134*) மற்றும் அடம் வோஜஸ் (106*) ஆகியோரின் அபார சதங்களின் உதவியுடன் 3 விக்கெட்டுக்களை இழந்து 551 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அதன்பின் முதல் இன்னிங்சை விளையாடிய மேற்கிந்தியத் தீவுகளின் அனுபவம் குறைந்த வீரர்கள் அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

தொடக்க வீரர்களாக களம் இறங்கிய பிராத்வைட் 17,சந்திரிகா 25, அனுபவ வீரர் சாமுவேல்ஸ் டக் அவுட் என ஆட்டமிழந்து ஏமாற்றம அளித்தனர். இதனால் மேற்கிந்தியத் தீவுகள் நிலைகுலைந்தது.



2 பந்துகளில் 2 விக்கெட்டுக்களை கொய்த மகிழ்ச்சியில் சிடில்

இதன்பின்னரும் சோகநிலைமை விட்டபாடின்றி தொடர்ந்தது. இதனால் அடுத்து வந்த பிளாக்வூட் 28, விக்கெட் காப்பாளர் ராம்டீன், அணித் தலைவர் ஹோல்டர் டக்அவுட் என வெளியேறினார்கள்.

இதனால்மே.தீவுகள் அணிநேற்றைய 2ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 91 ஓட்டங்களை எடுப்பதற்குள் 6 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்து வருகிறது.

# தமிழ் மக்கள் பேரவை...

இனமும் அவ்வின அடிமட்ட மக்களை அத்திபாரமாக வைத்தே தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொது நூலகத்தில் காலை ஒன்பது மணியளவில் நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவையின் இரண்டாம் அமர்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்கள் பேரவை தொடங்கிய நாள் முதல் சில விசித்திரமான விளைவுகளையும் விமர்சனங்களையும் நான் பார்த்துக் கவனித்து வருகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான ஒரு கட்சி உதயம் என்றது ஒரு செய்தி. விக்னேஸ்வரன் தலைமையில் ஒரு மாற்றுக் கட்சி என்றது இன்னொரு செய்தி. தேர்தலில் தோற்றவர்களுடன் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட்டு எனறது மற்றுமொரு செய்தி.

உங்கள்கட்சியை நாங்கள்ஆதரிபபோம் என்று பல மின்னஞ்சல்கள் வடக்கிலும் கிழக்கிலும் இருந்து வந்து கொண்டிருக்கின்றன. இவை அனைத்துமே பிழையான அடிப்படையில் வெளியிடப்பட்ட செய்திகளும் கருத்துக்களும் என்று முதற்கண் கூற விரும்புகின்றேன்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் சம்பந்தன் அவர்களை நான் கொழும்பில் சந்தித்தேன். பல விடயங்களைப் பற்றிக் கருத்துப் பரிமாறிக் கொண்டோம். அப்போது எமது பேரவையின் உண்மை நிலையை, அந்தஸ்தை, குறிக்கோளை, தூரநோக்குகளை அவருக்குத் தெளிவுபடுத்தினேன்.

அப்போது அவர் கூறினார் மக்கள் இயக்கமாக ஒரு இயக்கம் பரிணமிப்பதை நாங் கள் வரவேற்க வேண்டும். மக்கள் மட்டத்தில் இருந்து சகலரதும் கருத்துக்களும் கரிசனைகளும் வெளியிடப்பட வழியமைத்துக் கொடுக்கப்படுமானால் அதுவே ஜனநாயகம்" என்றார். வேறு பல விடயங்களையும் அவர் அப்போது குறிப்பிட்டார். அவை பற்றியும் பேசிக் கொண்டோம்.

ஆனால்அவரின் இந்தக் கருத்து யாவராலும் மனதிற்கு எடுக்கப்பட வேண்டும். மக்களின் கருத்துக்களை அறியும் ஒரு நடவடிக்கையாகவும், மக்களிடம் இருந்து பெறும் கருத்துக்களை ஒழுங்குபடுத்தி வெளியிடும் நிறுவனமாகவும், மக்கள் நலம் காக்க வேண்டிய மக்கட் பிரதிநிதிகளுக்கு உறுதுணையாக இருப்பதற்காகவும், எமது உரிமைகளை வென்றெடுக்க தமிழ் மக்களை ஒன்று சேர்க்கும் ஒரு இயக்கமாகவுமே தமிழ் மக்கள் பேரவை உருவெடுத்துள்ளது. எல்லா மட்டத்தில் இருந்தும் எல்லோரையும் ஒருங்கிணைத்து முன் செல்வதே பேரவையின் குறிக்கோள். இக்குறிக்கோளானது 2013ஆம் ஆண்டின் எமது மாகாணசபைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகளுக்கு இசைவானதாகவே இருக்கின்றது.

சிறுவன் தானே, சிற்றூழியன் தானே, தேர்தலில் தோற்றவர் தானே என்றெல்லாம் நாங்கள் எமது மக்களின் மாண்மை மறந்து அநாகரிகமாகப் பேச விழைவது இனியேனும் நிற்பாட்டப்பட வேண்டும். ஒருவர் தேர்தலில் ஒரு முறை தோற்று விட்டால் மக்கள் அவரை என்றென்றும் புறக்கணித்து விடுவாரகள் என்று அர்த்தமில்லை. அது மட்டுமல்ல. ஒரு மக்கள் இயக்கத்தில் மாற்றுக் கருத்துக்கள்தான் முக்கியம். எல்லாவிதமான கருத்துக்களும் ஆராயப்பட வேண்டும். நாம் வென்று விட்டோம் எனவே எமது கருத்துத்தான் சரி என்று நாம் எண்ணுவது மடமை. ஆகவே கருத்துக்களுக்கு முதலிடம் கொடுப்பதே எமது கடப்பாடாகும் என்று கூறி வைக்கின்றேன்.

எமது மக்கள் இயக்கம் கருத்துக் கணிப்பில்தான் ஈடுபட முனைந்துள்ளது. தனி மனிதர்களின் தலைமையை நாங்கள்குறைகூறவில்லை. ஆனால் வருங்காலத் தமிழ் பேசும் மக்களின் வாழ்வு தனி மனித விருப்பு, வெறுப்பு, அறிவு, ஆற்றாமை என்பவற்றில் மட்டுந் தங்கியிருப்பது சரியா என்ற கேள்வியை நாம் முன்னெடுக்கின்றோம். அது மட்டுமல்ல. இது வரை காலமும் தனி மனிதர்களைத் தமது வலைகளுள் விழச் செய்யும் சதிகளில் அரசாங்கங்கள் வெற்றியைக் கண்டு வந்துளளன. ஆனால் தனி மனிதரகளுக்குப் பின்னால் மக்களின் ஆளணி திரண்டு நிற்கின்றது என்று கண்டால், அப்பேர்ப்பட்ட ஆளணியினரும் அத் தனி மனிதர்கள் போல் சகலதையும் சிந்தித்து ஆராய்ந்து சிறந்த முடிவுகளுக்கு வந்துள்ளார்கள் என்று கண்டால், அரசாங்கங்கள் தனிமனிதப் பேரங்களில் ஈடுபடாது இனரீதியான, பாதிக்கப்பட்ட மக்கள் மன ரீதியான தொடர்பாடல்களில் ஈடுபடவேண்டி வரும்.

அந்த விதத்தில் பார்க்கும் போது எமது தமிழ் மக்கள் பேரவை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எமது கட்சிகளுக்கு முக்கியமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு சாதகமான, சகாவான, சார்பான சபையாகவே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு தான் அது கடமையாற்றும். கீழ் மட்டத தமிழ்மக்களைக்கட்சித்தலைமைத்துவங்களுடன் இணைத்து திடமான ஒரு அரசியல் பலத்தை வெளிப்படுத்த இந்த அப்பியாசம் வழி வகுக்கும் என்பது எனது எதிர் பார்ப்பு.

இப்பொழுதேதமிழர்கள்யாவரும சேரப் பார்க்கின்றார்கள் என்ற ஒரு பீதி தென்னிலங்கையில் உருவாகி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. அதற்கு இடமளிக்கக் கூடாது என்ற கருத்தும் அங்கு விரவி வருகின்றது. இதில் ஒரு விடயத்தை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எந்தக் கட்சியாக இருந்தாலும் சிங்கள மக்களிடையே தமிழர்கள் சம்பந்தமாகச் சில பொதுக் கருத்துக்கள் இருந்து வருவதை நாங்கள் உய்த்துணர வேண்டும். தமிழர்களைத் தழைக்க விட்டால் எமக்கு ஆபத்து என்ற ஒரு அடிப்படைக் கருத்து அங்கு சென்ற நூற்றாண்டிலிருந்து நிலவுகின்றது. ஆகவே தமிழர்களுள் சிலரை நாங்கள் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு அவர்கள் மூலமாகத் தமிழ் மக்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற ஒரு எண்ணம் பெரிய கட்சிகளின் தலைமைப் பீடங்களிடையே பொதுவாக இருந்து வருகின்றது. தமிழ் மக்களை எமக்குச் சார்பாகப் பாவிக்க வேண்டும். ஆனால் எழும்ப விடக்கூடாது என்பது அவர்கள் குறிக்கோள். ஆகவே தமிழ் மக்கள் மட்டத்தில் ஒரு இணைத் தலைமைத்துவத்துடன் பரந்து பட்ட ஒரு மக்கள் இயக்கம் உருவாகின்றது என்றால் அது தெற்கில் உள்ள பலருக்கு வயிற்றைக் கலக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் எமது தமிழ் மக்க்ள் சிலரிடையே அப்பேர்ப்பட்ட ஒரு எதிர்மறையான கருத்து நிலவுவதுதான் மனவருத்தத்தைத் தருகின்றது.

மூன்று முக்கிய விடயங்களை நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். முதலாவது விடுதலைக் காகப் போராடும் எந்த ஒரு இனமும் அவ்வின அடிமட்ட மக்களை அத்திபாரமாக வைத்தே தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தனியார்களும், தரகர்களும் தகுந்த ஒரு தீர்வைப் பெற்றுத் தரமாட்டார்கள். அந்த அடிப்படையில் மக்களை மையமாகக்கொண்டு, எமது சாதாரண மட்ட மக்களையும் படித்த மக்களையும் நாம் ஒன்றிணைத்து மக்கள் இயக்கமாக இயங்குவது எமது அரசியல் தலைவர்கள் எம் சார்பில் திடமான ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க நாம் அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் ஒரு நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டும்.

இரணடாவது அரசியல்சிந்தனைகள் வேறு; நடைமுறை அரசியல் வேறு. இது வரை காலமும் எமது மக்கள் நடைமுறை அரசியல் என்ற சகதிக்குட்பட்டுத்தான் நின்றுழந்து வந்துள்ளார்கள். அந்தக் கட்சியா, இந்தக் கட்சியா, அவரா இவரா என்பதுதான் எமது கரிசனையாக இருந்தது.

ஆனால் தெற்கில் கட்சி எதுவாக இருந்தாலும் தமிழர்களுக்கு எதிரான அவர்களின் அடிப்படை எண்ணங்கள் பொதுவானதாகவே இருந்து வந்துள்ளன. இப்பொழுது கூடப் பாருங்கள். ஒருவர் தமிழர் சார்பில் கதைத்தால் மற்றவர் அதற்கு எதிராகக் கதைக்கின்றார். கடைசியில் எமக்குத் தருவதாகக் கூறி எதையுந் தந்தபாடில்லை. ஆகவே "நீ தருவதாகக் கூறு! நான் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன். பின்னர் "நான் என்ன செய்ய? அவர்கள் எதிர்க்கின்றார்கள்" என்று ஒன்றையும் கொடுக்காமல் விடுவோம்" என்ற முறையிலேயே காரியங்கள் நடந்து கொண்டு வருகின்றன.

அது மட்டுமல்ல. எமது தமிழ் மக்கள் தலைவர்கள் எவ்வளவு தான் அறிவில், ஆற்றலில் சிறந்தவர்களாக இருந்தாலும் புகழ்ச்சிக்கும் மாயமாலங்களுக்கும் இலேசில் அடிமைப்படுவர்களாகக் காணபபட்டு வந்துள்ளார்கள் 1930ஆம்ஆண்டுகளில் சிங்களவர மட்டும் மந்திரி சபையை (Pan Sinhala Cabinet) வகுக்க கருத்துக் கூறியது ஒரு தமிழ்க் கணிதப் பேராசிரியரே என்று கூறுவார்கள். காக்காயை வாய் திறந்து பாடும் என்று கூறும் நரி போல,"நீங்கள்தான் மிக மிகக் கெட்டிக்காரர். எமக்கு இதைச் சொல்லித்தாரும்" என்று அப்போதைய நரிகள் கோரியதும் எமது தமிழ்க் காக்கை வடையைத் தவற விட்டுவிட்டது. இது தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. ஆகவே ஒரு மக்கள் அணி பின்னால் இருந்து நுட்பமாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றது என்றவுடன் காக்காய்கள் வடையைக் கீழே விழுந்து விடாது கெட்டியாகப் பிடித்துக் கொள்வன என்பது எமது எதிர் பார்ப்பு.

மூன்றாவது கட்சிகளுக்கு அப்பால் செல்ல வேண்டிய காலம் தற்போது உதித்துள்ளது. கட்சி வேண்டாம் என்று நான் கூறவில்லை. கட்சிகளின் நிர்வாகம், ஒழுங்கமைப்பு, ஒழுக்கம், நோக்குகள் யாவையும் வெளிப்படைத் தன்மையுடனும் நிபுணத்துவச் செறிவுடனும் செயல்படுத்தப்பட வேண்டும். ஒருவேளை கட்சிகளினால் இதனைச் செய்ய முடியாதிருநதாலும் அவற்றிற்குப் பக்கபலமாக நின்று பலதையும் அடியெடுத்துக் கொடுக்கும் வண்ணம் இந்தப் பேரவை செயற்பட இருக்கின்றது.

உதாரணத்திற்கு ஒவ்வொரு மாவட்டததிலும்எத்தனை இராணுவ முகாம்கள் இருக்கின்றன, எங்கெங்கே இருக்கின்றன, கிட்டத்தட்ட எத்தனை போர் வீரர்கள் அங்கு இருக்கின்றார்கள் என்ற தகவலை ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதி கேட்கும்போது பதிலிறுக்க வேண்டியிருந்தால் எமது பேரவை அவற்றுக்கான தரவுகளைச் சேகரித்துத் தரும் என்று நம்புகின்றேன்.

எனவே தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களின் கட்சிகளுக்கு எதிரானதலல. தமிழ்மக்கள்நலன்களுக்கு எதிரானதல்ல. தமது தனித்துவத்தை மக்க்ள் மீது திணிக்க எத்தனிக்கும் ஒரு இயக்கம் அல்ல. மாறாக மக்கள் நலம் நாடும் ஒரு மக்கள் இயக்கம் அது. இதன் த்லைமைத்துவம் தனி மனிதர்களின் செல்வாக்கில் கட்டிஎழுப்பபப்பட்டதன்று. மக்கள் மனமறிந்த, மக்களுடன் மக்களாக வாழ்ந்து வருவோரின் தலைமைத்துவத்தைக் கொண்டது. இதில் விக்னேஸ்வரன் பங்கு அனுசரணை வழங்குவதே. இதை வைத்துத் தாவிப் பிடிக்கப் பார்க்கின்றான் விக்னேஸ்வரன் என்பதெல்லாம் தாவிப் பிடித்துப் பழகிப்போன தப்பான அபிப்பிராயம் கொண்டவர்களின் தாறுமாறான தவறான கருத்துக்கள்.

எமது பேரவை இன்று தொடக்கம் தனது காரியங்களில் முழு மூச்சுடன் இயங்கத் தொடங்குகின்றது. அதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் சகல மட்டத் தமிழ்ச் சகோதர சகோதரிகளும் முக்கியமாக எமது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கும் சகலரும் அதற்கு வழங்க வேண்டும் என்றார் முதலமைச்சர். (செ-4)

# வாழ்வாதார உதவி வழங்கல் நிகழ்வு

கோப்பாய் வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றத்தின் கற் றல் மற்றும் வாழ்வாதார உதவி வழங்கல் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் ம.பிர தீபன் தலைமையில் நடைபெற வுள்ள இந்நிக ழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வாழ் வின் எழுச்சி அபிவிருத்தித் திணை க்கள மாவட்டப் பணிப்பாளர் க.மகே ஸவரன், யாழ்ப்பாணம் வலயக் கல் விப் பணிப்பாளர் ந. தெய்வேந்தி ரராஜா ஆகியோர் கலந்து கொள்வ துடன் கெளரவ விருந்தினர்களாக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கு.மகேந்திரன், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சற்குணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

**டயானா பிளாஸ்டிக் மீள்சுழற்சி**

பழைய பொலித்தீன் மற்றும் பழைய பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்.

TP: 021 222 8680, 077 592 5088

(சி-3042)

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது
நான் என்ன செய்வது? என்று எண்ணுகின்றீர்களா...

சனி - ஞாயிறு தினங்களில் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை
திங்கள் - வெள்ளி முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை (2714)

**எம்முடன் பேசுங்கள்**

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மதசார்பற்றது ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored By Enlightnment Circle, UK

## யாழ்ப்பாணம் மாநகர சபை 2016ஆம் ஆண்டிற்கான ஆதன வரி

யாழ்ப்பாணம் மாநகரசபை (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய பின்வருமாறு முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

1.அடுத்துத் திருத்தியபடியான முன்கூறிய கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் நியதிப்படி 2013 ஆம் ஆண்டுக்கான பெறுமான மதிப்பீட்டை அல்லது சோலைவரி மதிப்பீட்டைக் குறிப்பிட்ட விடயங்களில் அவசிய மெனக் கருதக்கூடியதான அத்தகைய திருத்தங்களுடன் 2016 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடாக அல்லது சோலைவரி மதிப்பீடாக ஏற்றுக் கொள்ளவும்.

2. அடுத்துத் திருத்தியபடியான முன்கூறிய கட்டளைச் சட்டத்தின் 230 ஆம் பிரிவின் நியதிப்படி யாழ்ப்பாண மாநகரசபை பரிபாலன எல்லைக்குட்படும் சகல வீடுகளும் ஒவ்வொரு விபரத்தைக் கொண்ட கட்டடங்கள், சகல காணிகள் குடிமனைகள் எதனதும் வருடாந்தப் பெறுமதியின் மீது 2016 ஆம் வருடத்திற்கும் 6% (ஆறு வீதம்) வரிகளை உண்டு பண்ணவும் விதிக்கவும்.

3.(அ) மேற்கூறப்பட்ட வீத வரிப்பணங்கள் யாவும் நான்கு கந்தாயத் தவணைகளில் 2016 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்டெம்பர் 30, டிசெம்பர் 31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) 2016 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வரிப்பணங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% (பத்துவீதம்) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வருமதியாகவுள்ள கந்தாய் வரிப்பணத்தை அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக செலுத்தப்பட்டால் 5% (ஐந்து வீதம்) கழிவு அனுமதிக்கப்படும்.

4.மேற்கூறப்பட்ட பந்தி 3 (அ), (ஆ) இன்படி சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% (பதினைந்துவீதம்) திலுமான மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% (இருபது வீதம்) திலுமான விறாந்துச் செலவு அறவிடப்படும்.

குறிப்பு: 2016 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி அறிவித்தல்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கிடைக்காதவர்கள் மாநகரசபை ஆதனவரிப்பகுதியில் நேரடியாக வந்து தமது ஆதன விபரங்களைத் தெரிவித்து 2016 ஆம் ஆண்டிற்கான ஆதன வரிகளைச் செலுத்த முடியும் என்பதுடன் 31.01.2016 ஆம் திகதிக்குள் செலுத்து வதன் மூலம் 10% கழிவினையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

பொ.வாகீசன்
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-3143)

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா:68 செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L/மலேசியா
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: B/5325

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 55செவ் 7 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:HNDA/ஆசிரியர்
தொ.இ: B/5326

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 19
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/5327

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 7செவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்
தொ.இ: B/5328

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 7 1/4செவ் 12 இல்
தகைமை/தொழில்:BSC/அரசதொழில்
தொ.இ: G/5339

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 22செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/Lசுவிஸ் NOTPR
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5344

பிறப்பு: 1945 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 52செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5345

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 28
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5346

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## இராசி பலன்

28.12.2015
(மார்கழி 12, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
திருதியை பிற்பகல் 4.48 மணிவரை
பூசம் பிற்பகல் 2.02 மணிவரை
இராகுகாலம் 7.58-9.28 மணிவரை
சுபநேரம் 12.28-1.58 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் மூலம், பூராடம் | | சந் |
| | | | |
| சூரி புத | சனி சுக் | | குரு ராகு செவ் |

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள்.

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** தனவரவு திருப்திகரமாக அமையும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், புதிய நட்பால் பொருளாதார விருத்தியுண்டு.

**கடகம்** சாமர்த்தியமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்.

**சிம்மம்** தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்ளும் நாள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.

**தனுசு** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கல் களில் கவனம் தேவை, நீங்கள் பெயரளவில் மதித்த ஒருவர் அற் பத்தமாக நடந்து கொள்ளலாம்.


**மகரம்** சொந்தபந்தங்களின் வருகை யுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொ ன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும்.

**மீனம்** வியாபார விருத்தியுண்டு, புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தாழ்ந்த சுபா வமுண்டு

# தமிழ் மக்கள் பேரவைக்கு ஆதரவு வழங்கத் தயார்!

## இலங்கை தமிழரசுக் கட்சி அறிவிப்பு



**(யாழ்ப்பாணம்)**

**தமிழ் மக்கள் பேரவையின் தமிழர் நலன் சார்ந்த செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கத் தயாராக உள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் பாரா ளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, பேரவையின் ஜனநாயக செயற்பாடுகளுக்கு நாம் செவிசாய்க்க வேண்டும் எனவும் வலி யுறுத்தியுள்ளார்**

புத்தூர் பிரதேச சபையில் நேற்று முன்தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பினை அடுத்து, ஊடகவியலாளர்களினால் கேட்கப் பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவை தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு உதவியாக இருப்பார்கள் என்று நம்புகின்றோம். அரசியல் தீர்வை காண்பதற்கு




நாங்கள் உழைக்க வேண்டுமென மக்கள் பேரவை கூறியுள்ளது. இவ்வாறான ஜனநாயக செயற்பா டுகளுக்கு நாங்கள் செவிசாய்க்க வேண்டும்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு தொடர்ச்சியாக மக்கள் அங்கீகாரம் அளித்து வந்துள்ளார்கள். இம் முறை நடைபெற்ற பொது தேர்த லிலும் அமோகமான வாக்குகள் மூலம் தமிழ்த்தேசிய கூட்டமைப் புக்கே அங்கீகாரம் அளித்திருந்தார் கள். இப்பொழுது புதிய கூட்டணி தேர்தலில் வென்றுள்ளார்கள்.

இவர்கள் ஆட்சி அமைத்து இர ண்டு மூன்று மாதங்கள் முடிவ டையவில்லை. தமிழ்த்தேசிய கூட்ட மைப்பின் கொள்கை அடிப்படை யில் இரண்டு விடயங்களை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப் பிட்டுள்ளோம். ஒன்று இனப்பிரச்சி னைக்கு தீர்வு காணப்படுவது, இரண்டாவது மக்களுடைய நிலங் கள் மீள அவர்களிடம் வழங்கப்பட வேண்டும் என்பது.

குறிப்பாக போர்க்காலங்களில் இராணுவம் எமது மக்களின் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங் களை உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையிலும், பல கார ணங்களை கூறியும், பிடித்து வைத் துள்ளது, இராணுவம் பறித்த எமது மக்களின் பூர்வீக நிலங்கள் விடு விக்கப்பட வேண்டும் என்றும்,

நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படல் வேண்டும். பெண்களுக்கு உரிய பாதுகாப்புக்கள் வழங்கப்படல் போன்ற பல விடயங்கள் உட்பட பொருளாதார விடயங்களிலும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அக் கறை செலுத்தி போரினால் நலிவு ற்ற எமது தேசத்தில் வாழ்விழந்து இருக்கும் மக்களுக்கு விமோச னத்தை தேட வேண்டும் என்ற நோக கில் எமது தேர்தல் 'விஞ்ஞாபனத் தில் குறிப்பிட்டுள்ளோம்.

இதனை விட இளைஞர்களுக் கான வேலை வாய்ப்புக்களை அதி கரிக்கும் வகையில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிப்பு மற்றும் புலம் பெயர் மக்களிடமிருந்தான ஒரு திட் டங்களின் அடிப்படையில், வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க செய்து எங்கள் இளைஞர்களை பொருளா தார ரீதியில் பலமடைய செய்து புதியதொரு சமுதாயத்தை கட்டியெ ழுப்ப வேண்டும் என்பதற்காக மக் கள் அங்கீகாரத்துடன் தொடர்ச் சியாக வேலை செய்து வருகின் றோம்.

இந்த விடயங்கள் தொடர்பில் யார் எங்களுடன் பேச வேண்டு மானாலும் எங்களுடன் பேசலாம். உதவியாக இருக்க வேண்டும் என்றால் இருக்கலாம். நாங்களும் எங்களுடைய தேவைகளை அறி ந்து யார் யாருடன் பேச வேண் டுமோ அவர்களுடன் பேச நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

தமிழ் மக்களின் தீர்வு திட்டம் குறித்து ஏற்கனவே பேச்சு வார்த் தைகள் நடத்தி, ஒரு சில நடைபெ ற்று கொண்டிருக்கின்றன.

இதனை தமிழ் மக்கள் பேர வையும் குறிப்பிட்டால் அதனை நாங்கள் கவனத்தில் எடுப்போம் என மாவை சேனாதிராசா பதில ளித்தார். (இ-4)




**யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றம் இலங்கை வர்த்தக மன்றத்துடன் இணைந்து செயற்படுத்திவரும் இளம் முயற்சியாளர்களுக்கான சுழற்சி முறைக்கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...**

## மாகாணசபை உறுப்பினர்கள் வீதிகளை புனரமைப்பு செய்ய 6 மில்.நிதி ஒதுக்கீடு

**வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு**



வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சினால் வடமாகாணசபை உறுப்பினர்களுக்கு அவர்களு டைய பிரதேசங்களில் உள்ள வீதி களை புனரமைப்பு செய்வதற்கென ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தலா 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக் கடு செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனஸ் வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


வடமாகாண போக்குவரத்து அமைச்சின் புதிய திட்டமாக எதிர் வரும்2016 ஆம்ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினூடாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் உட்பட 38 உறுப்பினர்களுக்கும் தலா 6 மில்லியன் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியின் ஊடாக சகல உறுப் பினர்களும் தமது பகுதிக்கு தேவை யான, வீதி அபிவிருத்தி திணைக்க ளத்திற்கு உட்பட்ட வீதிகளை சீர் செய்துகொள்ளமுடியும் என்றும், இந்த ஒதுக்கீட்டிற்கான தங்களால் தெரிவு செய்து கொடுக்கப்படும் வீதிகள் அனைத்தும் வீதி அபி விருத்தி திணைக்களத்தினூடாக செய்து தரப்படும் என்றும் எனவே ஒருமாத கால எல்லைக்குள் தங்க ளது தெரிவினை வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு தெரியப்படுத்து வதன் மூலம் வெகு விரைவாக அடுத்த ஆண்டில் வேலைத்திட்டங் கள் ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் இந்த விசேட 6 மில் லியன் திட்டத்தின் மூலம் சகல மாகாண சபை உறுப்பினர்களும் தமது மாவட்ட மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமாக உள்ள வீதி களை சீர் செய்துகொள்ள உத வியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-9)




பாலர் கல்வி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஞானக் குழ ந்தை இல் லத்தின் கண் காட்சி நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...


யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவையாற்றும் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து நடத்திய அகக்கண்கள் தந்த ஆனந்த வெற்றிகள் அரங்கேற்றுக் கலை நிகழ்வுகள் அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினரும் உலகப் புகழ்பெற்ற மூத்த அறிவிப்பாளருமான பி.எச்.அப்துல் ஹமீத் அழைத்துவரப்படுவதையும் மங்கல விளக்கேற்றுவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.






யாழ்.அல்லைப்பிட்டி றோ.க.த.க. வித்தியாலயத்தின் ஒளி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலையின் முதல்வர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டார்.



வடமராட்சி புலோலி தெற்கு காந்தியூர் சனசமூக நிலைய முன்பள்ளியின் கலைவிழா நிகழ்வுகள் அண்மையில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்ற போது... (படம்: கரணவாய் செய்தியாளர்)



மகுடம் காலாண்டு சஞ்சிகையின் அறிமுக விழா பருத்தித்துறை ஞானாலயத்தில் அண்மையில் நடைபெற்ற போது...




வடமராட்சி கிழக்கு யாழ். ஆழியவளை சி.சி.த.க.பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு, ஒளி விழா, இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு என்பன அண்மையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. அதிபர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் ஸ்ரீ பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார். (படங்கள்: பொற்பதி செய்தியாளர்)

# வைரவ புளியங்குளம் குளக்கட்டு வீதியூடாக இரவு வேளைகளில் பயணிக்க முடியவில்லை

**பொதுமக்கள் விசனம்**

(குருமன்காடு)

வவுனியா வைரவ புளியங்குளம் குளக்கட்டு வீதி இரவில் பயணம் செய்ய முடியாத நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பணடாரிகுளம், தோணிக்கல், உக்குளாங்குளம், கூமாங்குளம் ஆகிய பல கிராமங்களுக்கு செல்லும் வீதியாக இக் குளக்கட்டு வீதி காணப்படுகின்றது. பல ஆண்டுகளாக இவ் வீதி திருத்தப்படாமல் இருந்தது. சில மாதங்களுக்கு முன் வீதியின் சில பகுதிகள் திருத்தப்பட்ட போதும் அண்மையில் பெய்த மழையினால் மீண்டும் குன்றும் குழியுமாக காணப்படுகின்றன. இதனால பொதுமக்கள் பயணத்தின் போது சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

வீதியிலுள்ள மின் கம்பங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதனால் மின விளக்குகள் இரவு வேளையில் எரிவதில்லை. இதனால் இரவில் இவ் வீதியால் செல்பவர்கள் விழுந்தெழும்பி செல்ல வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர்.

பல ஆண்டுகளாக மின் விளக்குகள், மின்கம்பங்கள் பழுதடைந்த நிலையிலே காணப்படுகின்றன. மாலை நேர வகுப்புக்களை முடித்து வீடு செல்லும் மாணவர்கள், நகர்ப்பகுதிகளில் தொழிலுக்கு சென்று வீடு திரும்புபவர்கள் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

அதுமட்டுமல்லாது மின்சாரம் ஒளி இல்லாத காரணத்தினால் சிலர் அவ்விடத்தில் மது அருந்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சார விளக்குகளை பொருத்தித் தருமாறு சம்பந்தபட்டவர்களிடம் பொதுமக்கள் கோரிய போதும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த வீதியின் நிலையைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)




# பொதுக்காணியில் அரச விடுதி அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு

## வேலி அமைக்கும் பணியும் நிறுத்தம்



(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி மாவட்டத்தல் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் அடங்கும் கணேசபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள பொதுக்காணி ஒன்றை அரச திணைக்களத்தின் விடுதி அமைப்பதற்குரிய ஆரம்ப கட்ட வேலை மேற்கொள்வதற்கு நேற்று முன்தினம் காலை சுற்று வேலிஅமைக்க முற்பட்டபோது அப்பகுதி பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து எதிர்ப்புத் தெரிவித்து வேலி அமைக்கும் வேலையை தடுத்து நிறுத்தினர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கணேசபுரம் கிராமம் உருவாகிய 1935 ஆம்ஆண்டு தொடக்கம் இக்காணி பொதுக் காணியாகவே காணப்பட்டது.

இக் காணியில் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கம், கமக்கார அமைப்பு, விளையாட்டுக்கழகம் என்பன தமது தேவையின் நிமித்தம் காலாகாலமாக பயன்படுத்தி வந்தன.

எனினும் பொது அமைப்புக்கள் பொது மக்கள் ஆகியோரின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்படாமல் அரச திணைக்களம் ஒன்றின் விடுதி அமைக்க இக் காணியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழு உறுப்பினருமான சி.சிறீதரனின் கவனத்திற்கு மக்கள கொண்டு சென்று தமது எதிர்ப்பை எடுத்துரைத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினா கரைச்சி பிரதேச செயலரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

இதற்குரிய ஆரம்ப கட்ட வேலைகளை நிறுத்துவதாகவும் நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து முடிவு எடுக்கப்படுமெனவும் கரைச்சி பிரதேச செயலாளர் கூறியதாக சிறீதரன் எம்.பி. மக்களிடம் தெரிவித்தார்.

கிளிநொச்சியைப் பொறுத்த மட்டில் நகரப் பகுதியில் அரச காணிகள் பலவற்றை இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதனால் நகரத் திட்டமிடல் வேலைகளை முன்னெடுக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கணேசபுரத்தில் மேற்படி காணியானது கிராமத்திற்கான பொதுத்தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் காணி என்பதும் இதேவேளை இக் காணிக்கு பொதுமக்களின் பங்களிப்புடன் மண் நிரவப்பட்டு இளைஞர்களின் விளையாட்டுத் தேவைக்கு பயன் படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-277)

# கிளி.வைத்தியசாலை வளாகத்தினுள் வாகனங்கள் இடையூறு ஏற்படும் வகையில் நிறுத்தப்படுகின்றன

**நோயாளர்கள் அவதி**

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வீதி விபத்துக்களினால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கை கூடுதலாக காணப்படுகின்ற நிலையில் வைத்தியசாலைக்கு வருகை தருவோரா வைத்தியசாலை வளாகத்தினுள் வாகனங்கள் ஆங்காங்கே தரித்து விடுவது நோயாளர்களுக்கு மிகவும் இடையூறாக காணப்படுகின்றது.

மேற்படி வைத்தியசாலைக்கு வருகை தரும் வாகனங்களை நிறுத்துவதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அதனைப் பொருட்படுத்தாது நோயாளர் காவு வண்டி செல்லும் வழிகளில் வாகனங்களை நிறுத்துவதால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பாதிக்கப்பட்ட நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அவசர சிகிச்சைக்கென நோயாளர் காவு வண்டிகள், வாகனங்கள் ஆகியவற்றில் நோயாளர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு வருமபோது இவ்வாறு தரித்து விடபபடும் வாகனங்களினால் சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு தாமதமடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே வைத்தியசாலை நிர்வாகத்தினர் இவ் விடயத்தில் கூடிய கவனம் எடுத்து வாகன தரிப்பிடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமென நோயாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-307)

# சீருடைத்துணிகள் தரம் குறைந்தனவாகவும் அளவுகளிலும் முறைகேடுகள் இடம்பெறுகின்றன

**பெற்றோர் விசனம்**

(முல்லாவி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகரப் பகுதியிலுள்ள பிரபல வியாபார புடைவை நிலையத்தில் மாணவர்களுக்கான சீருடைத்துணிவிநியோகத்தின் போது தரம் குறைந்த சீருடைத்துணி விநியோகிக்கப்படுவதுடன் அளவுகளிலும் முறைகேடுகள்இடம்பெறுவதாக மாணவர்களின்பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகரப் பகுதியிலுள்ள புடைவைவிற்பனைநிலையம் ஒன்று பாடசாலை மாணவர்களின் சீருடைத்துணிக்கான பண வவுச்சர்களுக்கு தரமற்ற சீருடைத்துணிகளை விநியோகிப்பதுடன் அளவுகளிலும் முறைகேடுகள் காணப்படுவதாகவும் இது தொடர்பில் கடை உரிமையாளருடன் பெற்றோர் வாக்குவாதத்திலும் ஈடுபட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேபோல் முல்லைத்தீவு - முள்ளியவளை நகரப் பகுதியிலும் இருபுடைவைவர்த்தக நிலையங்களில் பட்டசில்க்ரக சீருடைத்துணி மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

குறித்த சீருடைத்துணி மாணவர்களின் தொடர்ச்சியான பாவனைக்கு பயன்படுத்த முடியாதவை எனவும் பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேற்படி சீருடைத்துணியில் தரமற்ற விநியோகத்தின் காரணமாக மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கலாமெனவும் பெற்றோர் அச்சப்படுகின்றனர்.

எனவே துறை சார்ந்த கல்வி அதிகாரிகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்து புடைவை வர்த்தக நிலையங்கள் மீது பரிசோதனை மேற்கொள்ளுமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# மக்கள் செறிந்து வாழும் குடியிருப்பு பகுதிகளில் நடைபாதை வியாபாரத்தை அனுமதிக்க முடியாது

**கிராம அபிவிருத்திச் சங்கம் சுட்டிக்காட்டு**

வவுனியாவில் அண்மைக காலமாக நடைபாதை வியாபாரங்களால் அதிகளவான விபத்துக்கள் ஏற்பட்டு வரும் நிலையில் அவ் வியாபாரத்தை கட்டுப்படுத்தும் செயற்பாட்டை விடுத்து அதனை ஊக்கப்படுத்தும் நிலையில் அதிகாரிகள் சிலர் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வவுனியாவில் அங்காடி வியாபாரிகளுக்கு என நகர சபையினால் இடம் ஒதுக்கப்பட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், வீதியோரத்தில் பாதசாரிகள் பாதையில் வேறு பிரதேசத்தில் இருந்து வருகை தருபவர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக பாதசாரிகள் வீதியில் நடந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையினால் அதிகளவான விபத்துக்கள் ஏற்படுகின்றன.

ஆதலால் வவுனியா நகர சபை வீதியோர வியாபாரத்தை கட்டுப்படுத்தும் செயற்பாட்டை மேற்கொண்ட நிலையில் வீதியோர வியாபாரிகளுக்கு சார்பாகவும் அவர்களை வீதியோரத்தில் வியாபாரத்தை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் எனவும் சிலர் அழுத்தம் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் டெங்கு நோய் அபாயம் காணப்படும் வவுனியா பிரதேசத்தில், வீதியோரத்தில் செய்யப்படும் வியாபாரத்தினால் பொலித்தீன்கள் தேங்கி நுளம்பு பெருக்கம் ஏற்படும் வாய்ப்புள்ளமை மற்றும் மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பகுதியில் வீதியோர வியாபாரத்தை அனுமதிக்க முடியாது என கிராம அபிவிருத்திச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை வவுனியா வர்த்தகர் சங்கமும் வீதியோர வியாபாரத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (2-250)



ஆழிப்பேரலை இடரில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 5.05 மணிக்கு முள்ளியவளையில் அமைந்துள்ள 6 ஆம் கட்டை சுனாமி நினைவாலயத்தில் இடம்பெற்ற போது...

(படங்கள்:-மாமூலை செய்தியாளர்)

# தொடரும் சீரற்ற காலநிலையால் நெற்பயிர்களில் நோய்த்தாக்கம்

## கிருமி நாசினிகளை விசிறியும் கட்டுப்படுத்த முடியவில்லை–விவசாயிகள் ஆதங்கம்



நாட்டில் அண்மைக்காலமாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக உருத்திரபுரம், கிளிநொச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்விடத்தில் வசிக்கின்ற விவசாயிகள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். அண்மை நாட்களாக தொடர்ந்து பெய்த கன மழை காரணமாக நெற்பயிர்கள் அழிந்து நாசமாகியுள்ளன.

இதிலிருந்து தப்பிய நெற்பயிர்கள் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் கடும் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளன.

தற்போது நெற்பயிர்கள் எரிந்து கருகிப் போதல், கதிர்வராமல் இருத்தல் போன்ற நோய்த் தாக்கத்தினால் பீடிக்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கட்டுப்படுத்த விவசாயிகள் கிருமி நாசினிகளை விசிறியும் எதுவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவி வரும் மப்பும் மந்தாரமுமான காலநிலை தொடர்ந்தும் நீடிக்குமாகில் பயிரழிவை எதிர்கொள்ள வேண்டிவரும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பெய்த கடும் மழையால் பல விவசாயிகளின் கத்தரி, மிளகாய், வெண்டிக்காய், பசன்புரூட், முந்திரிகைத் தோட்டங்கள் என்பன முற்றாக அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (2-298)

# காணிப் பதிவு இரு தினங்கள்

(தண்ணீரூற்று)

முல்லைத்தீவு, தண்ணீரூற்று, குமரபுரம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வசிக்கின்ற மக்களுக்கான காணிப்பதிவு இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை குமாரபுரம் பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காணிகள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தினால் முன்னர் வழங்கப்பட்ட பதிவு இலக்கங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-292)




## கயட்டையடிப்பகுதியில்

# சுனாமி நினைவாலயம் அமைக்கப்பட வேண்டும்

## சாந்தி எம்.பி.வலியுறுத்து

(மாமூலை)

யுத்தம் முடிவடைந்த பின்னர் ஆழிப் பேரலை நினைவேந்தல் நிகழ்வானது இம்முறை முதல் தடவையாக இவ் விடத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுவது சிறப்பான விடயமாகும் என பாராளுமன்ற உறுப் பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா தெரி வித்துள்ளார்.

முள்ளியவளையில் அமைந்துள்ள 6 ஆம் கட்டை கயட்டையடி சுனாமி நினைவாலயத்தில் நடைபெற்ற ஆழிப்பேரலையில் காவு கொல்லப்பட்ட உறவுகளுக்கான நினைவேந்தல் நிகழ்விற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில், இந் நிகழ்வானது சுனாமிப் பேரலையில் காவுகொல்லப்பட்ட உறவுகளை புதைத்த அதே இடத்தில் கொண்டாடப்படுவது சிறப்பான விடயமாகும்.யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்நிகழ்வானது இம்முறையே முதல் தடவையாக இவ்விடத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

சுனாமியால் உயிரிழந்த உறவுகளுக்கு நினைவுத்தூபியை இவ்விடத்தில் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் இதேபோன்று எமது மாவீரர்களை விதைத்த துயிலும் இல்லங்களிலும் அவர்களுக்கான நினைவுகூரல் கொண்டாடப்பட வேண்டுமெனவும் கூறினார்.

இதேவேளை அங்கு உரையாற்றிய வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில், முள்ளியவளை 6 ஆம் கட்டையடியில் சுனாமி நினைவாலயம் அமைக்கப்பட வேண்டும்.

இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது கைகூடவில்லை. தற்போது இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் இராணுவத்தினரின் கைவசமுள்ள மக்களுக்கான காணிகள் மீளவும் மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (2-301)

## பேரிடர் நினைவு நாளை

# தேசிய பாதுகாப்பு தினமாக கடைப்பிடிப்பது பொருத்தமற்றது

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு



பேரிடர் நினைவுநாள் படைத்தரப்புக்குரிய தினம் அல்ல. இதனை இராணுவத்துக்குரிய தினம்போலக் கொண்டாடுவது தவறானது என்று வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண இயற்கைப் பேரிடர் தணிப் புத்தின நிகழ்ச்சி நேற்று முன்தினம் கரைச்சிப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, வடக்கு மாகாண இயற்கைப் பேரிடர் தணிப் புத்தினம் பிரகடனப்பட்டிருப்பதன் நோக்கம், எதிர்காலச் செயற்பாடுகள் பற்றி உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் தனது உரையில்,

கடற்கோள் தாக்கிய நினைவுநாளை அரசாங்கம் தேசிய பாதுகாப்புத் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. பேரிடர் நினைவுநாளை தேசிய பாதுகாப்புத் தினம் என்ற பெயரில் கடைப்பிடிப்பது பொருத்தமற்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பாதுகாப்பு என்றால் உடன் நினைவுக்கு வருவது படைத்தரப்புத்தான். பேரிடர் நினைவு நாள் படைத்தரப்புக்குரிய தினம் அல்ல. ஆனால், படையினரும் தங்களுக்குரிய ஒரு தினமாகத்தான் இதனைக் கருதுகிறார்கள்.

வடக்கில் நடைபெறும் கடற்கோள் நினைவஞ்சலிகளில் படையினர் கலந்துகொள்கிறார்கள். இதில் தவறு இல்லை. ஆனால், பல இடங்களில் இராணுவம் தேசியக் கொடியேற்றி, தேசியகீதம் இசைத்து, நினைவுச் சுடரேற்றிய பின்பே நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன.

முல்லைத்தீவில் நான் கலந்துகொண்ட கடற்கோள் நினைவஞ்சலியில் படையினர் இவ்வாறே நடந்து கொண்டார்கள். கொடியேற்றும் இடத்துக்கு வருமாறு எங்களை அழைத்தபோது நான் உட்பட அங்கு வந்திருந்த வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் எவரும் அங்கு போகவில்லை. பேரிடர் நினைவு நாளை, தேசிய பாதுகாப்புத்தினம் என்று பெயரசூட்டி, இராணுவத்துக்குரிய தினம்போலக் கொண்டாடுவது தவறானது. இது ஏற்புடையதல்ல.

ஒரு தினத்தைக் கொண்டாடுவதன் நோக்கம், அத்தினத்தின் கருப்பொருள் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைச் செயற்படத் தூண்டுவது தான். ஆனால், தேசிய பாதுகாப்புத் தினம் என்ற பெயரில் பேரிடர் நினைவு நாளைக் கடைப் பிடிக்கும்போது அதன் உண்மையான நோக்கையும் இலக்கையும் மக்களிடம் எடுத்துச்சென்று சேர்க்க முடியாது. இது தொடர்பாக, சில வருடங்களுக்கு முன்பே உரிய அரச அதிகாரிகளிடம் நான் எடுத்துக் கூறியும இந்தப் பெயர் மயக்கத்தை, பொருத்தமற்ற சொற பிரயோகத்தை அவர் களால் இன்னமும் சரி செய்ய முடியாமலே உள்ளது என்றார். (2)

# அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் கடந்த 23 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கரைது றைப்பற்று உதவி பிரதேச செயலாளர் செல்வி மரியாம்பிள்ளை சர்மினி மற்றும் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதன்போது புதிய நிர்வாக சபை தெரிவு சுமுகமான முறையில் இடம்பெற்றது. இதன் போது தலைவராக து.ரவிகரன், செயலாளராக பெ.நந்தகுமாரன், பொருளாளராக திருமதி புஷ்பானந்தன் இமெக்குலேற்றா. உப தலைவராக எஸ்.இராஜேஸ்வரன் உப செயலாளராக சுப்பிரமணியம் இராஜலட்சுமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் பிரதிநித்துவப்படுத்தும் கிராமங்களைத் தவிர்த்து கரைதுறைப்பற்றின் ஏனைய கிராமங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் 12 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் முள்ளிவாய்க்கால் கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தி எஸ்.பரராஜசிங்கம, மாத்தளன், பொக்கணை ஆகிய கிராமங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி எஸ்.தர்மினி கேப்பாப்பிலவை பிரதிநிதித்துவப்படுத்தி க. சந்திரலீலா, அளம்பில், நாயாறு ஆகிய கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தி டேவிற் தேவராஜா, முள்ளியவளை கிழக்கு, வடக்கு, மேற்கை பிரதிநிதித்துவப்படுத்தி வே. அரிகுகசிவம், முள்ளியவளை தெற்கு, மத்தி ஆகிய கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தி திருமதி அசோகாம்பிகை, தண்ணிமுறிப்பு பதறிகுடா ஆகிய கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தி திருமதி மனோகரி, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தி நடன சபாபதி, தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான்குளம் ஆகிய கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஜென்சி, ஷ்றாப்பளை கிராமத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சிவகலா, குமாரபுரம், கணுக்கேணி ஆகிய கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தி த.அமலன், நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் ஆகிய கிராமங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி றபீனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மாதந்தோறும் நிர்வாக சபை கூட்டம் கூட்டப்படும் எனவும் பொதுக்கூட்டமானது இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை கூட்டப்படும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சமாசச் செயலாளர் பெ.நந்தகுமாரன் தெரிவித்தார். (2-302)

# சிறுவர் பூங்கா வளாகம் துப்புரவு செய்யாமையால் விச ஜந்துக்களின் நடமாட்டம்





கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா துப்புரவு பணிகள் செய்யப்படாமல் கவ னிப்பாரற்று காணப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

சிறுவர் பூங்கா வளாகம் துப்புரவு பணி எதுவும் நடைபெறாமல் இருப்பதால் புற்கள் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் விளையாடுவதற்காக வருகின்ற சிறார்கள் விச ஜந்துக்களின் நடமாட்டத்தால் விளையாடுவதற்கு அச்சப்படுவதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர். இப் பூங்காவிற்கு பளை, தருமபுரம் ஆகிய தூர பிரதேசங்களில் இருந்து பிள்ளைகளை பெற்றோர் அழைத்து வருவதாகவும் தற்போது இந்நிலை குறைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. இப் பூங்கா அமெரிக்காவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டதாகும். இதனை கரைச்சி பிரதேச சபையே பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கிளிநொச்சியில் அமைந்துள்ள ஒரேயொரு சிறுவர் பூங்கா என்பதனால் சீராக பராமரிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-300)










2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலையின் கோரத் தாண்டவத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் நேற்று முன் தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டசெயலக அனர்த்த முகாமைத்துவ அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் ச.ரவி த்லைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் மதகுருமார், யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சுனாமியினால் உயிர் நீத்தவர்களை நினைவுகூரும் முகமாக தேசியகொடியேற்றப் பட்டு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் யாழ். மாவட்ட அனர்த்த பாதுகாப்பு தொடர்பில் முன்னாயத்தம் மற்றும் பதிலுறுத்தலுக்கான மக்கள் தொடர்புகளுக்கான இலக்கங்களும் யாழ்.மாவட்டஅரச அதிபரினால் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது.
(படங்கள்:-பொ.சோபிகா)






வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சிப் பிரிவினரால் அம்பன் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் நடத்தப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டு இவ் உபகரணங்களை வழங்கி வைத்தார். (படங்கள்-தும்பளைச் செய்தியாளர்)







யாழ்.கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு அதிபர் ப.செல்வவிநாயகம் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற போது...





தாயக உறவுகளைத் தலை நிமிரச் செய்வோம் என்ற செயற்றிட்டத்தின் கீழ் சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த திருமதி. சந்திரமாலாவின் நிதியுதவியுடன் வட்டுக்கோட்டை துணவி அ.மி.த.க பாடசாலையில் உள்ள 30 மாணவர்களுக்கு காலணிகள் அண்மையில் வழங்கப்பட்டன. இந் நிகழ்விற்கு வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன் கலந்து கொண்டு காலணிகளை வழங்கி வைத்தார்.



யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக தியான நிலையம் நெல்லியடிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்தியாவிலிருந்து வருகை தந்த பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீக பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் 50 வருட இராஜயோகியான தெய்வீக சகோதரர் சூரஜி தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றது.
(படம்-கரணவாய் செய்தியாளர்)






நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபையின் கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்ற போது... (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

## விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும்

மருதங்கேணிபிரதேசசெயலக பிரிவில் செம்பியன்பற்று வடக்கு ஜே/ 426 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மட்டும் இன்று 28 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.


இதுதொடர்பில்பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

## 5000 ரூபா தாளில் கைப்பை தயாரிப்பு




சட்டவிரோதமான முறையில் சீனாவின் தயாரிப்பிலான 5 ஆயிரம் ரூபா நாணயத் தாளின் வடிவமைப்பிலான கைப்பைகள் கொழும்பில் நடை பாதையில் வைத்து வியாபாரம் செய்யப்படுகிறது.

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



**அக்குளில்**

இடது அக்குளில் மச்சம் இருந்தால் மேற்கண்ட வகைக்கு எதிர் மறையாக இருப்பான். ஏழையாகப் பிறந்து ஏழையாகவே முடிவான். வயது முதிர்ந்த பிறகே திருமணம் நடைபெறும். நெறியற்ற வாழ்க்கையானகஆயுள் முழுவதும் கஷ்டங்களையே அனுப வித்து அற்பாயுளில் முடிவான்.

வலது அக்குளுக்கும் காதுக்கும் இடையே மச்சம் இருந்தால் வாழ்க்கை ஒரே சீராக அமைந்திருக்காது. வாழ்க்கை தொடக்கத்தில் ஏழையாக இருந்து நடுவில் தன் முயற்சியினால் சகல வசதி களும் பெற்றிருந்தாலும் நடு வயதில் தன் இஷ்டப்படி செய்து தாழ்மை நிலைமை அடைவான்.

**தோள்களில்**

தோள்களில் இரண்டில் எதிலாவது மச்சம் இருந் தால் வாழ்க்கைக்குரிய வசதிகள் அனைத்தும் இருக்கும்.

வலது தோள்களில் மச்சம் இருந்தால் அவர்கள் மிகவும் வலிமையுடையவர்கள். குன்றாத முயற்சியுடையவர்கள். எதற்கும் அஞ்சாதவர்கள். எந்தக் காரியத்தையும் துணிவுடன் செய்வார்கள். அறிவு நூல்களைப் பயிலுவதில் ஆர்வம் மிக்கவர்கள். புதிய செய்திகளை அறிந்து கொள்வதில் ஆர்வம் உடையவர்கள். வலிய சண்டைக்குச் செல்லாதவர்கள். வந்த சண்டையை விடாதவர்கள். பிறர்க்கு உதவும் பண்பு டையவர்கள். எதையும் தாமே முயன்று செய்து கொள்ளும் இயல்புடையவர்கள். உழைக்க வேண்டிய நேரத்தில் கடு மையாக உழைப்பார்கள். வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய நேரத்தில் அனுபவிப்பார் கள். இவர்கள் சுகமாகவும் இன்பமாவும் வாழ்பவர்கள் என்றும் கூறலாம்.

இடது தோளில் மச்சம் இருந்தால் அவர்கள் மன அமைதி இல்லாதவர்கள். ஒரு செய்தியைப் பெரிதாக கற்பனை செய்து கொண்டு மனதைக் குழப்பிக் கொள்வார்கள். வாழ்க்கையில் பல வசதிகள் அதாவது உண்ணவும் உடுக்கவும் வசதி பெற்றிருந்தாலும் அமைதியாக இவர்களுக்கு வாழத் தெரியாது. ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு மற்றவர்களுடன் வாக்கு வாதம் சண்டை செய்து கொண்டிருப் பார்கள். ஏதோ வாழ்க்கைக் குறை இருப்பது போல கரு திக் கொண்டு வாழ்க்கையை அனுபவிக்காதவர்கள். வீண் பிடிவாதக் குணத்தினால் பிறருடைய வெறுப்புக்கு ஆளாகி விடுவார்கள்.

**கழுத்தில்**

பொதுவாக கழுத்தில் எந்தப் பகுதியில் மச்சம் இருந்தாலும் அது நன்மையைத் தருவதாக ஆகாது. சில சமயம் எதிர்பாராமல் உயிருக்கே ஆபத்தான நிலை ஏற்படலாம். ஆனால் இவர்களில் சிலர் அத்தகைய ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். தாயாதிகளுக்கிடையே சொத்துக் தகராறுகள் ஏற்பட்டு கோர்ட்டு கச்சேரிகளில் திரிந்து முடிவில் இவர்களுக்கு சேர வேண்டிய சொத்து சேர்ந்து சற்று வசதியாக வாழ்நாளை கழிப்பார்கள்.

கழுத்தின் மேல் பாகத்தில் மச்சம் உடையவர்கள் பிறரைக் கவரும் பேச்சுத் திறனுடையவர்களாகவும் பிறரைத் கவரும் வகையில் பழகும் பாங்குடையவர்களாகவும் இருப்பார்கள். நல்ல அறிவுத் திறமையும் வாக்குவாதத் திறமையும் உடையவர்களாக இருப்பார்கள்.

கழுத்தின் கீழ்ப்பாகத்தில் மச்சம் உள்ளவர்கள் அறிவு நலம் குறைந்தவர்களாகவும் பிறரிடம் பேசும் முறை அறியாதவர்களாகவும் இருப் பார்கள். பிறரிடம் பேசும் முறை தெரியாது முறை கெட்ட வகையில் பேசிவிட்டு பிறகு அவ்வாறு பேசியதை நினைத்து வருந்துவார்கள். கழுத்தின் பின்புறத்தில் மச்சம் உள்ளவர்கள் பலவிதமான எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டியவர்களாக இருப்பார்கள். கழுத்தில் உள்ள எலும்பின் மீது மச்சம் இருந்தால் வசதியாக வாழ்க்கையுண்டாகும். சுத்தமாகவும் வெளுப் பாகவும் துணிமணிகளை அணிவதில் இவர்களுக்கு விருப்பம் அதிகமாக இருக்கும். (தொடரும்)

## மூன்று மாதங்களுக்கு ஒரு முறை

# எரிபொருள் விலையில் மாற்றங்கள் இடம்பெறும்

### சந்திம வீரக்கொடி தகவல்



சர்வதேச சந்தையில் எரி பொருளின் விலை குறைந்துள்ள போதும் இலங்கையில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படாது.

எனினும் சர்வதேச சந்தையின் மாற்றத்துக்கு ஏற்ப எரிபொருட்களின் விலைகளில் மாற்றங்களை கொண்டு வரும்வகையில்சூத்திரம்ஒன்று விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய சூத்திரம், எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதியன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று பெற்றோலியத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். 2014ஆம் ஆண்டுக்கு பின்னர் சர்வதேச சந்தையில்மசகுஎண்ணெய்விலை பீப்பாய் ஒன்று 85 டொலர்களில் இருந்து 37 டொலர்களாக குறைந்துள்ளன.

எனினும் ஜனவரி 21 ஆம் திகதியன்று இந்த மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி ஏற்பட்டமைக்கான காரணம் என்ன என்பதை தெரிந்து கொள்ள முடியவில்லை என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்தநிலையில் ஜனாதிபதி தேர்தலின் போது உறுதியளிக்கப்பட்டபடி எரிபொருட்களுக்கான விலை சூத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்படி சர்வதேச சந்தையின் நிலவரப்படி எரிபொருட்களின் விலைகளில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

## ஜனவரி 5 வரை கால அவகாசம்

இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதியின் பின்னர் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்ட யோசனைகளை அரசாங்கம் மாற்றிக் கொள்ளாதவிடத்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கைக்கு ஏனைய தொழிற்சங்கங்களை இணைத்துக் கொள்வது தொடர்பிலும் தற்பொழுது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கம் தனியார் வங்கிகளில் அரச நிறுவனங்களில் நிதிகளை முதலீடு செய்ய எடுத்துள்ள தீர்மானம் நாட்டுக்குப் பெரும் ஆபத்தானது எனவும் அச்சங்கத்தின் செயலாளர் ஏ.கே. பண்டார சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# செய்தித் துளிகள்

## ஆசிரிய பயிற்சி அவசியம்

ஆசிரிய தொழிலுக்கு வருபவர்களுக்கு இரு வருட பயிற்சி கட்டாயமாக்கப்படவுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் பிரதி அமைச்சர் எரான் விக்ரமரட்ன அண்மையில் நடைபெற்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது கூறியுள்ளார்.

ஆசிரியர்களின் அறிவுத் தேவையானது மாணவர்களின் கல்விக்கு முக்கியமானதென்றும் இணையத்தின் மூலம் தகவல்களை பெறமுடியும். ஆனால் அறிவை இணையத்தில் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார். அதனால் ஆசிரியர்களுக்கு அனுபவம் இன்றியமையாது என்றும் தெரிவித்தார். (இ-7)

## நடத்துவதா? இல்லையா? அடுத்த மாதம் முடிவாகும்

ஆண்டு 5 புலமைப் பரீட்சையை நடத்துவதா? இல்லையா? என்ற முடிவை அடுத்த மாதத்தில் எடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது பாராளுமன்ற அங்கத்தவர் விமலவீர டசநாயக்க கல்வி முழுமையாக மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற கேள்விக்கு பதிலளித்து பேசுகையில் அமைச்சர், ஆண்டு 5 புலமைப் பரீட்சை மாற்றம் செய்வது பற்றி குறிப்பிட்டுள்ளார்.

ஆண்டு 5 புலமைப் பரீட்சை நடத்துவதா? இல்லையா? என்பது பற்றிய முடிவு அடுத்த மாதம் ஜனவரியில் தெரிய வரும் என அமைச்சர் தெரிவித்தார். (இ)

## போலி சஜித் குறித்து 68 முறைப்பாடுகள்

அரச தொடர்மாடி விற்பனை சம்பந்தமாக அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் போலி கையொப்பமிட்டு மக்களிடம் நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் 68 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன.

சிலர் ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா, ஒரு இலட்சத்து அறுபதாயிரம் ரூபா பணத்தை முற்பணமாக கொடுத்து பதிவு செய்துள்ளனர்.

மிகுதிப் பணத்தை கொடுத்து வீட்டை உரிமையாக்கி கொள்ள முடியும் என குறிப்பிட்டிருந்தனர்.

அதன்பின் எந்த தொடர்பும் இல்லாத காரணத்தால் பொது மக்கள் நகர அபிவிருத்தி திணைக்களத்திடம் தொடர்பு கொண்ட போது அது போலியானது என தெரியவந்துள்ளது. பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இதுவரை 28 விசாரணைகள் முன்னெடுத்த போது 3 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன் பின்னணியில் காணப்பட்ட முன்னாள் நகர அபிவிருத்தி திணைக்கள அதிகாரியை பொலிஸார் தேடி வருகின்றனர். (இ)

## 2015 வாக்காளர் பெயர்ப்பட்டியலை இம்மாதம் 31 வரை பார்வையிடலாம்

2015 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பில் உங்கள் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த் துக் கொள்ள முடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இம்மாதம் 31 ஆம் திகதி குறித்த பட்டியல் இறுதிப்படுத்தப்படவுள்ளது. அதுவரை பொது மக்கள் தமது பெயர் விபரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம் என்று தேர்தல்கள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

www.selections.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக உங்கள் பெயர்களை சரிபார்த்துக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கௌரவிப்பு நிகழ்வு இன்று

திருநெல்வேலி நல்லூர் பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் பணியாளர்கள் ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு சங்க காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வே. பிரதீஸ்குமார் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## சட்டவிரோத ஆயுதத்துடன் முன்னாள் சிப்பாய் கைது

ஆணமடுவ வெடியாபஹலகம பிரதேசத்தில் சட்டவிரோத ஆயுதம் வைத்திருந்த ஓய்வு பெற்ற இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் நேற்று நடத்திய சுற்றி வளைப்பு தேடுதலின் போது ஓய்வு பெற்ற இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். சட்டவிரோத ஆயுதத்தைப் பயன்படுத்தி குறித்த நபர் விலங்கு வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நேற்று மாலை குறித்த இராணுவச்சிப்பாயை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதன்போது மான்தோல் உள்ளிட்ட சில பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர். (இ)

# மியன்மாரில் நிலச்சரிவு

## 50 பேர் உயிருடன் புதையுண்டனர்



(யாங்கூன்)

வடக்கு மியன்மாரில் இந்தியா-சீன எல்லையோரப் பகுதியில் உள்ள கச்சின் மாநிலத்தில் உள்ள ஹற்பாகன்ட் பகுதியில் உள்ள மரகதச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் வழக்கம் போல் ஏராளமான தொழிலாளர்கள் மரகதக் கற்களை வெட்டியெடுக்கும் பணியில் ஈடுபட்ட வேளை அந்த சுரங்கத்தின் ஒரு பகுதியில் மண்சரிந்தது.

இதில் அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஐம்பதுக்கும் அதிகமான தொழிலாளர்கள் உயிருடன் புதைந்தனர். மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் 20 பேரின் உடல்களை மீட்டுள்ளனர். மீதமுள்ளோரை தேடும் பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

மலைப்பாங்கான பிரதேசமான கச்சின் மாநிலத்தில் கடந்த நவம்பர் மாதம் 22ஆம் திகதி ஏற்பட்ட நிலச்சரிவில் 114 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அவுஸ்திரேலியாவில் காட்டுத் தீ; 116 வீடுகள் எரிந்து சாம்பலாகின

கிறிஸ்மஸ் பண்டிகையின் போது அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத்தீயால் 116 வீடுகள் எரிந்து சாம்பலாகின.

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் கோடை வெயில் கொளுத்துகிறது.

இதனால் அங்குள்ள வனப் பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அங்கு காட்டுத்தீ பரவியது.

காட்டுத்தீ வனப்பகுதியை ஒட்டி வைரிவர் மற்றும் கிரீக் ஆகிய 2 நகரங்களிலும் பரவியது. இதனால் அங்கு வாழும் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

காட்டுத் தீயால் 116 வீடுகள் எரிந்து சாம்பலாகின. அவற்றில் வைரிவர் பகுதியில் 98 வீடுகளும், கிரீக் பகுதியில் 18 வீடுகளும் அடங்கும்.

பெருங்கடல் ரோடு பகுதி அவுஸ்திரேலியாவின் மிக முக்கியமான சுற்றுலாப் பகுதியாகும். அங்கு ஏற்பட்டுள்ள காட்டுத்தீயால் அந்தப் பகுதியில் தற்காலிகமாக போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

## உயிர் தப்பிய பிரதமர்



கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள மிகச்சிறிய நாடு பெனின். அந்நாட்டின் பிரதமராக லிபோனல் ஷின்சூ இருந்து வருகிறார். இவர் டிஜோயூ நகருக்கு ஹெலிகொப்டரில் நேற்று முன்தினம் நண்பகல் வந்தார்.

அவர் பயணம் செய்த ஹெலிகொப்டர் அங்குள்ள ஒரு ஸ்டேடியத்தில் தரை இறங்கியபோது விபத்துக்குள்ளாகி நொறுங்கியது. அந்த விபத்தில் இவர் காயமின்றி உயிர் தப்பினார். இத்தகவலை அவரது மகள் டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (இ-7)




## புயலினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்ஸாசில் ஏற்பட்ட சூறாவளியினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது.

சூறாவளியின் தாக்கத்தினால் டெக்ஸாசில் இடம்பெற்ற வாகன விபத்துக் காரணமாக நால்வர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


நேற்று முன்தினம் பல நகரங்களில் சூறாவளி தாக்கியுள்ளதுடன், 56 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வானிலிருந்து சில சிதைவுகள் அதிவேக வீதியில் வீழ்ந்துள்ளதாகவும் அமெரிக்க வானிலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், டெக்ஸாசில் விடுக்கப்பட்டிருந்த வெள்ள மற்றும் சூறாவளி அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### பாகிஸ்தானில் திடீரென்று நடந்த

# மோடி-நவாஸ் சந்திப்பு அமெரிக்கா வரவேற்பு



(வோஷிங்டன்)

பிரதமர் மோடி திடீரென்று பாகிஸ்தான் சென்று பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்தித்து பேசியதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

**மோடி-நவாஸ் ஷெரீப் சந்திப்பு**

ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியா வரும் வழியில் பிரதமர் நரேந்திர மோடி திடீரென்று பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகருக்கு சென்று அந்த நாட்டின் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்தித்து பேசினார். அதன்பிறகு அங்கிருந்து டில்லி திரும்பினார்.

திட்டமிடப்படாமல் திடீரென்று நடந்த இந்தச் சந்திப்புக்கு காங்கிரஸ், ஐக்கிய ஜனதாதளம், ஆம் ஆத்மி உள்ளிட்ட சில கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்த சந்திப்பை வரவேற்று இருக்கின்றன. இதேபோல் உலக அளவிலும் இந்த சந்திப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளது.

**அமெரிக்கா வரவேற்பு**

பிரதமர் மோடி பாகிஸ்தான் சென்று நவாஸ் ஷெரீப்பை சந்தித்ததை அமெரிக்கா வரவேற்று இருக்கிறது.

இதுபற்றி அமெரிக்க வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி கூறுகையில், மோடி பாகிஸ்தான் சென்று நவாஸ் ஷெரீப்பை சந்தித்து பேசியதை நாங்கள் வரவேற்கிறோம். அயல் நாடுகளான இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்லுறவு நிலவுவது அந்த பிராந்தியத்தில் வசிக்கும் மக்களுக்கு மிகவும் பயன் அளிப்பதாக இருக்கும் என்றார்.

**சீனா மகிழ்ச்சி**

மோடி-நவாஸ் ஷெரீப் சந்திப்பு பற்றி சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் லூ காங்கிடம் நிருபர்கள் கருத்து கேட்டனர். அதற்கு அவர், அதுபற்றிய தகவலை அறிந்ததாகவும், இந்தியா-பாகிஸ்தான் உறவில் புதிதாக ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வரவேற்பதாகவும தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அயல் நாடு என்ற முறையிலும், நட்பு நாடு என்ற முறையிலும் இந்த சந்திப்பு குறித்து சீனா மகிழ்ச்சி அடைவதாகவும், முன்னேறறத்தை கருத்தில் கொண்டு பரஸ்பர நமபிக்கையை மேம்படுத்தும் வகையில் இரு நாடுகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

**ஐ.நா. பொதுச்செயலாளர**

ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூனும் வரவேற்றுள்ளார். பிரதமர் மோடி பாகிஸ்தான் சென்று நவாஸ் ஷெரீப்பை சந்தித்து பேசியது வரவேற்கத்தக்க சரியான நடவடிக்கை என்றும், இதேபோல் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி இரு நாடுகளும் உறவை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியதாக ஐ.நா. சபையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

'வோஷிங்டன் போஸ்ட்', 'வால் ஸ்டிரீட் ஜர்னல்', 'லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' ஆகிய அமெரிக்க பத்திரிகைகளும் மோடி-நவாஸ் ஷெரீப் சந்தித்து பேசியதை வரவேற்று இருக்கின்றன. (இ-7)

# என் வீட்டை உங்கள் வீடாக நினைத்துக்கொள்ளுங்கள்

## மோடியிடம் உருகிய நவாஸ் ஷெரீப்

(லாகூர்)

உலக நாடுகளை ஆச்சரியப் படுத்திய பிரதமர்கள் மோடி,நவாஸ் சந்திப்பின் போது விவாதிக்கப்பட்ட விடயங்கள் குறித்து பல்வேறு சுவாரஸ்யமான தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் உறவினர் மெஹருன்னிசாவின் திருமண விழாவில் கலந்து கொள்வதற்காக லாகூரில் தரையிறங்கிய மோடியை உற்சாகத்துடன் வரவேற்ற நவாஸ், அங்கிருந்து அவரை ராவிண்ட் பகுதியில் உள்ள தனது பாரம்பரிய வீட்டிற்கு ஹெலிகொப்டர மூலம் அழைத்து சென்றார். வரலாற்றிலேயே இந்தியா, பாகிஸ்தான பிரதமர்கள் ஒன்றாக பயணம் செய்தது இதுவே முதல் முறை என பாகிஸ்தான் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

தனது குடும்ப உறுப்பினர்கள் பலரையும் மோடிக்கு நவாஸ் ஷெரிப் அறிமுகப்படுத்தி வைத்தார். அப்போது, "உங்கள் குடும்பத்தினர் அனைவரும் இங்குதான் வசிக்கிறார்களா?" என்று ஆச்சரியத்துடன் மோடி கேட்க, "ஆமாம், 70-80 குடும்ப உறுப்பினர்கள் இந்த் பெரிய வீட்டில்தான் வசிக்கின்றனர்." என்றார் நவாஸ்.

பின்னர் நவாஸின் அரண்மனை போன்ற வீட்டை சுற்றிப்பார்த்த மோடி, இங்கு நான் இனி அடிக்கடி வருவேன் என்று கூற, "தாராளமாக, இது உங்கள் வீடு, நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம்' என அகமகிழ்ச்சியுடன் நவாஸ கூறினார்.

'80 நிமிடங்கள் வரை நீடித்த இந்த சந்திப்பின் போது, நவாஸின் தாயாரது காலைத்தொட்டு ஆசி பெற்ற மோடி, நவாஸ் ஷெரிப்பிடம் புடைவைகள் உட்பட பல்வேறு பரிசுப் பொருட்களையும் வழங்கியுள்ளார். (இ-7)

## பராகுவே, ஆர்ஜென்டீனா, பிரேசில், உருகுவே நாடுகளில்

# பெருவெள்ளம்

**பராகுவே, ஆர்ஜென்டீனா, பிரேசில், உருகுவே நாடுகளில் பெய்துவரும் கோடை கால கன மழையால் வெள்ளம் பெருக்கெடுத்து பாய்கிறது. பாதுகாப்புக் கருதி ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்களது வசிப்பிடத்தில் இருந்து வெளியேற்றப் பட்டுள்ளனர்.**

## ஒரு இலட்சம் பேர் வெளியேற்றம்



"எல் நினோ" எனப்படும் பருவ நிலை மாற்ற சீர்கேட்டால் இனி வரும் கோடை மற்றும் மழை காலங்கள் சற்று கடுமையானதாக இருக்கும் என உலக வானிலை ஆய்வு அமைப்பு எச்சரித்துள்ள நிலையில் தென்னமெரிக்க நாடுகள், பிரேசில் உள்ளிட்ட பகுதிகளில் அளவு கடந்த வறட்சியும், பெரும் மழையால் கடும் வெள்ளப் பெருக்கால் பேரழிவும் ஏற்படக் கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில், எதிர்பாராத விதமாக பெய்யும் கோடை மழையும் வழக்கத்துக்கு மாறாக பெரும் அழிவை ஏற்படுத்தும் வகையில் மக்களை அச்சுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

பராகுவே நாட்டில் உள்ள பராகுவே ஆற்றில் ஏற்பட்ட மோசமான வெள்ளப்பெருக்கால் தலைநகர் அசுன்கியான் நகரையொட்டி வாழும் சுமார் 97 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். வடக்கு ஆர்ஜென்டீனாவிலும் கடந்த இருநாட்களாக பெய்த மழையின் விளைவாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுமார் 20 ஆயிரம் மக்கள் தங்களது வசிப்பிடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

உருகுவே நாட்டில் சுமார் 10 ஆயிரம் பேரும், பிரேசிலில் சுமார் 2 ஆயிரம் பேரும் வெள்ளத்துக்கு அஞ்சி தங்களது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பராகுவே மற்றும் உருகுவே நாடுகளின் எல்லையோரம் வெள்ளம் பாதித்த பகுதிகளை பிரேசில் ஜனாதிபதி டில்மா ரவுசெப் நேற்று காலை ஹெலிகொப்டர் மூலம் சென்று பார்வையிட்டு சேத நிலவரங்களை ஆய்வு செய்தார். (இ-7)











# நிலநடுக்கத்தால் 120 பேர் காயம்

(லாகூர்)

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் வீடுகள் இடிந்து விழுந்ததில் 120 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

பாகிஸ்தானில், இந்திய நேரப்படி நேற்று முன்தினம் இரவு 12.44 மணி அளவில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது.

பூமிக்கு அடியில் 196 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.9 ஆக பதிவானது. தலைநகர் இஸ்லாமாபாத், லாகூர், பெஷாவர் உள்ளிட்ட நகரங்களிலும் கடுமையாக உணரப்பட்டது.

நள்ளிரவு திடீரென ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கட்டடங்கள், வீடுகள் குலுங்கின. சுமார் ஒரு நிமிட நேரம் இந்த நிலநடுக்கம் நீடித்தது. இதனால் தூக்கத்தில் இருந்து திடுக்கிட்டு விழித்துக் கொண்ட பொதுமக்கள் அலறியடித்துக் கொண்டு தங்களுடைய குழந்தைகளுடன் வீடுகளில் இருந்து வெளியே ஓடி வந்தனர். கடும் குளிரிலும் வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

### 90 பேர் படுகாயம்

நிலநடுக்கத்தால் பாகிஸ்தானின் பல்வேறு நகரங்களில் வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்தன. இதில் 90 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

எனினும் உயிர்ச்சேதம் குறித்து உடனடியாக எதுவும் தெரிய வரவில்லை. இதுகுறித்து பாகிஸ்தான் வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குனர் குலாம் ரசூல் கூறுகையில், நள்ளிரவுக்கு பின்பு இந்த நில நடுக்கம் ஏற்பட்டது. குறிப்பாக பஞ்சாப் மற்றும் கைபர் பக்துங்கவா மாகாணத்தின் ஏராளமான மாவட்டங்களில் இந்த நில நடுக்கத்தை மக்கள் உணர்ந்தனர். இந்த நில நடுக்கம் ஆப்கானிஸ்தானை மையமாகக் கொண்டிருந்தது என்று தெரிவித்தார்.

### ஆப்கானிஸ்தானையும்

இதேபோல் ஆப்கானிஸ்தானின் எல்லையை ஒட்டிய பகுதிகளிலும் நேற்று முன்தினம் இரவு நில நடுக்கம் ஏற்பட்டது. தலைநகர் காபூலில் இருந்து வடகிழக்கில் 280 கி.மீ. தொலைவில் பூமிக்கு அடியில் 203 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நில நடுக்கம் மையம் கொண்டிருந்தது.

அங்கு ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவான நிலநடுக்கத்தால் 30 பேர் காயம் அடைந்தனர். ஆப்கானிஸ்தானின் அண்டை நாடான தஜிகிஸ்தானிலும் நில நடுக்கம் உணரப்பட்டது.

ஏற்கனவே கடந்த ஒக்டோபர் மாதம் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் ரிக்டர் அளவுகோலில் 7.5 என்ற அளவிற்கு நிலநடுக்கம் ஏற்பட்டது. அப்போது இரு நாடுகளிலும் 200 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரிட்டன் செல்ல அகதிகள் முயற்சி

## பிரான்ஸ் எல்லையில் பதற்றம்



பிரிட்டன் செல்வதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள் பிரான்சின் எல்லையான கலேஸ்வில் குவிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

பிரான்சின் எல்லையில் உள்ள கலேஸ்(Calais) பிரித்தானியா செல்வதற்கான முக்கிய வழியாக அமைந்துள்ளது.

சிரியா, ஈராக் உள்ளிட்ட நாடுகளில் இருந்து வரும் அகதிகள் கலேஸ் பகுதியின் எல்லை அருகே தற்காலிக குடியிருப்பு அமைத்து வசித்து வருகின்றனர்.

இங்குள்ள யூரோ சுரங்கப் பாதை வழியாக ஏராளமான அகதிகள் பிரித்தானியாவிற்கு சட்ட விரோதமாக செல்வதால் அங்கு அவ்வப்போது பரபரப்பு ஏற்படுவதுண்டு.

இந்நிலையில் கிறிஸ்மஸ் தினமான கடந்த வெள்ளியன்று நூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள் இப்பகுதியில் குவிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதன் காரணமாக வாகனத்தில் செல்பவர்களுக்கு சிரமம் ஏற்பட்டது. எனவே அகதிகள் அங்கிருந்து கலைந்து செல்லும் வரை ஏ-16 தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டது. இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனிடையே சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் பிரித்தானியா செல்வதற்காக கலேஸ் பகுதியில் தற்காலிக குடில் அமைத்து தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

1318

## குரங்குக் குட்டியின் விஷமம்!



...இவ்வாறு செய்திருப்பார்கள் என்று யோசித்தது. அதற்கு ஒன்றும் புரிபடவில்லை! மீண்டும் கஷ்டப்பட்டு கூடு ஒன்றை கட்டியது.

மறுநாளும் குருவி இரை தேட சென்றபின் குரங்கு வந்து குருவியின் கூட்டைப் பிரித்துப் போட்டது. இப்படி தினம் ஒரு கூட்டினை குரங்கு பிய்த்துப் போட்டுக் கொண்டு இருந்தது.

குருவி இதை யார் செய்கிறார்கள் என்று கண்டுபிடிக்க நினைத்தது. மறுநாள் இரை தேடச்செல்வது போல சென்று மறைந்திருந்து பார்த்தது.

அப்போது குரங்குவந்து கூட்டைக் கலைப்பதை பார்த்தது. உடனே ஆத்திரமுடன் "ஏய் குரங்கே! என்ன செய்கிறாய்? என் கூட்டைக் கலைக்கிறாய்?" என்று கேட்டது.

"அட வந்துவிட்டாயா? எனக்கு இது விளையாட்டு! இப்படி கூட்டை பிரித்துப் போட்டு விளையாடுவது என்க்கு ரொம்பப் பிடிக்கும்!" என்று தெனாவட்டாக சொன்னது குரங்கு.

"ஓஹோ! கூட்டைக் கலைத்துப்போடும் உனக்கு அதை உருவாக்கத் தெரியுமா?" என்றது குருவி.

"அது என் கவலை இல்லை! இதுமாதிரி எத்தனை கூடுகள் இருந்தாலும் அதை நான் கலைப்பேன்! என் விளையாட்டை தொந்தரவு செய்யாதே!" என்றது குரங்கு.

"ஏய் விஷம குரங்கே! இது என் கூடு! மரியாதையாகப் போய்விடு! இல்லையேல்!"

"உன்னால் என்னை என்ன செய்து விட முடியும்?"

குருவி யோசித்தது. இதை தந்திரத்தால்தான் வெல்ல முடியும் என்று நினைத்தது.

"ஏய் குரங்கே! என்னுடைய கூட்டைக் கலைத்துவிட்டாய்! என் தங்கை ஒருத்தி இருக்கிறாள் அவளிடம் ஆயிரம் வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்! அவர்கள் கூட்டை உன்னால் பிரிக்க முடியுமா? என்று ஏளனமாக சொன்னது குருவி.

குரங்குக்கு ஆத்திரமாக வந்தது. "ஏய் உன் தங்கை என்ன பெரிய ஆளா? இப்போதே அந்த கூட்டைக் கூட கலைத்துப் போடுவேன்! உன்னால் என்ன செய்ய முடியும்? எங்கே அவளது கூடு?" என்று எகிறி குதித்தது.

"நீ ரொம்பத்தூரம் போய் கவலைப்பட வேண்டாம். இரண்டு மரம் தள்ளி அதோ உயரமாய் தெரிகிறதே அந்த மரத்தில்தான் அவள் கூடு! உன்னால் அந்த மரத்தில் ஏற முடியுமா?" உசுப்பி விட்டது குருவி.

"ஏன் முடியாமல்? இப்போதே உன் கண் எதிரிலேயே பிய்த்துப் போடுகிறேன் பார்! என்று அருகில் இருந்த மரத்துக்கு தாவி அந்த பெரிய மரத்தில் வேகமாக ஏறியது குரங்கு.

அந்த மரத்தில் கூடு உயரத்தில் இருந்தது. வேக வேகமாக ஏறி கூடு இருந்த கிளையை நெருங்கியது குரங்கு. அந்த கூட்டில் ஆயிரம் வேலைக்காரர்கள் பாதுகாத்துக் கொண்டு இருந்தார்கள். யாரோ எதிரி நெருங்குகிறார்கள் என்று அவை உஷாராகிவிட்டன.

குரங்கு அந்த கிளையைப் பிடித்ததுதான் தாமதம்! அந்த ஆயிரக்கணக்கான வேலைக்காரத் தேனிக்கள் அப்படியே பறந்து மொய்த்து குரங்கைக் கொட்ட ஆரம்பித்தன.

அப்போது தான் தான் கைவைத்தது ஒரு தேன்கூடு என்று குரங்குக்கு உறைக்க ஆரம்பித்தது.

ஆனால் என்ன பிரயோசனம்? தேனிக்களின் தாக்குதலில் தப்பிக்க முடியாமல் அங்கிருந்து ஓடியது.

துரத்தி துரத்தி கொட்டின தேனிக்கள்..

குருவி கை கொட்டிச் சிரித்தது. "குரங்காரே! இது போதுமா? இல்லை இன்னொரு தம்பி வீட்டுக்குச் செல்கிறீர்களா?" என்றது

"ஐயோ! போதும்! போதும்! இனி விஷமமே செய்ய மாட்டேன்!" என்று அலறியபடியே ஓடியது குரங்கு.

நல்ல பாடம் புகட்டினோம்! இனி நிம்மதியாக இருக்கலாம் என்று குருவி மீண்டும் கூட்டினை கட்ட ஆரம்பித்தது.

(முற்றும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1065 - லண்டனில் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலாயம் (Westminster Abbey) திறந்துவைக்கப்பட்டது.
- 1612 - கலிலியோ கலிலி நெப்டியூன் கோளைக் கண்டுபிடித்தார்.
- 1836 - தெற்கு அவுஸ்திரேலியா, அடிலெய்ட் ஆகியன அமைக்கப்பட்டன.
- 1836 - மெக்சிகோவின் விடுதலையை ஸ்பெயின் அங்கீகரித்தது.
- 1846 - அயோவா ஐக்கிய அமெரிக்காவின் 29 ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவுக்கு உரிமை கோரியது.
- 1885 - இந்தியாவின் வழக்கறிஞர்கள், அறிவியலாளர்கள், ஊடகவியலாளர்கள் 72 பேர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை ஆரம்பிப்பதற்கு பம்பாயில் கூடினர்.
- 1891 - யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டன.
- 1895 - பிரான்சின் லூமியேர சகோதரர்கள் பாரிஸ் நகரில் தங்கள் திரைப்படங்களை முதன் முதலாகப் பொதுமக்கள் பார்வைக்குக் கட்டணத்துடன் திரையிட்டனர்.
- 1908 - இத்தாலி, சிசிலியில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 75,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1929 - நியூசிலாந்தின் காலனித்துவ காவற்துறையினர் ஆயுதமின்றிப் போராட்டத்தில் ஈடுபட்ட சமோவாவின் 11 பேரைச் சுட்டுக் கொன்றனர். இது சமோவாவின் விடுதலை இயக்கத்துக்கு தூண்டுதலாக அமைந்தது.
- 1930 - மகாத்மா காந்தி பேச்சுவார்த்தைகளுக்காக பிரித்தானியா சென்றார்.
- 1958 - கியூபாவின் சாண்டா கிளாரா நகர் மீது சேகுவேரா போர் தொடுத்தார்.
- 1981 - அமெரிக்காவின் முதலாவது சோதனைக் குழாய் குழந்தை எலிசபெத் கார் வேர்ஜீனியாவில் பிறந்தது.
- 1994 - விடுதலைப் புலிகளின் உப தலைவர்களில் ஒருவரான கோபாலசாமி மகேந்திரராஜா இந்திய அமைதிப்படையுடன் இணைந்து புலிகளுக்கெதிராக சதி செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் அவருக்கு புலிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1999 - இலங்கை, புங்குடுதீவில் சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் (29) என்ற பெண் இலங்கைக் கடற்படையினர் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களால் கடத்தப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.
- 2005 - இரண்டாம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக ஜோன் டெம்ஜான்ஜக் என்பவர் உக்ரேனுக்கு நாடுகடத்த ஐக்கிய அமெரிக்காவின் நீதிமன்றம் உத்தரவிட்டது.
- 2006 - எதியோப்பிய மற்றும் சோமாலிய அரசுத் துருப்புக்களும் சோமாலியா தலைநகர் மொகடிசுவைக் கைப்பற்றியதை அடுத்து இஸ்லாமிய போராட்ட அமைப்பின் போராளிகள் தலைநகரைக் கைவிட்டு வெளியேறினர்.
- 2007 - நேபாளத்தின் இடைக்கால நாடாளுமன்றம் நாட்டை குடியரசாக அறிவித்து மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

### பிறப்புகள்

- 1932 - திருபாய் அம்பானி, இந்தியத் தொழிலதிபர் (இ. 2002)
- 1936 - எஸ். பாலசுப்பிரமணியன், திரைப்பட தயாரிப்பாளர், விகடன் குழும உரிமையாளர் (இ. 2014)
- 1937 - ரத்தன் டாடா, இந்திய டாட்டா குழுமங்களின் தலைவர்
- 1940 - அ. கு. ஆன்டனி, இந்திய அரசியல்வாதி
- 1944 - கேரி முலிஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்
- 1945 - பிரேந்திரா, நேபாள மன்னர் (இ. 2001)
- 1947 - நாஞ்சில் நாடன், எழுத்தாளர்
- 1954 - டென்செல் வாஷிங்டன், அமெரிக்க நடிகர்

### இறப்புகள்

- 1994 - கோபாலசாமி மகேந்திரராஜா, விடுதலைப் புலிகளின் முன்னாள் உப தலைவர்

## திருபாய் அம்பானி



திருபாய் என்று அன்புடன் அழைக்கப்படும், தீரஜ்லால் ஹிராசந்த் அம்பானி குஜராத் மாநிலம் சோர்வாத் அருகேயுள்ள குகாஸ் வாடாவில் 28 டிசம்பர், 1932 அன்று நடுத்தர வர்க்க மோத் குடும்பத்தில் ஹீராசந்த் கோர்தன் பாய் அம்பானிக்கும் ஜமுனா பென்னுக்கும் மகனாய்ப் பிறந்தார்.

இவர் குடிசையில் இருந்து கோபுரத்திற்கு உயர்ந்த இந்திய வர்த்தக உலக ஜாம்பவான் ஆவார். மும்பையில் முல்ஜி-ஜீதா துணிச் சந்தையில் ஒரு சிறு வணிகராகத்தான் திருபாய் அம்பானி தனது நெடும் பயணத்தைத் தொடங்கினார். தனது உறவினருடன் சேர்ந்து மும்பையில் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தை தொங்கினார். அம்பானி தனது (ரிலையன்ஸ்) நிறுவனத்தை 1977 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக்கினார். 2007 வாக்கில் குடும்பத்தின் இணைந்த சொத்துக்கள் (மகன்கள் அனில் மற்றும் முகேஷ் ஆகிய இருவருடையதும்) 60 பில்லியன் டொலர்களாக இருந்தது. அம்பானிகள் உலகின் பெரும் பணக்காரர்கள் வரிசையில் இடம்பெற்றிருந்தனர்

# 2016 மார்ச்சுக்கு முன் புதிய விசேட நீதிமன்றம்

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்படவுள்ள விசேட நீதிமன்றத்தின், சுயாதீன செயற்பாட்டின் நிமிர்த்தம், விசேட சட்ட மூலமொன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சட்டத்தை சட்டவாக்கத் திணைக்களம் தயாரித்துள்ளதாக அரசாங்கத்தின் உயர் மட்ட வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த விசேட நீதிமன்றத்துக்கு சர்வதேச நீதிமன்றங்களில் சேவை புரிந்துள்ள உள்நாட்டு நீதிபதிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

2016 மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் அரசாங்கம் இந்த நீதிமன்றத்தை அமைத்து இது தொடர்பில் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (இ-7)

# எதிரணியினர் போர்க்கொடி

(கொழும்பு)

**புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு எதிராகச் செயற்பட கூட்டு எதிரணியினர் தீர்மானித்து வருவதாக நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.**


இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, இலங்கையில் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான பணிகள் மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் புதிய அரசமைப்புக்கு ஆதரவாகச் செயற்படும் அதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு தாங்கள் ஒருபோதும் எதிர்ப்பை வெளியிடப் போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

புதிய அரசமைப்புக்கான யோசனையை எதிர்வரும் ஜனவரி 8 ஆம தகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதுடன் மறுநாள் 9 ஆம் திகதி புதிய அரசமைப்புத் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விசேட உரையும் இடம்பெறவுள்ளது.

பல்வேறு தரப்பினரும் தங்களது ஆதரவைத் தெரிவித்துவரும் நிலையில் கூட்டு எதிரணியினர் புதிய அரசமைப்புக்கு எதிராகச் செயற்படவுள்ளனர் என்று கூட்டு எதிரணியின் முக்கிய தலைவர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

புதிய அரசு அவசியமற்ற ஒன்றாகும். தற்போது காணப்படும் அரசமைப்பில் சில யோசனைகளை உள்ளடக்கிய மாற்றங்கள் கொண்டு வந்தால் போதுமானதாக இருக்கும். நாங்கள் இதற்கான இறுதி முடிவை ஜனவரி 9 ஆம் திகதி அறிவிக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார். (இ-7)



கோட்டை மாநகர சபை நிர்வாக பிரதேசத்திற்குள் வருடந்தோறும் 18 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள் விநியோகம் செய்யும் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி

# ஜனாதிபதி செயலக அதிகாரிகள் பலரின் பதவி பறிபோகும் அபாயம்

ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றும் முக்கிய அதிகாரிகள் பலரை நீக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனவரி 9 ஆம் திகதி இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தின் கட்டுப்பாடும் அவருக்கு கீழ் வந்திருந்தது.

எனினும் தனக்கு நம்பிக்கையான புதிய அதிகாரிகள் மூலம் ஜனாதிபதி செய்லகத்தை நடத்திச் செல்வதற்குப் பதிலாக முன்னைய ஜனாதிபதி மகிந்த நியமித்திருந்த அதிகாரிகளை தொடர்ந்தும் அவர்களின் பதவியில் நீடிப்பதற்கு மைத்திரி இடமளித்திருந்தார்.

இதன்காரணமாக பல்வேறு அரசியல் மற்றும் அலுவலக நெருக்கடிகள் தற்பொழுது ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் ஊழியர்களில் பெரும்பாலானவர்களை அப்பதவிகளில் இருந்து அகற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவெடுத்துள்ளதாகவும் இதில் முக்கிய பதவிகளை வகிக்கும் ஒரு சிலரும் உள்ளடங்கியிருப்பதாக தெரிய வந்துள்ளது.

எதிர்வரும் ஒன்பதாம் திகதிக்குப் பின்னர் மேற்கொள்ளவுள்ள இந்த மாற்றத்தினை அடுத்து உடனடியாக பல புதிய அதிகாரிகள் ஜனாதிபதி செயலகத்திற்குள் உள்வாங்கப்படவுள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

# தகவல் ஜோசியம்

இதுவரைக்கும் உங்களுக்கு தகவல் தானே சொல்லிக் கொண்டிருந்தேன். இன்று உங்களுக்கு ஜோசியம் சொல்லப் போகிறேன். நாடி ஜோசியம், ரேகை ஜோசியம் மாதிரி இது தகவல் ஜோசியம் என்று வைத்துக் கொள்ளுங்களேன். கவனமாகக் கேளுங்கள். நான் சொல்வதெல்லாம் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்று நீங்களே முடிவு செய்யுங்கள்.

நீங்கள் எப்படிப்பட்டவர் என்றால் அடுத்தவர்கள் உங்களை விரும்ப வேண்டும். பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் உங்களிடம் அதிகமாக இருக்கும்.

உங்களிடம் உள்ள நல்லது– கெட்டதை அடிக்கடி நினைத்துப் பார்ப்பீர்கள். அப்படி சுயமாக விமர்சனம் செய்யும் தன்மை உங்களிடம் உண்டு.

உங்களிடமுள்ள திறமைகளில் பலவற்றை பயன்படுத்தி நன்மையடையாமல் வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்! என்ன சரிதானா?

உங்கள் ஆளுமையில் பல குறைகள் இருந்தால் கூட பொதுவாக அதற்செல்லாம் நீங்கள் வேறு வகையில் ஈடு செய்து விடுவீர்கள்! அடிக்கடி உங்களுடைய முடிவுகளும் செயல்களும் சரியானவைதானா என்ற சந்தேகம் உங்களிடம் தீவிரமாக ஏற்படுவதுண்டு.

நீங்கள் ஓரளவுக்கு மாற்றமும்– புதுமையும் ஏற்படவேண்டும் என்று ஆசைப்படுவீர்கள்; கட்டுப்பாடுகளும் தட்டுப்பாடுகளும் உங்களை அடக்கி வைக்கும் போது உங்களுக்கு அதிருப்தி உண்டாகும். நாம் சுயேட்சையாக சிந்திக்கக் கூடியவர் என்ற நினைப்பு உங்களிடம் உண்டு. மற்றவர்கள் சொல்வதை ஆதாரமில்லாமல் ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள்.

மற்றவர்களிடம் நம்மைப்பற்றி அளவுக்கு மீறி வெளிப்படையாகப் பேசுவது புத்திசாலித்தனமில்லை என்பதை நீங்கள் புரிந்து வைத்துள்ளீர்கள்.

நடைமுறைச் சாத்தியமில்லாத ஆசைகள் உங்களிடம் உண்டு. சுய பாதுகாப்பு என்பது உங்களுடைய முக்கியமான இலட்சியங்களில் ஒன்று.

சில சமயம் மற்றவர்கள் உங்களிடம் வந்து சகஜமாக பழகக் கூடிய அளவுக்கு நடந்துகொள்வீர்கள். சில சமயம் கவனமாக இருப்பீர்கள். தயங்குவீர்கள். ஒதுங்கிப்போய் விடுவீர்கள். இதுவரை நான் சொன்ன ஜோசியம் உங்களுக்கு ஒத்து வருகின்றதா?

அப்படி ஒத்துப் போனால் என்னைப் பாராட்டாதீர்கள்.

நீங்கள் பாராட்ட வேண்டியது (Ross Stagner) என்ற மனோதத்துவ நிபுணரை!

அவர் நடத்திய உளவியல் சோதனையில் தான் இந்தப் பலன்கள். எனக்கு ஜோசியமும் தெரியாது. ஒன்றும் தெரியாது. பொதுவாக மனிதர்கள் பாராட்டுக்களை விரும்புவார்கள் விமர்சனங்களை வெறுப்பார்கள். அதை மனதில் வைத்து பலன் சொன்னால் சரி.

ஒருவரை " கிருமி" என்று சொல்வதை விட சிக்கனமானவர் என்று சொன்னால் அவர் ஏற்றுக் கொள்வார். சொல்லும் பலன் எல்லாம் பொதுப்படையானது தான் என்றாலும் அது தனக்கு மட்டுமே உரியவை. கண்டு பிடிக்கப்பட்டவை என்ற பிரேமையை கேட்பவர் மனதில் உண்டாக்க வேண்டும். அதுதான் ஜோசியரின் சாமர்த்தியம். இந்த பிரேமைக்கு உளவியலாளர் " பார்னம் உத்தி" என்று பெயர் வைத்துள்ளார்.

பீனியஸ் பார்னம் என்பவர் 19 ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் ஒரு பிரபல சர்க்கஸ் கம்பனி நடத்தி வந்தார்.

" உலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் ஒரு ஏமாளி பிறந்து கொண்டு இருக்கிறான்" என்பது தான் அவருடைய சித்தாந்தம்.

ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்துவது மாதிரி கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்தியது தான் அவருடைய மகத்தான வெற்றிக்கு காரணமாம்.

அந்த உத்தியை வைத்துத்தான் இப்பொழுது பல பேர் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பிழைப்பு நடத்தும் ஒரு சாமியாருக்கு ஏகப்பட்ட தொண்டர்கள். பல பேருக்கு அவர் அருள் வாக்கு சொல்வார்.

ஒரு நாள் ஒரு அம்மா கவலையுடன் அவரிடம் வந்தார்.

இவர் அவரைப் பார்த்தவுடன் " கவலைப்படாதே சொல் லிக் கொள்ளாமல் புறப்பட்டுச் சென்ற உன் வீட்டுக்காரன் ஒரு நாள் வந்து சேருவான்" என்றார்.

அந்த அம்மா போனவுடன் சீடன் அவரிடம் "அது எப்படி சுவாமி சரியாக சொல்றீங்கள்?" என்று கேட்டான்.

அதற்கு அவர் அவளுடைய தொந்தரவு தாங்க முடியாமல் தலைமறைவு ஆகிவிட்ட அந்த அப்பாவி நான் தானப்பா! என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

83

## 66-வது வயதில் எஸ்.எஸ்.வாசன் மறைந்தார்

...காங்கிரஸ் பிளவு மறைகிறது என்ற தலைப்பிட்டு வெளியாகி இருந்த செய்தி அது. காமராஜருக்கும் இந்திராவுக்கும் இடையே ஏற்பட்டிருந்த மனக்கசப்பு மறைவதற்கான அறிகுறிகள் தெரிவதாக அந்தச் செய்தி சொன்னது.

தன் உயிர் மூச்சாக அவர் கருதிய காங்கிரசில் பிளவு ஏற்பட்டபோது அவரால் தாங்க முடியவில்லை.

அந்தப் பிளவு மறைகிறது என்ற செய்தியைப் பார்த்ததும் அவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

சிரிக்க முடியாத அளவுக்கு பலவீனம். ஆனாலும் உதடுகள் லேசாக நெளிந்து ஒரு புன்னகையை வெளிப்படுத்த முயன்றன.

**உயிர் பிரிந்தது**

அன்று காலை 9.20 மணி. நான் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தேன். கண் மூடிப் படுத்திருந்தவரின் இடது கை மட்டும் முடியவில்லை.

முடியவில்லை என்பது போல் இருமுறை அசைகிறது. அதன்பின் எந்தச் சலனமும் இல்லை.

பதறிப்போய் நாடி பிடித்துப் பார்க்கிறேன். துடிப்பு இல்லை. டாக்டரை அழைக்க எழுந்து ஓடுகிறேன். டாக்டரே அப்போது உள்ளே நுழைந்துகொண்டிருக்கிறார்.

பரிசோதித்துப் பார்த்துவிட்டு உயிர் பிரிந்துவிட்டது என்று டாக்டர் அறிவித்தார்.

இவ்வாறு பாலசுப்பிரமணியன் குறிப்பிட்டுள் ளார்.

**இறுதி மரியாதை**





வாசன் மறைந்தபோது தமிழக முதலமைச்சராக கருணாநிதி இருந்தார். அவர், மற்ற அமைச்சர்களுடன் சென்று இறுதி மரியாதை செலுத்தினார்.

வாசன் மரணச் செய்தி பரவியதும், சென்னையில் உள்ள எல்லா ஸ்டுடியோக்களும் மூடப்பட்டன.

நடிகர்- நடிகைகள், பட அதிபர்கள், டைரக்டர்கள் அனைவரும் வாசன் வீட்டுக்குச்சென்று இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

முன்னாள் முதலமைச்சர் பக்தவச் சலம் மற்றும் அனைத்துக் கட்சி பிரமுகர்கள் வந்து அஞ்சலி செலுத்தினர்.

**எம்.ஜி.ஆர். கண்ணீர்**

எம்.ஜி.ஆர் மற்றும் பல நடிகர்- நடிகைகளும் படப்பிடிப்பை ரத்து செய்துவிட்டு மேக்கப்பைக்கூட கலைக்காமல் விரைந்து சென்று அஞ்சலி செலுத்தினர்.

வாசன் உடலைப் பார்த்து எம்.ஜி.ஆர். கண் கலங்கினார். வாசனுடன் நீண்ட காலம் பழகிய ஜெமினி கணேசன் கறி அழுதார்.

நடிகைகள் தேவிகா, வைஜெயந்திமாலாவின் தாயார் வசுந்தரா ஆகியோர் கண்ணீர் விட்டபடி நின்றனர்.

சிவாஜிகணேசன் சோகமே உருவாக இருந்தார்.

பானுமதி, பத்மினி, ஜெயலலிதா, சவுகார்ஜானகி, டி.ஆர்.ராஜகுமாரி, ஏவி.எம். ராஜன், முத்துராமன், பி.எஸ். வீரப்பா, சந்திரபாபு, ரவிச்சந்திரன், பாலாஜி, நாகேஷ், பட அதிபர்கள் ஏவி.மெய்யப்ப செட்டியார், நாகிரெட்டி, ஏ.எஸ்.சீனிவாசன், டைரக்டர்கள் ஸ்ரீதர், ப.நீலகண்டன், திருலோகசந்தர், மாதவன் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.

எம்.எஸ்.சுப்புலட்சுமி, கணவர் கல்கி சதாசிவத்துடன் வந்து மரியாதை செலுத்தினார்.

(தொடரும்)

# இலங்கையில் இன்னமும் முடிவுறாத ஜனநாயக மாற்றம்

புத்தாயிரம் ஆண்டு சவால் கூட்டுத் தாபனத்தின் (Millennium Challenge Corporation's (MCC)) இயக்குனர் சபையானது அண்மையில் தனது இறுதிக் காலாண்டுக் கூட்டத்தை நடத்தியிருந்தது.

இதன்போது, இந்தச் சபையானது புத்தாயிரம் ஆண்டு சவால் கூட்டுத் தாபனத்தின் நிதியை 2016 இல் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியான ஐந்து நாடுகளைத் தெரிவுசெய்தது. ஐவரி கோஸ்ட், கொசோவா, செனகல், டோகோ மற்றும் இலங்கை ஆகியனவே இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஐந்து நாடுகளாகும்.

அமெரிக்காவின் அரசியற் கட்சிகளின் பலமான ஆதரவுடன் 2004 ஜனவரியில் அமெரிக்க சட்டசபையால் உருவாக்கப்பட்ட அமெரிக்க அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இயங்கும் சுயாதீன அமெரிக்க உதவி நிறுவனம் எனத் தன்னைத் தானே புத்தாயிரம் ஆண்டு சவால் கூட்டுத்தாபனமானது தனது இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவு உதவிகளை எவ்வாறு நல்ல கோட்பாடுகள், நாட்டின் உரிமையாண்மை மற்றும் பெறுபேறுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிகளுக்காக சிறந்த முறையில் வழங்குவதென்பது தொடர்பாக புத்தாயிரம் ஆண்டு சவால் கூட்டுத்தாபனமானது திட்டமிட்டுச் செயற்படுகிறது. சுகாதாரம், நீர், விவசாயம், ஊழல் தடுப்பு, நில உரிமைகள் மற்றும் கல்வி உட்பட பல்வேறு துறைகள் சார்ந்த பணிகளை மையப்படுத்தி இக்கூட்டுத்தாபனமானது பணியாற்றி வருகிறது.

இலங்கையின் தற்போதைய நிலைகளை முன்னேற்றுவதற்கு அமெரிக்காவின் சுயாதீன புத்தாயிரம் ஆண்டு சவால் கூட்டுத்தாபனமானது இலங்கையுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவையுள்ளது. 'இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, தனியார் முதலீட்டு வாய்ப்புக்கள் போன்றவற்றில் உள்ள முட்டுக்கட்டைகள் மற்றும் வறுமையைக் குறைப்பதற்கான தடைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக வரும் மாதங்களில் இலங்கை அரசாங்கமும் மிலேனியம் கூட்டுத்தாபனமும் இணைந்து ஆராயவுள்ளன.

இந்த மதிப்பீட்டின் பெறுபேறுகளின் உதவியுடன் இலங்கையில் எத்தகைய திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதற்கான புதிய கோட்பாடு மற்றும் நிறுவக மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கப்படும். இந்த நிகழ்ச்சி நிரல் அபிவிருத்தியின் தொடர்ச்சியானது இது தொடர்பில் இலங்கை எவ்வளவு தூரம் ஈடுபாட்டைக் காண்பிக்கின்றது மற்றும் சீர்திருத்தங்களை எவ்வளவு தூரம் முன்னெடுத்துச் செல்வதற்கு உடன்படுகிறது என்பதிலேயே தங்கியுள்ளது. இதற்கு ஒரு ஆண்டோ அல்லது அதற்கு அப்பாலும் தேவைப்படலாம்' என நூற்றாண்டு சவால் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை 10 மில்லியன் டொலர் தொடக்கம் 50 மில்லியன் டொலருக்கு உட்பட்ட நிதித் திட்டத்திற்குத் தகுதி பெற்றிருப்பதாகவும், இந்த நிதி ஒரு முழுமையான ஒத்துழைப்புத் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் எனவும் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாண்டு இலங்கையில் இடம்பெறும் அண்மைய முன்னேற்றங்கள் தொடர்பில் புத்தாயிரம் ஆண்டு சவால் கூட்டுத்தாபனமானது திருப்தியடைந்துள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. 'இலங்கை தனது ஜனநாயக நிறுவகங்களை மீளவும் பலப்படுத்துதல், நல்லாட்சியை முன்னேற்றுதல், மனித உரிமைகளைப் பாதுகாப்பதை வலியுறுத்தல் போன்ற பல்வேறு விடயங்களில் இந்த ஆண்டு குறிப்பிடத்தக்க சில முன்னேற்றங்களை அடைந்துள்ளது' எனவும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

புத்தாயிரம் ஆண்டு சவால் கூட்டுத் தாபனத்தின் நிதி வழங்கலுக்குத் தகுதியுடையோர் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டுள்ளதானது இலங்கை மேலும் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதாகவும், இதன்மூலம் 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனநாயக நலன்களை மேலும் வலுப்படுத்தவும், நல்லாட்சிக்கான இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாடு, காத்திரமான கோட்பாடு சீர்திருத்தம் போன்றன தொடர்பில் காண்பிக்கப்படும் அக்கறை போன்றவற்றை மதிப்பீடு செய்வதற்கான ஒரு வாய்ப்பை பெற்றுள்ளதாகவும் புத்தாயிரம் ஆண்டு சவால் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த முன்னேற்றமானது இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்திற்கு ஒரு நல்லதொரு செய்தியாக உள்ளது. ஜனவரியில் சிறிசேன இலங்கையின் ஜனாதிபதியாகப் பொறுப்பெடுத்த காலத்திலிருந்து ஏற்பட்டுள்ள அமெரிக்க-இலங்கை நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதாகவும் புத்தாயிரம் ஆண்டு சவால் கூட்டுத்தாபனத்தின் உதவி அமைந்துள்ளது.

இந்த ஆண்டு அமெரிக்காவின் உயர் மட்ட அதிகாரிகள் பலர் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு ஒப்பந்தங்களை வழங்கியுள்ளனர். ஆண்டுதோறும் அமெரிக்க-இலங்கை 'பங்களிப்பு கலந்துரையாடல்' ஒன்றை மேற்கொள்வதற்கான உடன்பாடும் எட்டப்பட்டது.

ஆனாலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதென்பது மிகவும் சிக்கலுக்குரிய விடயமாகும். போரால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களின் நாளாந்த வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தாதவிடத்து இவ்வாறான நிதித்திட்டங்களில் எவ்வித பயனும் கிடைக்காது என்பதே முக்கியமானதாகும்.

இந்த அடிப்படையில், வடக்கு-கிழக்கு மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளாது மேற்கொள்ளப்படும் எந்தவொரு கோட்பாடு சார் சீர்திருத்தங்களும் ஒருபோதும் வெற்றியளிக்காது என்பதே இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கை அனைத்துலக சமூகத்திடமிருந்து உதவிகளைத் தொடர்ச்சியாகப் பெறும் அதேவேளையில், சிறிசேனவும் அவரது அரசாங்கமும் முழுமையான நிலையான நிதிச் செயற்பாடுகளை உள்ளடக்கி ஆழமான சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வலுவான பணியை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையால் உரிமை கோரப்படும் 'ஜனநாயக மாற்றம்' என்பது இன்னமும் முடிவுறாத ஒன்றாகவே காணப்படுகிறது. இது பூரணமாக நிறைவேற்றப்படுவதற்கு இன்னமும் நீண்ட காலம் உள்ளது என்பது தவிர்க்க முடியாத உண்மையாகும்.

நித்தியபாரதி

# நல்லிணக்கம் தொடர்பில் கருத்தறிய இணையத்தளம்

## பேச்சாளர் மஹிசினி தெரிவிப்பு

(கொழும்பு)

**நல்லிணக்கம் மற்றும் பொறிமுறை தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள அடுத்த மாதம் முதல் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இதற்காக இணையத்தளம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது. உறுதியளிக்கப்பட்ட உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் மக்களின் கருத்துக்கள் பெறப்படவுள்ளன.**

இந்த இணையத்தின் மூலம் எவரும் சுதந்திரமாக தமது கருத்துக்களை பதிவு செய்ய முடியும் என்று வெளியுறவுத்துறைப் பேச்சாளர் மஹிசினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

இரண்டாவது கட்டமாக இராணுவத்தினரின் குடும்பங்கள், காணாமற் போனோரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் மத்தியில் கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன.

இலங்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டும் வகையில் நல்லிணக்க பொறிமுறை தொடர்பில் இணைப்புச் செயலகம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்று அமைச்சரவை அண்மையில் தீர்மானித்தது.

இதன் அடிப்படையில் கலந்துரையாடல்கள் அவசியம் என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டதன் பேரில் இந்த நடவடிக்கைகள் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே இலங்கையில் தீர்வு ஒன்றை எட்ட அனைத்துத் தரப்பினரையும் இணைத்து செயற்பட திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உறுதியளித்திருந்தமைக்கு அமைய இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பன குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பட்ஜெட்டின் உண்மை நிலைமை 3 மாதங்களில் அம்பலமாகும்

### உதய கம்மன்பில தெரிவிப்பு

வரவு செலவுத்திட்டத்தின் உண்மை நிலைமை எதிர்வரும் மூன்று மாதங்களில் அம்பலமாகும் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களை செய்ததன் மூலம் அரசாங்கத்தின் பலவீனமான பொருளாதாரக் கொள்கை முழு உலகிற்கும் வெளிச்சமாகியுள்ளது.

எதிர்வரும் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் பற்றி மக்கள் அறிந்துகொள்வார்கள்.

வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் திருத்தங்கள் செய்ய முடியும் என அரசாங்கம் தனது பிழைகளை மூடி மறைத்துக்கொள்ள முயற்சிக்கின்றது.

கடந்த அரசாங்கம் எதேச்சதிகார போக்கில் செயற்பட்டதாகவும் வரவு செலவுத்திட்டத்தில் திருத்தங்கள் செய்யவில்லை எனவும் தற்போதைய அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

உண்மையில் இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் குறைபாடுகளை மூடி மறைக்கவே இவ்வாறு அரசாங்கம் கடந்த அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தி வருவதாக உதய கம்மன்பில வார இறுதி பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 587


அறிவமுதன்




ஜெயமோகன்



ஜீவன்





ஜே.வர்மலன்




சுவர்ணா



சர்மிளா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அழுத்தங்களுக்கு வளையுமா அரசாங்கம்?



அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகள் அடிக்கடி ஏன் இலங்கைக்கு வருகின்றனர் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒரு சூழலில் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவரும் கொழும்புக்கான பயணத்தை மேற்கொண்டு விட்டுத் திரும்பியிருக்கிறார்.

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தெற்கு மற்று தென்கிழக்காசிய நாடுகளுக கான பிரதி உதவிச் செயலாளரான கலாநிதி அமி சீரைட் என்ற அதிகாரியே கொழும்பு வந்திருந்தார்.

இவரது பயணம் குறித்து முன்கூட்டியே அமெரிக்காவோ, இலங்கையோ அறிவித்திருக்கவில்லை. இவரது சந்திப்புகள் தொடர்பான தகவல்கள் வெளியான பின்னர்தான் இப்படியொரு அமெரிக்க உயரதிகாரி கொழும்பு வந்திருக்கிறார் என்ற விடயமே ஊடகங்களுக்குத் தெரிய வந்திருந்தது.

கடந்த 18 ஆம் திகதி அன்று கொழும்பு வந்த கலாநிதி அமி சீரைட் தனது மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய பின்னர்தான் கடந்த திங்கட்கிழமை அதுபற்றிய ஊடக அறிக்கை ஒன்றை அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டிருந்தது.

அந்தக் கட்டத்தில் அமெரிக்காவின் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேஷாய் பிஸ்வால் குடும்பத்துடன் கொழும்பு வந்திருந்தார்.

தனிப்பட்ட பயணமாகவே முன்னறிவிப்பின்றி வந்த அவர் ஒபாமாவின் செய்தியை காவி வந்துள்ளதாகவும், அரசாங்கத் தரப்புடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் பரபரப்பாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்தன

அதனால் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்கள பிரதி உதவிச் செயலர் அமி சீரைட்டின் பயணம் ஊடகங்களில் அவ்வளவாக முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை.

எனினும் இவரது இந்தப் பயணத்தின் நோக்கம் இலங்கையைப் பொறுத்தவரையில் முக்கியமானது. இலங்கை இராணுவத்தின் எதிர்காலப் பங்கு தொடர்பாகப் பேச்சு நடத்துவதே, அமி சீரைட்டின் இலங்கைப் பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.

இலங்கை இராணுவத்தை மறுசீரமைப்பது என்ற விவகாரம் இப்போது சூடு பிடித்திருக்கின்றது என்பது பலருக்குத் தெரியும்.

இது ரணில் விக்ரமசிங்கவோ, மைத்திரிபால சிறிசேனவோ எடுத்த முடிவும் இல்லை. அதேபோல பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட திட்டமுமல்ல.

இது ஒரு சர்வதேச நிகழ்ச்சி நிரல். அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலகினால் ஐ.நாவின் பங்களிப்புடன் முன்வைக்கப்பட்டுள்ள திட்டமே இது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் ஐ.நா அமைதிப்படைக்கு கூடுதல் படையினரை அனுப்பி வைக்க மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருவது யாவரும் அறிந்த விடயம்.

அமெரிக்கா சென்றிருந்த போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதுபற்றி அமெரிக்க அதிகாரிகளிடமும், ஐ.நா பொதுச் செயலரிடமும் கோரிக்கைகளை விடுத்திருந்தார்.

இலங்கை வந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரி உள்ளிட்ட இராஜதந்திரிகளிடமும் அரசாங்கத்தின் தரப்பில் தொடர்ச்சியாக இது வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது.

ஐ.நா அமைதிப்படைக்கு ஐயாயிரம் இலங்கைப் படையினரை அனுப்பும் அரசாங்கத்தின் ஆர்வத்தை, ஐ.நா பொதுச்செயலரும் அமெரிக்காவும் வரவேற்றிருந்தாலும் உடனடியாக அத்தகைய வாய்ப்பை வழங்க இந்த இரண்டு தரப்புகளும் தயாராக இல்லை.

இதற்குப் பிரதான காரணம் இலங்கைப் படையினர் மீதுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள்தான்.

ஐ.நா அமைதிப் படையில் பணியாற்ற இலங்கை இராணுவத்தினர் கடந்த பல ஆண்டுகளாகவே அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர்.

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இராணுவ, கடற்படை, விமானப்படை அணிகள் அமைதிப்படைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதற்கென குகுலே கங்கவில் ஒரு பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது.

அங்கு பயிற்சியளிக்கப்பட்ட பின்னர்தான் ஐ.நா அமைதிப் படைக்கு ஆளணியினர் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

என்றாலும் இதுவரையில் ஐ.நா அமைதிப்படைக்கு அனுப்பி வைக்கப்படும் படையினர் மனித உரிமை மீறல்களில் தொடர்புபட்டுள்ளனரா என்ற ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

போரில் பங்கெடுத்த படைப் பிரிவுகள் படையினர் எந்த தங்குதடையுமின்றி ஐ.நா அமைதிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டு வருகின்றனர்.

ஆனால், கடந்த செப்டெம்பரில் வெளியிடப்பட்ட ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கையிலும், ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையிலும் மனித உரிமை மீறல்களில் தொடர்புடைய படையினரை சர்வதேச கருத்தரங்குகள், பயிற்சிகளிலும் ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளிலும் பங்குபற்றுவதை தடுக்க வேண்டுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியில்தான் இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்பை மறுசீரமைக்கின்ற முயற்சிகளை மேற்குலகம் ஆரம்பித்திருக்கின்றது.

பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு விடயத்தில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஐ.நாவும் கூடுதல் அக்கறை காண்பிக்கின்றன.

கொமன்வெல்த் மாநாட்டுக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மோல்டாவுக்குச் சென்றிருந்த போது பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

அப்போது பாதுகாப்புத்துறை மறுசீரமைப்புத் திட்டத்தைக் கண்காணிக்க புதுடில்லியிலுள்ள பிரித்தானியத் தூதரகத்தில் பணியாற்றும் பாதுகாப்பு ஆலோசகரையும் நியமித்திருந்தார்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரியான கப்டன் ஸ்ருவர்ட் போர்லன்ட், சிறீவென்ஹாம் பாதுகாப்பு அக்கடமியைச் சேர்ந்த லெப். கேணல் ஜம்மி ஹாட்லியுடன் அண்மையில் கொழும்பு வந்த பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படைகளின் தளபதிகளுடன் ஆலோசனைகளை நடத்தியிருந்தார்.

அதன் பின்னரே அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்கள பிரதி உதவிச் செயலர் அமி சீரைட் கொழும்பு வந்தார்.

இவரும் பாதுகாப்புத்துறை மறுசீரமைப்புக்கான திட்டங்கள் குறித்தே முக்கியமாக ஆராய்ந்தார். அத்துடன் ஐ.நா அமைதிப் படையில் இலங்கைப் படையினரின் எதிர்காலப் பங்களிப்புக் குறித்தும் அவர் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அதாவது போர்க்குற்றச்சாட்டுக்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைச் சுமந்திருக்கும், இலங்கை இராணுவத்துக்கு வெள்ளை அடிப்பதே மேற்குலகின் இப்போதைய நோக்கம்.

இதனை இரண்டு காரணங்களுக்காக மேற்குலகம் செய்ய முனைகிறது.

ஒன்று இந்த விடயத்தைக் கருவியாகப் பயன்படுத்தி பொறுப்புக்கூறல் கடப்பாடுகளை நிறைவேற்றச் செய்ய முனைகிறது.

இரண்டு இலங்கையின் பாதுகாப்பு கட்டமைப்புகளில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருப்போரைக் களையெடுக்க நினைக்கிறது.

இந்த இரண்டையும் செய்து விட்டால் இலங்கை இராணுவம் உலகின் மிகச் சிறந்த நிபுணத்துவமும், ஆற்றலும் கொண்ட இராணுவமாக மாற்றப்பட்டு விடும்.

இதற்கான முயற்சிகள்தான் மேற்குலகினால் தீவிரப்படுத்தப்பட்டுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் அறிக்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நிகழ்வுகள், பணிகளில் ஈடுபடுத்தக் கூடாது என்று கூறப்பட்டுள்ள நிலையில், தன்னிச்சையாக கூடுதல் படையினரை ஐ.நா அமைதிப்படையில் சேர்ப்பதை அதிகரிக்க முடியாது.

இதனால்தான் பாதுகாப்புத் துறை மறுசீரமைப்பு என்ற பெயரில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை களையெடுக்க முயற்சிக்கப்படுகிறது.

அதேவேளை, இன்னொரு பக்கத்தில் பொறுப்புக்கூறல் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கான ஒரு நிபந்தனையாகவும் இந்த விடயம் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் போலவே பாதுகாப்புத் திணைக்களமும் நம்பகமான பொறுப்புக்கூறல், பொதுமக்களின் காணிகளை மீள ஒப்படைத்தல் உள்ளிட்ட விடயங்கள் அவசியம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், இலங்கை அரசாங்கத்துடன் கடந்த காலங்களில் முட்டுப்பட்டுக்கொண்டிருந்தாலும் பாதுகாப்புத் திணைக்களம் இலங்கைப் படைகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட தொடர்புகளை தொடர்ந்து பேணியே வந்திருக்கிறது.

இப்போது இராஜாங்கத் திணைக்களமும் பாதுகாப்புத் திணைக்களமும் ஒரே தொனியில் நம்பகமான விசாரணைப் பொறிமுறை மற்றும் காணிகளை மீளளித்தல் போன்ற விடயங்களில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க முனைந்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

ஏற்கனவே கொழும்பு வந்திருந்த ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் எதிர்கால இராணுவ உறவுகளில் ஒத்துழைப்பை விரிவாக்குவதற்கு முன்னர், பொறுப்புக்கூறல் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்.

இப்போது அமி சீரைட்டும் அதனையே குறிப்பிட்டிருக்கிறார். ஐ.நா அமைதிப்படைக்கு கூடுதல் ஆளணியை அனுப்பும் அரசாங்கத்தின் திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்றால் மேற்குலகின் இந்த இரண்டு நிபந்தனைகளுக்கும் அரசாங்கம் இணங்கியே ஆக வேண்டியிருக்கும்.

அடுத்தடுத்து கொழும்பு வந்த அமெரிக்க அதிகாரிகள், இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்தை இணங்க வைக்கவும், பாதுகாப்புத் தரப்பை வழிக்குக் கொண்டு வருவதற்கும் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றனர்.

இலங்கை அரசாங்கமும் படைத்தரப்பும் இந்த விடயங்களில் எந்தளவுக்கு வளைந்து கொடுக்கப் போகின்றன என்பதைப் பொறுத்தே, அடுத்தடுத்த கட்டங்கள் தீர்மானிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

**ஹரிகரன்**

# படைப்பாற்றலை வளர்க்க ஏதுவான சூழல் எது?

## தொழில் ரகசியம்



'பரிணாம வளர்ச்சி' கோட்பாட்டை எழுத 'சார்லஸ் டார்வினுக்கு' பல வருடங்கள் தேவைப்பட்டது. சாப்பாடு முடித்த கையோடு வாயில் வெத்தலை பாக்குடன் விடிய விடிய எழுதிய புத்தகமல்ல அது. உலக ஆராய்ச்சி பலவற்றை பல ஆண்டுகள் படித்து, கரைத்துக் குடித்து, `Galapagos" போன்ற உலகின் மூலை முடுக்குகளை தேடி சென்று தான் பார்த்ததை, கவனித்ததைப் பக்கம் பக்கமாய் குறிப்பு எடுத்து, எழுதிய அனைத்தையும் அலசி ஆராய்ந்து அதன் அர்த்தங்களைத் தெரிந்து தன் எண்ணங்களை செதுக்கியதன் விளைவே பரிணாம வளர்ச்சி.

அப்புத்தகமே அவர் எண்ணங்களின் பரிணாம வளர்ச்சி என்று கூறலாம். சட்டுன்னு எழுதி முடிங்க என்று கூறியிருந்தால் டார்வினால் இப்படைப்பாற்றலை படைத்திருக்க முடியுமா?

1970ல் சந்திரனுக்கு சென்ற 'அப்போலோ 13' விண்கலத்தில் விபத்து ஏற்பட்டு அதன் ஏர் ஃபில்ட்ரேஷன் சிஸ்டம் பழுதடைந்தது. கேபினில் கார்பன்டையாக்ஸைடு பெருகத் தொடங்கியது. விரைவில் சரி செய்யாவிட்டால் மாலுமிகளின் உயிருக்கு ஆபத்தென்ற நிலை. நாசா கட்டுப்பாட்டு அறையில் விஞ்ஞானிகள், பொறியாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் ஒன்று சேர்ந்தார்கள். புதிய ஃபில்ட்ரேஷன் சிஸ்டம் உருவாக்கி செயல்பட வைக்கும் வழியை அசுர வேகத்தில் கண்டுபிடித்தார்கள்.

அது அப்பழுக்கில்லா சிஸ்டம் இல்லைதான். ஆனால் ஆபத்துக்கு பாவமில்லாத முறைமை. அதை மாலுமிகளுக்கு




விளக்க, அதுபோல் ராக்கெட்டில் ஃபில்ட்ரேஷன் சிஸ்டத்தை அவர்கள் உருவாக்க ஆபத்து தவிர்க்கப்பட்டு உயிர்கள் காப்பாற்றப்பட்டன. நேரமில்லாத பதற்ற சூழலில் சாத்தியப்பட்ட படைப்பாற்றல். நிதானமா செய்யுங்கப்பா என்று கூறியிருந்தால் இது சாத்தியப்பட்டிருக்குமா? உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்குமா?

படைப்பாற்றல் (Creativity) என்பது பரபரவென்று பறக்கும் போது பிறக்கும் ஒன்றா, பதற்றச் சூழலில் பிரசவிக்கும் ஒன்றா? படைப்பாற்றலை வளர்க்க ஏதுவான சூழல் எது? அதை வளர்க்க என்ன செய்ய வேண்டும்? பணியாளர்களுக்கு அழுத்தம் கொடுப்பதை நிர்வாக உத்தியாக்கினால் பணியாளர்கள் படைப்பாற்றலுடன் பணிபுரிய முடியுமா? தங்கள் மீதே அழுத்தம் கொடுத்துக் கொண்டால் நிர்வாகத்தின் படைப்பாற்றல்தான் அதிகரிக்குமா?

இதற்கான விடைகளை ஆறு மாதம் தீர ஆராய்ந்து 'ஹாவர்ட் பிசினஸ் ரெவ்யூ'வில் 'Creativity under the gun' என்று கட்டுரையாக எழுதினார்கள் 'தெரஸா அமபில்', 'கான்ஸ்டன்ஸ் ஹேட்லி', 'ஸ்டீவன் க்ரேமர்' ஆகியோர். பணியில் படைப்பாற்றல் தேவைப்படும் ஏழு நிறுவனங்களை தேர்ந்தெடுத்து 200 பணியாளர்களை பார்த்து, பேசி அவர்கள் அனுபவங்களை சேகரித்து எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை.

நேரமில்லாத பதற்ற சூழல் நிறைந்த நாட்களில் படைப்பாற்றல் அதிகமாகவும் சில நாட்கள் வெளிப்படாமலும் இருந்தது. அது போல் நேரம் இருந்து, பதற்ற சூழல் இல்லாத நாட்களில் படைப்பாற்றல் அதிகமாகவும் சில நாட்கள் வெளிப்படாமலும் இருந்தது. பணியில் நிலவிய இந்த நான்கு நிலைகளை பிரித்து ஆராய்ந்தார்கள்.

**நேரமில்லா பதற்ற சூழல் / படைப்பாற்றல் அதிகம**

நேரமில்லா பதற்ற சூழலிலும் படைப்பாற்றல் அதிகமிருந்த நாட்களை குறைந்திருந்த நாட்களோடு ஒப்பிடுகையில் சில வித்தியாசங்களை உணர்ந்தார்கள். வேலையில் தெளிவான இலக்கு இருந்தது. குறுக்கீடுகள், கவனச் சிதறல் இல்லாமல் பணியில் கவனம் செலுத்தும் நிலை நிலவியது. பணியின் அர்த்தமும் அவசியமும் புரிந்து ஒரு இலக்கில் (Mission) ஈடுபட்டிருக்கிறோம் என்று பணியாளர்கள் உணர்ந்திருந்தார்கள். உணர வைக்கப்பட்டிருந்தார்கள். இதனால் பணியில் தங்களை ஐக்கியப்படுத்தி ஒரு பாசிட்டிவ் உத் வேகத்துடன் அவர்களால் பணிபுரிய முடிந்தது. செய்யும் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து மேலாளர்களும் அவர்கள் பணியில் குறுக்கிடும் வகையில் சிறிய, முக்கியமில்லாத பணிகளை தரவில்லை. படைப்பாற்றலுடன் அப்போலோ 13 காப்பாற்றப்பட்டது இப்படித்தான்.

**நேரமில்லா பதற்ற சூழல் / படைப்பாற்றல் இல்லை**

நேரமில்லா பதற்ற சூழலில் பணியில் ஃபோகஸ் இல்லாத நாட்களில் படைப்பாற்றல் இருப்பதில்லை என்பதையும் கண்டார்கள். இதுபோன்ற சூழலில் வேலை செய்வது ட்ரெட்மில் (Treadmill) மீது ஓடுவது போல என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஜிம்மில் மோட்டார் பொறுத்தப்பட்ட மேடை போன்ற இயந்திரம் மீது நின்ற இடத்திலேயே ஓடுவார்களே, அதுதான் ட்ரெட்மில். ஏன் ஓடுகிறோம், எங்கு ஓடுகிறோம் என்று தெரியாமல் மூச்சிரைக்க ஓடி கடைசியில் கிளம்பிய இடத்திலேயே இருப்பது போல் இச்சூழலில் பணி நடைபெறுகின்றன. இந்த இலட்சணத்தில் எங்கிருந்து படைப்பாற்றல் பிறக்கப் போகிறது. இச்சமயங்களில் நிர்வாகம் பணியின் முக்கியத்துவத்தை விளக்கி, அனைவரின் முயற்சியை ஒருமுகப்படுத்தினால் தான் படைப்பாற்றல் பெருகும்.

**நேரமின்மை, பதற்ற சூழல் இல்லை / படைப்பாற்றல் அதிகம்**

நேரம் இருந்து பதற்ற சூழல் இல்லா நாட்களில் படைப்பாற்றல் பெருகுவது எதனால் என்று ஆய்வாளர்கள் ஆராய்ந்த போது சில உண்மைகள் புரிந்தது. அச்சமயங்களில் பணி பிரச்சினையால் கட்டுண்டு கிடக்காமல் அதை எப்படி சரி செய்து, புதுமைகளை எப்படி படைப்பது என்ற வைராக்கியத்தோடு பணியாளர்கள் பணியாற்றியதை கண்டார்கள். நேரக் கெடு இல்லாத நேரத்தில் அனைவரும் ஒரு சாகச பயணம் (Expedition) செல்வது போல் புதுமையை படைக்கவேண்டும் என்ற நோக்கத் தோடு பணி புரிந்தால் படைப்பாற்றல் பெருகும் என்கிறார்கள்.

**நேரமின்மை, பதற்ற சூழல் இல்லை / படைப்பாற்றல் இல்லை**

கால்லக் கெடுவோ பதற்ற சூழலோ இல்லாத சமயங்களில் படைப்பாற்றல் இல்லாமல் இருந்ததையும் கண்டார்கள். இதுபோன்ற சமயங்களில் ஏதோ வேலைக்கு வந்தோம், என்னவோ செய்தோம் என்று ஏனோதானோ என பணி நடந்தன என்கிறார்கள். இந்நிலையை 'ஆட்டோ பைலட்' (Autopilot) என்கின்றனர். சொகுசு கார்களை குறிப்பிட்ட வேகத்தில் செலுத்தி லாக் செய்தால் அக்சிலரேட்டரை மிதிக்காவிட்டாலும் கார் அதே வேகத்தில் தானாக செல்லும். அது போல் இலக்கில்லாமல், ஏதோ வென்று பணி செய்தால் படைப்பாற்றல் பிறப்பதில்லை என்கிறார்கள். இச்சமயங்களில் நிர்வாகம் அக்சிலரேட்டரை மிதித்து நேரம் உண்டு, உங்களுக்கு திறமை உண்டு என்று உத்வேகமளித்து இலக்கை நிர்ணயித்து தட்டிக் கொடுத் தால் மட்டுமே படைப்பாற்றல் பெருகுகிறது என்கிறார்கள்.

**இதனால் அறிவிப்பது என்னவென்றால...**

தீவிர அறிவாற்ற செயலாக்கம் (Complex cognitive processing) நிறைய நேரம் தேவைப்படும் சமாச்சாரம். நேரம் தராமல் பதற்ற சூழலில் பணியாளர் தலையில் துப்பாக்கி வைத்து 'படைப்பாற்றல் பெருக்கட்டும் என்றால் ஒரு எழவும் பெருகாது. நிர்வாகம் சரியான சூழ்நிலையை உருவாக்கினால் மட்டுமே படைப்பாற்றல் பெருகும்.

ஒரு நாள் அழுத்தம் அதிகமாகி வேலை சரியாய் நடக்கவில்லை என்றால் அடுத்த நாள் சரியாகிவிடும் என்றும் நினைக்கக்கூடாது. இரவு தண்ணியடித்தால் மறு நாளும் தலை வலிப்பது போல் அடுத்த நாளும் வேலையில் 'ப்ரெஷர் ஹேங்ஓவர்' (Pressure Hangover) இருக்கும். படைப்பாற்றல் குறையும். சொல்லியிருக்கிறார்கள்.

எல்லா நிறுவனங்களிலும் குறைவான நேரத்தில் புதுமை புகுத்தி பணிபுரிய வேண்டிய சந்தர்ப்பங்கள் இருந்தே தீரும். அப்பேற்பட்ட சமயங்களில் நிர்வாகம் நேரமின்மையின் காரணத்தையும், பணியின் முக்கியத்துவத்தையும் பணியாளர்களிடம் விளக்க வேண்டும். அச்சமயங்களில் பணியாளர்களிடம் வேறு சில்லரை வேலைகள் தந்து படுத்தாமல் இருந்தால் படைப்பாற்றல் பெருகும்.

சுருக்கமாய் சொல்லவேண்டும் என்றால், ஆட்டோ பைலட், ட்ரெட்மில் போன்ற சூழலில் பணி நடந்தால் படைப்பாற்றல் கண்டிப்பாய் இறக்கும். மிஷன், எக்ஸ் பெடிஷன் போன்ற சூழலை உருவாக்கினால் படைப்பாற்றல் பறக்கும்.

நெற்றிப் பொட்டில் துப்பாக்கியை வைத்து 'ஓடு' என்று சுடுவதற்கும், ரேஸ் ட்ராக்கில் நிற்க வைத்து 'ஓடு' என்று சுடுவதற்கும் உள்ள வித்தியாசம் தான் படைப்பாற்றல்!

# வாகன நிதித்துறையை நிறுவிய சர்வோதய பைனான்ஸ்




இலங்கை மத்திய வங்கியின் 2011 நிதி வர்த்தக சட்ட எண் 42 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனமான சர்வோதய டெவலப்மென்ட் பைனான்ஸ் நிறுவனமானது SDF ஓட்டோ பைனான்ஸ் டிபார்ட்மென்ட் எனும் பெயரில் வாகன நிதி துறையை நிறுவியதன் மூலம் இன்னுமொரு மைல்கல்லை அடைந்துள்ளது.

மைக்ரோ மற்றும் SME பிரிவினரை இலக்காக கொண்டு அவர்களது வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கான நிதித் தேவையை வர்த்தக வாகனங்களிற்கான குறிப்பிட்ட வட்டியும் சந்திப்பதில் அக்கறை காட்டுவதுடன் இந்த துறையானது ஊதியம் பெறும் ஊழியர்களை குறித்தும் கவனம் செலுத்தும்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,884.69 | 6,858.64 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,623.91 | 3,603.9 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 3,005.713

***உயர்வடைந்த பங்குகள்(ரூ)*** ஹொட்டல் ஹோப்.(28.00),பிசி பார்மா (0.70), சிஜஎப்எல்(0.80),கூஜே(58.80),சிஏஎல் பினான்ஸ்(14.50).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ)*** ஒரியன்ட் காமன்ஸ்(8.50), பொகவந்தலாவ (10.60), மஸ்கெலிய(8.90), சிரி லான்ட்(47.30), லேக்ஹவுஸ் பிறின்ட் (110.00).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

# 2016 சிறப்பாக இருக்கும் இலங்கை வர்த்தக சமூகம் நம்பிக்கை

2016ஆம் ஆண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை குறிப்பிட்ட அளவில் மேம்படுத்த முடியும் என இலங்கை வர்த்தக சமூகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் நாட்டின் நகரங்களுக்கு இடையேயான வீதிகள் மேலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.2016-ம் ஆண்டு குறித்து நம்பிக்கைஇதன் மூலம், நகரங்களுக்கு இடையேயான வீதி போக்குவரத்துக்கள் சீர்செய்யப்படுவதுடன், பயண நேரத்தை கணிசமான அளவில் மட்டுப்படுத்தவும் முடியும் என குறிபபிடப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்தில், உலகளாவிய வாகன உற்பத்தியாளர்கள் மின்சாரம் மற்றும் ஹய்பிரய்ட் முறைமையிலான வாகனங்களையும் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளனர்.

இந்த நிலையில், இலங்கையில் வாகன இறக்குமதியாளர்கள் இப்படியான வாகனங்களை இறக்குமதி செய்வதில் அதிகம் ஆர்வம் கொண்டுள்ளதாக வாகன இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இலங்கை வர்த்தக சம்மேளனம் 2016-ம் ஆண் டில் பல்வேறு வர்த்தக திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் மங்கள பீ.பி. யாப்பா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் வெளிநாடுகளுடனான வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில், வர்த்தக மற்றும் முதலீட்டு பிரதிநிதிகளுடன் இணைந்து செயல்படுதல், மற்றும் பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து செயல்படுதல் என்பனவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

The Ceylon Chamber of Commerce

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 141.45 | 145.68 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 208.92 | 216.69 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.74 | 160.13 |
| சுவிஸ் பிராங் | 142.08 | 148.25 |
| கனேடிய டொலர் | 100.93 | 105.31 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.36 | 106.33 |
| சிங்கப்பூர் டொலர் | 100.24 | 104.28 |
| ஜப்பான் யென் | 1.16 | 1.21 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.09 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# பிரகீத் கடத்தல் தொடர்பில் மூவரிடம் விசாரணை



ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் கடத்தல் தொடர்பில் அரச புலனாய்வு பிரிவின் தலைவர் எஸ் சாலிஹ், முன்னாள் அரச புலனாய்வு பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரன, முன்னாள் இராணுவ தளபதி ஜெகத் ஜெயசூரிய ஆகியோர் இந்த வாரத்தில் விசாரணை செய்யப்படவுள்ளனர்.

இந்த விசாரணைகளின் போது முக்கிய வர்த்தகர்களின் கடத்தல்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அரச புலனாய்வு பிரிவின் தலைவரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளமை தொடர்பில் சீஐடி, ஜனாதிபதிக்கு விளக்கம் அளித்துள்ளது.

ஏற்கனவே பிரகீத் கடத்தல் தொடர்பில் உயர் இராணுவ அதிகாரிகள் இருவர் உட்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (இ-7)

# சுவீடனில் வேலை நேரம் 6 மணிநேரமாக குறைப்பு

சுவீடனில் தினசரி வேலை நேரம் படிப்படியாக 6 மணி நேரமாக குறைக்கப்பட்டு வருகிறது. உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதும் மக்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதுமே இதன் நோக்கம் ஆகும்.

ஏற்கனவே நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு நிறுவனங்கள் இந்த வேலை நேர குறைப்பை அமுல்படுத்தி உள்ளதாக சயன்ஸ் அலர்ட் இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது. சில வைத்தியசாலைகளில் பணியாற்றும் டாக்டர்கள், தாதியர்களுக்குக் கூட இந்த திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. (இ-7)

# இராணுவ வாகனம் மோதி இளம் குடும்பஸ்தர் படுகாயம்

இராணுவ வாகனம் மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் பூநகரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

பூநகரி நாலாம் கட்டையைச் சேர்ந்த கனகேந்திரன் ரஜீன்குமார் (வயது -39) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9 மணியளவில் மன்னார் றோட் வாடியடி பகுதியில் இடம்பெற்றது.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த பிரஸ்தாப குடும்பஸ்தரை பின்னால் வேகமாகச் சென்ற இராணுவ வாகனம் மோதி மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றது என தெரிவிக்கப்படுகின்றது. (இ-5,30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 170 | 240 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 120 | 80 | 60 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 1000 | 700 | 700 | 800 | 800 | 1000 |
| தக்காளி | 200 | 140 | 120 | 150 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 50 | 50 | 40 |
| கோவா | 150 | 180 | 140 | 160 | 200 | 140 |
| கரட் | 240 | 300 | 220 | 200-400 | 300 | 250 |
| பூசணி | 80 | 80 | 40 | 60 | 60 | 50 |
| புடோல் | 140 | 150 | 100 | 120 | 160 | 140 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 50 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 160 | 180 | 140 | 80-120 | 800 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 75 | 100 | 90 | 80 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 300-500 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 90 | 150 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 250 | 220 | 230 | 240 | 250 |
| லீக்ஸ் | 250 | 200 | 150 | 160-200 | 300 | 200 |
| பீற்றூட் | 200 | — | — | — | 240 | — |
| கறிமிளகாய் | 400 | — | — | 300-500 | 800 | 500 |
| முருங்கைக்காய் | 500 | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | — | — | 300 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 250 | 100 | 150 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 400 | 40 | 60 | 20 |
| தேசிக்காய் | 150 | 120 | 300 | 200 | 80 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-50 | 50 | 30-45 | 50 |
| இராசவள்ளி | 200 | 200 | — | 150 | 150 | 240 |
| வெங்காயப்பூ | 400 | 350 | — | 200 | — | 300 |
| முள்ளங்கி | 140 | 150 | — | 100 | 120 | 150 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 25 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 10 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | — | 50 | 100 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கொழும்பு நகருக்குள் விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல் 64

...15 பேரும் உடல் கருதி அதே இடத்தில் பிணமானார்கள்.

**ரயில் எரிப்பு: 250 பேர் பலி**

இலங்கைக்கும தமிழ் நாட்டுக்கும் நேரடி டெலிபோன் தொடர்பு இன்னும கிடைக்கவில்லை. ஆனால் சிங்களவர் அட்டூழியம் பற்றி இலங்கையில் இருந்து லண்டனுக்குத் தகவல் கிடைத்து, அங்கிருந்து சென்னைக்குத் தெரிய வருகின்றன.

காமராஜ் காங்கிரஸ் தலைவர் நெடுமாறனுக்கு, லண்டனில் இருந்து கிடைத்த தகவல்கள் வருமாறு:-

**அகதிகள்**

திருகோணமலையில் சிங்களவெறியர்களால் தாக்கப்பட்ட தமிழர்கள் வீடு இழந்து அங்குள்ள முகாம்களில் தங்கியிருந்தனர். அவர்களிடம் இராணுவ அதிகாரிகள் சென்று திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு ரயில் செல்கிறது. அதில் யாழ்ப்பாணத்துக்குச் சென்றுவிடுங்கள். இங்கு இருப்பது ஆபத்தானது என்று கூறினார்கள். இதை நம்பி ஆயிரக்கணக்கான தமிழர்கள் அந்த ரயிலிலில் ஏறிச் சென்றனர்.

**குண்டுவீச்சு**

ரயில் திருகோணமலையைத் தாண்டிப்போய்க்கொண்டிருந்தபோது இராணுவத்தினர் திடீரென்று ரயில் மீது வெடிகுண்டு வீசி தாக்கினார்கள். பிறகு தீ வைத்து ரயிலைக் கொளுத்தினார்கள்.

இந்த வன்முறை சம்பவத்தில் 250 பேர் அந்த இடத்தில் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். அவர்கள் படுகாயத்துடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

இவ்வாறு நெடுமாறன் கூறினார்.


பிரிவினை கேட்டால் மரண தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டம், இலங்கைப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழர் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டது.

இலங்கையில் தனி நாடு கேட்கும் தமிழர்களை ஒடுக்குவதற்காக இலங்கை அரசு பிரிவினைத் தடைச்சட்டத்தைக்கொண்டு வர முடிவு செய்தது. இதுகுறித்து இலங்கை அரசு செயலாளர் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

அதில், இலங்கையில் யாராவது தனிநாடு கேட்டால் அவர்களுக்கு மரண தண்



டனை விதிக்க வகை செய்யும் சட்டம் ஒகஸ்ட் 4 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். இலங்கை பாராளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியான தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியை (தமிழர் கட்சி)



அடியோடு தடை செய்யும் எண்ணம் இலங்கை அரசுக்கு இல்லை. அந்தக் கட்சி எம்.பி.க்கள், பிரிவினை பற்றி பேசமாட்டோம்.

பிரிவினை நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டோம்; தனிநாடு கேட்பவர்களுக்கு ஆதரவு தெரிவிக்க மாட்டோம் என்று பாராளு மன்றத்தில் அறிவித்து உறுதிமொழி எடுக்க வேண்டும் இல்லாவிட்டால் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி தடை செய்யப்படும் என்று கூறப்பட்டிருந்தது.

இதற்கு இலங்கை முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதுபற்றி அவர் கூறுகையில், தற்போது இலங்கையில் நடைபெற்று வரும் கலவரத்தைத் தடுத்து நிறுத்த அரசாங்கத்தால் முடியவில்லை.

ஆகையால் ஏதோ சில காரணங்களைச் சொல்லி பிரிவினைத் தடைச்சட்டத்தைக்கொண்டு வருகிறார்கள். அந்தக் காரணங்கள் உண்மையானவை அல்ல; ஏற்றுக் கொள்ளவும் முடியாதவை என்றார்.

இலங்கை அரசு அறிவித்தபடி பிரிவினைத் தடைச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருந்ததாவது:-

**மரண தண்டனை**

1.பிரிவினை கேட்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.

2.தனிநாடு கேட்பவர்கள் பிரஜா உரிமையை இழப்பார்கள். அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்க முடியாது. அவர்களின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும்.

3.தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தும் கட்சிகள் தடைசெய்யப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

இந்தச் சட்டத்தை நிறைவேற்ற, இலங்கை பாராளுமன்றத்தின் விசேட கூட்டத்தை இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா கூட்டினார்.

இந்தக்கூட்டம் 1983 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கியது. இந்தச் சட்டத்தின் மீது இடைவெளி இல்லாமல் இரவு 10 மணி வரை விவாதம் நடந்தது.

**பிரேமதாசா பேச்சு**

சட்டத்தைத் தாக்கல் செய்து இலங்கைப் பிரதமர் பிரேமதாசா பேசினார். அவர் கூறியதாவது:- புதிய சட்டத்தின்படி, பிரிவினை கேட்பது தடை செய்யப்படுகிறது.

இப்போதுள்ள சட்டப்படி கூட யாரும் பிரிவினை கேட்க முடியாது.



(தொடரும்)

மகத்தான சாதனைகள் அனைத்தும் முடியும்– நடக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தான் ஆரம்பமாகின்றன. – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்களுக்கான தீர்வில் வெளிப்படைத்தன்மை வேண்டும்

தமிழ் மக்கள் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர் நேற்றையதினம் நடைபெற்ற போது தமிழர் பிரச்சினைக்கான தீர்வுத் திட்ட வரைபு ஒன்ற்ற தயாரிப்பதற்கான நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டமை காத்திரமான பணி எனலாம்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ன? என்பதை பாதிக்கப்பட்ட மக்கள் தயாரிப்பதே பொருத்துடையதாகும். இந்தப் பணியை எங்களிடம் உள்ள துறைசார் நிபுணர்களைக் கொண்டு எங்கள் மண்ணில் இருந்தவாறே தயாரிப்பதென்பது தமிழ் மக்களின் ஆழ்ந்த எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்வதாக அமையும் என நம்பலாம்.

அதேநேரம் தமிழ் மக்கள் பேரவை ஒரு அரசியல் கட்சியோ அல்லது கூட்டமைப்புக்கு எதிரான மாற்றுத் தல்லமையோ அல்ல என்பதை தமிழ் மக்கள் பேரவை மிகத் தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளது.

இருந்தும் தமிழ் மக்கள் பேரவையை ஒரு அரசியல் கட்சியாகப் பார்க்கின்ற செயல் மக்களின் ஜனநாயகச் செயற்பாட்டிற்கு குந்தகம் விளைவிப்பதாகும். இத்தகைய ஜனநாயக விரோதச் செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

அரசியலுக்கு அப்பால் தமிழ் மக்களின் நலன்களை பேணும் வகையில் அமைக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக மாறி வருவதைக் காண முடிகிறது.

மக்கள் இயக்கம் பலமானதாக– வலிமையானதாக இருக்கும் போது தமிழ் அரசியல் தலைமைகளின் செயற்பாடுகள் ஆரோக்கியமானதாக அமைவது தவிர்க்க முடியாதது.

அதேவேளை தமிழ் மக்கள் பேரவையின் உதயம் இனப்பிரச்சினைக்கான தீர்வை எந்த வகையிலும் பாதித்து விடக் கூடாது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் நலன்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாடு எந்த வகையில் அரசியல் தீர்வை பாதிக்கும் என்பதை சம்பந்தர் சொல்ல மறந்தமை எதற்காக? என்ற கேள்வி எழுவதும் நியாயமானதே.

2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று தேர்தல் பிரசாரத்தின் போது சம்பந்தர் கூறியிருந்தார்.

நல்லது. 2016இல் தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்த்து வைக்கக் கூடியதான தீர்வு கிடைக்குமாக இருந்தால் அது மிகப்பெரும் பேறு எனலாம். அதற்காக நாம் அனைவரும் பாடு படவேண்டும்.

அதேசமயம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வாக இலங்கை அரசு வழங்கவுள்ள தீர்வுத்திட்டம் என்ன? அதில் இருக்கக்கூடிய அம்சங்கள் என்ன என்பதை தமிழ் மக்கள் அறிய நினைப்பதில் எந்த பிழையுமில்லை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்களுக்கான தீர்வை அறிவது அவர்களின் சுதந்திரம். இதைவிடுத்து தீர்வுத் திட்டத்தை இப்போது வெளியிட்டால் சிங்கள மக்கள் குழம்பி விடுவார்கள் என்றால், சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளாத தீர்வை இலங்கை அரசு அதிரடியாகத் தமிழர்களுக்குத் தரப்போகிறதா என்ன?

ஆக, சிங்கள மக்கள் எதிர்ப்பார்கள்; விமல் வீரவன்ஸ குழப்புவார் என்பதெல்லாம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இருந்து இலங்கை அரசு தப்பித்துக் கொள்வதற்குக் கையாளும் தந்திரம்.

சிங்களவர்கள் எதிர்ப்பார்கள்; விமல் வீரவன்ஸ எதிர்ப்பார் என்றால் இந்த யுகத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாமல் போகும். எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதில் வெளிப்படைத்தன்மை மிகவும் அவசியம்.

இங்கு தமிழ் மக்களுக்கோ சிங்கள மக்களுக்கோ தீர்வுத்திட்டத்தை மறைப்பது மோசமான செயல். அதற்குள் எந்த இராஜதந்திரமும் இருக்க முடியாது என்பதால் தீர்வு என்ற விடயத்தில் வெளிப்படைத்தன்மை மிகவும் அவசியமாகும்.

## மீன்பிடிக்க சென்றவர் சடலமாக மீட்பு!

(கொழும்பு)

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ பிரிவிற்குட்பட்ட உப்பாறு பாலத்துக்கு அருகில் தலையில் காயங்களுடன் கரையொதுங்கிய சடலமொன்றை நேற்று காலை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆலங்கேணி கிராமத்தைச் சேர்ந்த 05 பிள்ளைகளின் தந்தையான ஏகாம்பரம் அன்புச்செல்வன் (48) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிண்ணியா, கொட்டியாரக்குடா ஆற்றில் மீன்பிடிப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை தனது நண்பர்கள் இருவருடன் சென்ற இவர், ஆற்றில் வலையை வீசி விட்டுச் சென்றுள்ளார்.

பின்னர், அவ்வலையில் மீன்கள் அகப்பட்டுள்ளதா எனப் பார்வையிடச் சென்றபோதே இவர் காணாமல் போயுள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், இவரது சடலம் கரையொதுங்கியதாக பொலிஸார் கூறியுள்ளனர். (செ-12)

## பட்டாசு விபத்தற்ற நத்தார் கொண்டாட்டம்

(கொழும்பு)

நத்தார் போன்ற பண்டிகைக் காலங்களில் பட்டாசு மற்றும் வாணவெடி விபத்துகளால் ஏராளமானோர் காயமடைந்து சிகிச்சைக்கு வருவது வழக்கமாக இருந்த போதிலும் இவ்வருட நத்தாரின் போது அவ்வாறான அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை என கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 24ஆம் திகதி நள்ளிரவு முதல் 25ஆம் திகதி பிற்பகல் வரை பட்டாசுகள் மற்றும் வாணவெடிகளால் பாதிக்கப்பட்ட எவரும் தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்படவில்லை என அவ் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், ஏனைய விபத்துகளால் பாதிக்கப்பட்ட 219 பேர் இந்தக் காலப் பகுதிகளால் சிகிச்சைக்காக தேசிய வைத்தியசாலைக்கு வந்திருப்பதாகவும் அவர்களில் 48 பேர் வீதி விபத்துகளாலும், 37 பேர் வீடுகளில் நடந்த விபத்துகளாலும், 64 பேர் தவறி விழுந்ததாலும், 12 பேர் ஏனைய இம்சைகளாலும் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவித்த அவர், கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் நடந்த விபத்துகள் 5 சத வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (செ-12)

## ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் ஒளிவிழா நாளை செவ்வாய்க்கிழமை யாழ் கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திருமதி ஜெயமணி ஜோசவ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக விவசாய கமநல சேவைகள் மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஸ், யாழ்ப்பாண புனித மாட்டினார் குருமட அதிபர் அருட்தந்தை அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் நா. குமணதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது ஆசியுரையினை யாழ்ப்பாணம் புனித மாட்டினார் குருமட அதிபர் அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் வழங்கவுள்ளார். (செ-5)

## மைக்ரோன் 20ற்கும் குறைவான பொலித்தீன் பாவனைக்கு தடை!

(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மைக்ரோன் 20இற்கும் குறைவான பொலித்தீன் பாவனையை நாட்டிற்குள் தடை செய்யவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

பாரியளவில் இடம்பெறும் சூழல் மாசடைதலை தடுக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் லால் தர்மசிறி கூறினார்.

மைக்ரோன் 20 இற்கும் குறைவான பொலித்தீனினால் பாரியளவில் சூழல் மாசடைவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனுடன் தொடர்புடைய அனைத்து உற்பத்தி தரப்பினருக்கும் பொலித்தீன் பாவனை குறித்த அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இதன் கீழ் மைக்ரோன் 20 இற்கு குறைவான பொலித்தீன் தயாரிப்பு, தம் வசம் வைத்திருத்தல்,விற்பனை மற்றும் பாவனை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் தொடர்ச்சியாக சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அதிகார சபையின் தலைவர் லால் தர்மசிறி கூறினார்.

இந்த சுற்றிவளைப்புக்களின் போது கைது செய்யப்படுகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (செ-12)

## இளம் சமூகத்தினரை சீரழிக்க இடமளிக்க மாட்டோம்-ஜனாதிபதி

(கொழும்பு)

ரூபாய்களுக்கும், சதங்களுக்கும் இடமளித்து இளம் சமூகத்தை வழி தவறச் செய்யும் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ரூபாய்களைக் கருத்திற் கொண்டு அவ்வாறான வேலைத் திட்டங்களுக்கு அனுமதியளிப்பதை விட அது குறித்த நன்மை தீமைகளை ஆராய்ந்து செயற்படுவது அனைவரினதும் பொறுப்பு என அம்பாறையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் போது ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறான விமர்சனங்கள் வந்தாலும் எமது கலாசாரம் மற்றும் ஒழு க்கத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் தாம் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் 50 அறநெறிப் பாடசாலைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இந்தப் பாடசாலைகளின் நிர்மாணப் பணிகளில் இராணுவத்தினரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பத்தினால் சமூகத்தில் மனிதத்துவம் அற்றுப்போவதை கருத்திற்கொண்டு நற்பண்புகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அனைத்து மதகுருமார்களின் பொறுப்பு என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (செ-12)

## ஜனாதிபதியின் ஓராண்டு நிறைவை எளிமையாக நடத்துவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து ஓராண்டு நிறைவடையும் நிலையில், அதுகுறித்த நிகழ்வை எளிமையான முறையில் நடத்தப்பட உள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி 8 புரட்சி மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவிப் பிரமாண பூர்த்தி நிகழ்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மிகவும் எளிமையான முறையில் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எவ்வித கொண்டாட்டங்களும் இன்றி, பண விரயமின்றி நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

பதவிப் பிரமாண ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 8ஆம் திகதி முற்பகல் களுத்துறை போதி பகுதியில் மதவழிபாட்டு நிகழ்வுகளும், பிற்பகலில் ஜனாதிபதியின் விபரங்கள் அடங்கிய நூல் வெளியிட்டு நிகழ்வு ஒன்றும் நடைபெறவுள்ளது. (செ-12)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### இறைவனின் கருவி



இறைவனுடைய எந்திரமாகவே இருக்கக்கூடிய மனிதனிடம்-இறைவனுடைய கருவியாகவே இருக்கக் கூடிய மனிதனிடம் - முழுமையாக ஆறாவது அறிவு வந்து விட்டதால், இறைவனோடேயே கலக்கக் கூடிய அளவுக்கு மனிதனிடம் ஆற்றல் இருப்பது தெரியவரும். அந்த ஆற்றலைக் கொஞ்சம் வளர்த்துக் கொண்டால் போதும். நீங்கள் இனிமேல் இறைவனிடம் போய் எதுவும் தனியாக் கேட்க வேண்டியது இல்லை. உங்களுடைய மனத்தின் அடித்தளத்தில் இறைவனே அமர்ந்திருக்கின்றான். அதைத் தெரிந்து கொள்ளாதது தான் உங்களுடைய தவறு. அந்தத் தவறு தான் அவனை மறைத்துக் கொண்டு இருக்கிறது.

சும்மா ஒரு தட்டு தட்டிவிட்டால் போதும் உங்கள் அறிவு பிரகாசிக்க ஆரம்பித்து விடும். அப்படித் தட்டிவிடும் வேலை தான், "நான் என்ன செய்ய வேண்டும்? என்னிடம் என்ன இருக்கிறது? அதை எந்த அளவு வேண்டுமோ அந்த அளவு எப்படிப் பெருக்கிக் கொள்ள முடியும்?" என்ற ஊக்கம்.

ஒரு குடும்பமானாலும் சரி, தனி மனிதன் ஆனாலும் சரி அல்லது சமுதாயம் ஆனாலும் சரி, எல்லோருமே ஆக்கத்துறையில் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்க முடியும். இந்தத் தத்துவம் விஞ்ஞானத்திற்கு ஒத்தது. இந்த எனது விளக்கம் உளவியல் தத்துவத்திற்கும் சரி அல்லது வாழ்க்கைக்கும் சரி, எதற்கும் முரண்படாது. உலகத்திலே இதுவரைக்கும் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய எந்த மதத்திற்கும் அது முரண்பாடானது ஆகாது.

# 2015 விளையாட்டு உலகம் ஓர் பார்வை





















(தொடர்ச்சி...)

டெஸ்ட் போட்டிகளில் முதலாவது பகல் இரவு ஆட்டமும் இந்த ஆண்டு கிரிக்கெட் வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும். அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் பங்கேற்று வந்தது நியூசிலாந்து அணி. இவ்விரண்டு அணிகளுக்கு இடையே நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டி, நவம்பர் மாதம் 27 ஆம் திகதி, அடிலை ஓவல் மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக நடைபெற்றது. முதன் முதலாக விளக்குகளில் ஒளிரும் பிங்க் நிற பந்து பயன்படுத்தப்பட்டது. இந்த போட்டியில் அவுஸ்திரேலிய அணி மூன்று விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## காற்பந்து

2014- 2015 ஆம் ஆண்டுக்கான ல-லீகா காற்பந்து தொடரை நட்சத்திர ஆட்டக்காரர்களை கொண்ட பார்சிலோனா அணி கைப்பற்றியது. மெஸ்ஸி, நெய்மர், ஆகிய நட்சத்திர வீரர்களை கொண்ட பார்சிலோனா அணி, 23 ஆவது முறையாக கோப்பையை கைப்பற்றியது.
2014-2015 ஆம் ஆண்டிற்கான பிரிமியர் லீக் காற்பந்து தொடரில் செல்சே (chelsea) அணி கோப்பையை வென்றது. அந்த அணிக்கு இது ஐந்தாவது கோப்பை ஆகும்.
கிளப் அணிகளுக்கான உலகக்கோப்பையை ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா அணி வென்றது. பிபாவால் நடத்தப்படும் இந்த உலகக்கோப்பை இந்த ஆண்டு ஜப்பானில் நடைபெற்றது. டிசெம்பர் 20 ஆம் திகதி நடைபெற்ற இறுதி போட்டியில், பார்சிலோனா அணி வெற்றி பெற்று கோப்பையை மூன்றாவது முறையாக கைப்பற்றியது.இந்தியாவில் நடைபெறும் காற்பந்து தொடரான ஐ.எஸ்.எல். இந்த ஆண்டும் அதிக வரவேற்புடன் ஒக்டோபர் மாதம் தொடங்கி டிசெம்பர் வரை நடைபெற்றது. தொடக்க ஆட்டங்களில் சிறிது சொதப்பினாலும், பின்னர் பெற்ற தொடர் வெற்றிகளால் சென்னையின் எப்.சி அணி அரையிறுதிக்கு முன்னேறியது. அரையிறுதியில் கொல்கத்தா அணியை வீழ்த்தி, இறுதி போட்டியில் கோவா அணியுடன் மோதியது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சென்னை அணி, கோவா அணியை அதன் சொந்த மண்ணில் 3-2 என்ற கோல்கணக்கில் வெற்றி கொண்டு, 2015 ஆம் ஆண்டிற்கான சம்பியன் பட்டதை கைப்பற்றியது. தொடரில் அதிக கோல் அடிக்கும் வீரருக்கு அளிக்கப்படும் தங்க ஷூ விருதினை, 13 கோல்களை அடித்ததற்காக சென்னை வீரர் மெண்டோசாவிற்கு வழங்கப்பட்டது.

## டென்னிஸ்

ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன், இந்த ஆண்டும் மெல் பேர்ன் நகரில் நடைபெற்றது. அதில் சம்பியன் பட்டம் வென்ற வீரர், வீராங்கனைகளின் பட்டியல் வருமாறு,
ஆண்கள் ஒற்றையர்: ஜோகோவிச்
பெண்கள் ஒற்றையர்: செரீனா வில்லியம்ஸ்
ஆண்கள் இரட்டையர்: சிமொனே போலேல்லி / பாபியோ போக்னினி
பெண்கள் இரட்டையர்: பதனி மட்டக்-சான்ஸ் / லூசி சபாரோவா
கலப்பு இரட்டையர்: மார்டினா ஹிங்கிஸ் / லியாண்டர் பயஸ்
களிமண் த்ரையில் நடைபெறும் கிராண்ட் ஸ்லாம் போட்டியான பிரெஞ்ச் ஓபன் டென்னில் தொடரில், 2015 ஆம் ஆண்டு சம்பியன் பட்டம் பெற்றவர்களின் பட்டியல் வருமாறு,
ஆண்கள் ஒற்றையர்: சடன் வாவ்ரின்கா
பெண்கள் ஒற்றையர்: செரீனா வில்லியம்ஸ்
ஆண்கள் இரட்டையர்: இவான் டொடிக் / மார்செலோ மேலோ
பெண்கள் இரட்டையர்: பதனி மட்டக்-சான்ஸ் / லூசி சபாரோவா
கலப்பு இரட்டையர்: பதனி மட்டக்-சான்ஸ் / மைக் பிரயான் வரலாற்று சிறப்புமிக்க விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் லண்டன் நகரில் நடைபெற்றது. கிராண்ட் ஸ்லாம் அந்தஸ்து பெற்ற இந்த போட்டிகளில் பட்டத்தை வென்றவர்களின் பட்டியல் வருமாறு,
ஆண்கள் ஒற்றையர்: ஜோகோவிச்
பெண்கள் ஒற்றையர்: செரீனா வில்லியம்ஸ்
ஆண்கள் இரட்டையர்: ஜீன் ஜூலின் ரோஜர் / ஹோரியா டேகு
கலப்பு இரட்டையர்: மார்டினா ஹிங்கிஸ் / லியாண்டர் பயஸ்
பெண்கள் இரட்டையர்: மார்டினா ஹிங்கிஸ் / சானியா மிர்சா
ஆண்டின் கடைசி கிராண்ட் ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிகள், நியூயோர்க் நகரில் நடைபெற்றன.
ஆண்கள் ஒற்றையர்: ஜோகோவிச்
பெண்கள் ஒற்றையர்: பிலாவியாபென்னெட்டா
ஆண்கள் இரட்டையர்: ஹூகுஸ் ஹெர்பர்ட் / நிகோலஸ் மஹூ
பெண்கள் இரட்டையர்: மார்டினா ஹிங்கிஸ் / சானியா மிர்சா
கலப்பு இரட்டையர்: மார்டினா ஹிங்கிஸ் / லியாண்டர் பயஸ்
சென்னையில் நடைபெறும் சென்னை ஓபன் டென்னிஸ் தொடர் இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்றது. இதில் ஸ்டேன் வாவ்ரிங்கா சம்பியன் பட்டத்தினை கைப்பற்றினார்.

## குத்துச் சண்டை

தொழில்முறை குத்துச் சண்டை போட்டிகளில் வீழ்த்த முடியாதவராக திகழ்ந்த மேவெதர், தனது இறுதி ஆட்டத்திலும் வெற்றி பெற்றார். உலகமே எதிர்பார்த்த இந்த ஆட்டத்தில், மேவெதர் தன்னை எதிர்த்து ஆடிய அன்றோ பெர்டோவை வீழ்த்தி வெற்றி பெற்றார். சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த குத்துச் சண்டை போட்டியில், வெற்றி பெற்றதற்காக மேவெதர்க்கு வழங்கப்பட்ட பரிசுத்தொகை, இந்திய மதிப்பில் சுமார் 1200 கோடி ஆகும்.ஒலிம்பிக் மற்றும் கொமன்வெல்த் போட்டிகளில் இந்தியாவிற்கு பெருமை தேடி தந்த விஜேந்தர் சிங், அந்த வகையான குத்துச் சண்டை போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று பணம் கொழிக்கும் தொழில் முறை குத்துச் சண்டை போட்டிகளில் கவனம் செலுத்தினார். இது வரை நடந்த மூன்று தொழில் முறை குத்துச் சண்டை போட்டிகளில் அவர் வெற்றியும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பட்மின்டன்

இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான சாய்னா நேவால், இந்த ஆண்டு சொல்லிக்கொள்ளும் படியாக ஜொலிக்கவில்லை. காயங்களால் சில முக்கிய தொடர்களில் இருந்து விலகியதால் சாய்னா விற்கு இந்த ஆண்டு சரியாக அமையவில்லை என்றுதான் சொல்ல முடியும்.
இந்த ஆண்டு நடைபெற்ற இந்தியன் ஓபன் சுப்பர் சீரீஸ் பட்டத்தை வென்றார் சாய்னா.
இதே தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீகாந்தும் பட்டத்தை கைப்பற்றினார்.
உலக சம்பியன்ஷிப் தொடரில் முதன் முதலாக இறுதி வரை முன்னேறிய சாய்னா, இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்தார்.
இந்தியாவில் ஆண்டு தோறும் நடைபெறும் சையது மோடி உலக பட்மிண்டன் சம்பியன் ஷிப் போட்டியில், பதக்கத்தை கைப்பற்றினார் சாய்னா. இதே தொடரில் இந்தியாவின் கஷ்யாப், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பட்டதை கைப்பற்றினார். (க) (முற்றும்)

## கலாசாரப் பெருவிழா மண்டைதீவில்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணை பிரதேச கலாசாரப் பேரவையும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் கலாசாரப் பெருவிழா இன்று திங்கட்கிழமை மண்டைதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேச செயலரும் கலாசாரப் பேரவை தலைவருமான திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி மாலினி கிருஸ்ணானந்தன் கலந்து கொள்ளவுள்ளார். இந் நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-5)

## எம் அடையாளங்கள் பறிக்கப்...

யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அமர்வின் முடிவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தொி வித்ததார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமதுபேரவையின் முதற்கட்ட வேலைத்திட்டமாக அரசியல் தீர்வு தொடர்பான உப் குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ் உப குழு கட்டமைப்பானதுமுதலமைச்சர் சார்பாக இருவர், அரசியல் கட்சிகள் சார்பாக 2 பேர் சமூகஅமைப்புகள் சார்பாக 5 பேர் முன்மொழியப்படுவார்கள், 15 பேர் கொண்ட உப குழு தனது வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும். அரசியல் தீர்வு தொடர்பான விஞ்ஞான பூர்வமான ஒரு ஆவணத்தை முன்வைப்பதுதான் இதன் நோக்கமாகும். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுஎப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது தொடர்பான திட்டத்தை மக்களின் பங்களிப்பு டன எமதுகுழுவினர் முன்வைப்பார்கள்.

அத்துடன் ஆலோசனை வழங்குவதற்காக வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ள அரசியல் நிபுணர்களின் ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. அதற்காக 5 அங்கத்தவர்கள் கொண்ட ஆலோசனை சபை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அடிமட்டமக்களிடம் இருந்து அவர்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கும் தீர்வுதிட்டம் இருக்கவேண்டும் என்பதுஎம் எல்லோருடைய ஆசையாக இருக்கிறது அதற்காக எமது பேரவையால் சிலமுன்முயற்சிகளை எடுக்கவுள்ளோம்.

நிபுணர்குழு அமைக்கப்பட்டு அரசியல் தீர்வில் உள்ளடங்கக் கூடிய முக்கியமான அம்சங்களை உள்ளடக்கியதான அறிக்கையை தயாரிக்கவுள்ளோம் அது பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பு மக்களுக்கு வெகுவிரைவில் தெரிவிக்கப்படும்.

சமூக அமைப்புக்களை பிரதி நிதித்துவப்படுத்துகின்றவர்கள் தான் இப் பேரவையில் அதிகமாகவுள்ளனர். அவர்கள் மூலமாக அடிப்படை வரைபை மக்கள் முன்னிலையில் எடுத்துச் சென்று மக்களின் ஆலோசனைகளை பெற்று மக்களின் தேவைகளை உள்வாங்கி இறுதி ஆவணத்தை மிகவிரைவில் தயாரிக்கவுள்ளோம்.

அத்துடன் இப் பேரவையில் முஸ்லிம் மக்கள் தனித்துவ மானவர்கள். அவர்கள் அரசியல் தீர்வை தீர்மானிக்கவேண்டியவர்களில் முக்கியமானவர்கள் அவர்களை எவ்வாறு உள்வாங்குவது என்பது தொடர்பாக உப குழு ஆராயவுள்ளது. அதுமிகவும்சவாலானது. எமது வெற்றியும் அதிலேதான் தங்கியுள்ளது.

முன்னையகாலங்களில் பல சிவில் அமைப்புகள் உருவாகி இயங்கிக்கொண்டு இருந்தன. யுத்தம் முடிவடைந்த பின்னரும் பல அமைபபுக்கள் இயங்கிவந்தன.

இப்படியான சூழலில் எமது அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை அரசியல் வாதிகளிடம் மட்டும் விட்டுவிடக்கூடாது. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அமைப்புகளும் மக்களும் இணைந்துதான் இந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த கோட்பாட்டின் அடிப்படையில் பல சிவில் அமைப்புக்கள் தோற்றம் பெற்றன.

2012,13 ஆம் ஆண்டுகளில் அரசியல் கடசிகளையும் சிவில் அமைப்புகளையும் இணைத்து ஒரு தமிழ் தேசியபேரவை அமைப்பதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவைவெற்றியடையவில்லை. சிவில் அமைப்புக்கள் மட்டும் இணைந்துதமிழ் மக்கள் பேரவையை உருவாக்கியதாக கருதக்கூடாது. பல அமைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எமது நோக்கம் மிகவும் தெளிவானது எந்த விதமான அரசியல் கட்சியை சார்ந்தோ அல்லது அ்ரசியல் கட்சியாக மாறவேண்டிய தேவையோ இல்லை இந்த அமைப்பினகட்டமைப்பில் இது அரசியல் கட்சியாகமாற்றம் அடைவதற்கான சாத்தியம் இல்லை. இதில் உள்ளவர்கள் பல அமைப்புகளை சார்ந்தவர்கள். அவர்களை இணைத்து கட்சியாக பரிணமிப்பது என்பது சாத்தியமற்றவிடயம்.

தமிழ் மக்களுக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்கவேண்டும். அந்தப் பொறுப்பை அரசியல் கட்சிகளிடம் மட்டும் விட்டுவிடக்கூடாது. ஏனெனில் பாதிக்கப்பட்டது நாங்கள் எமக்கும் அதில் உரிமை உண்டு. கடந்த காலங்களில் எமது சொத்து இழப்புகளுக்கும், தியாகங்களுக்கும், உயிர் இழப்புகளுக்கும் சரியான தீர்வு ஏற்படவேண்டும் என்பது பற்றிசிந்திப்பது ஒவ்வொருவருக்கும் உள்ள கடமை அந்தக் கடமையை தான் நாம் செய்ய நினைக்கின்றோமே தவிர இதற்குஅரசியல் சாயம் பூசவேண்டாம். அரசியல் பின்னணி என்று கதைப்பது வேதனைக்குரியவிடயம்.

இது சமூக அமைப்புகள் மக்களின் தீர்வுபற்றிசிந்திப்பதற்கு இடையூறாக இருக்கும். மக்கள் அனைவரும் அமைப்பாக உருவாகவேண்டியதேவை உள்ளது, அதில் அனைவரையும் உள்வாங்கி உருவாக்க வேண்டிய தேவை காணப்படுகிறது.

எனவே இந்த பேரவை ஆரம்பித்து ஒரு கிழமையில் அதை அழிக்க நினைப்பது வேதனைக் குரியவிடயம்.

மக்கள் நலனை கொண்டு நடவடிக்கை எடுக்க அனைவரின் ஒத்துழைப்பும் தேவை. நல்ல நோக்கத்துக்காக பல அமைப்புகளை கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பு இது. எமக்கான சரியான தீர்வு என்ன என்பதை மக்கள் மத்தியில் இருந்து வெளியில் கொண்டுவந்து அரசியல் தலைமைகளுக்கு முன் வைப்போம். அதை உள்வாங்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரியான தீர்வு திட்டத்தை முன்வைக்க வேண்டும். அவர்களுக்குபலமாக இருக் கத்தான் முயற்சிசெய்கிறோம். அதை புரிந்து கொள்ள வேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# ‘லவ் அன் செக்ஸ்’ நிகழ்வுகளுக்கு நாட்டில் இனி அனுமதி கிடையாது

## கலாசாரத்தை பாதிக்கும் என ஜனாதிபதி எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் ஒரு முறை, என்றிக்கின் ‘லவ் அன்ட் செக்ஸ்’ போன்ற இசை நிகழ்வுகள் நடத்தப்படுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்று இடம் பெற்ற நிகழ்வில் பங்கேற்ற அவர், இவ்வாறான நிகழ்வுகள் இலங்கையின் கலாசாரத்தை மோசமாக பாதிக்கும் என்று எச்சரித்தார்.

குறித்த இசை நிகழ்வு அரசாங்கத்தின் அனுமதியுடனேயே இடம் பெற்றது. எனினும் ஏற்பாட்டாளர்களின் நோக்கங்களை முன்கூட்டியே அரசாங்க அதிகாரிகள் உணர வேண்டியது அவசியமாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த இசை நிகழ்வின்போது யுவதி ஒருவர் தமது மேற்சட்டையை கழற்றி பாடகர் பாடிக் கொணடிருந்த மேடையை நோக்கி வீசிய சம்பவத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இது நாட்டை பிழையான வழிக்கு இட்டுச்செல்லும் நிகழ்வாகும். இதற்காக ஏற்பாட்டாளர்கள் வெட்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் தமது மேற்சட்டையை கழற்றி மேடையை நோக்கி எறிந்த யுவதி இராணுவ உயரதிகாரி ஒருவரின் மகள் என்ற விடயமும் வெளியாகியுள்ளதாக இலங்கையின் ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த யுவதி, தமது சட்டையை கழற்றி எறிந்ததுடன் மேடைக்கு சென்று பாடகரை கட்டி அணைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த இசை நிகழ்வை, இலங்கையின் முன்னாள் கிரிக்கட் வீரர்கள் குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்த்தன ஆகியோரது அனுசரணையிலான நிறுவனத்தார் மற்றும் வானொலி அறிவிப்பாளர் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-12)

# இனவாதம் இல்லாது போனாலும் ஊழல், துஷ்பிரயோகம் தொடர்கிறது

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தை போன்றே தற்போதைய அரசாங்கமும் செயற்படுகிறது என்று ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

ஜேவிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க இந்தக குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் மீள்குடியமர்த்தல் நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலையிலேயே உள்ளன என்று அவர் ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கத்தை போன்றே இந்த அரசாங்கமும் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின்வாழ்க்கையை கட்டியெழுப்பும் எந்த நடவடிக்கைகளையும் அரசு துரிதகதியில் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முன்னைய அரசாங்கம் மதவாதம், இனவாதம் உட்பட்ட பல நாசகார திட்டங்களை முன்னெடுத்து வந்தது

இந்த அரசாங்கம் இவ்வாறான திட்டங்களை ஊக்குவிக்கவில்லை. அது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

எனினும் முன்னைய அரசாங்கத்தை போன்றே இந்த அரசாங்கத்திலும் ஊழல் மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்கின்றன என்று பிமல் ரட்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த மார்ச் காலக்கெடுவுக்கு முன்னர் இலங்கை அரசாங்கம், பேரவையின் நிபந்தனைகளை பூர்த்தி செய்து விடுமா? என்பதில் இன்னும் முன்னேற்றம் இல்லை.

எனினும் அதனை நோக்கிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை தாம் வரவேற்பதாக பிமல் ரட நாயக்க குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசின் பங்காளி கட்சி

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாடல்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி ஒன்றாகவே செயற்படுகின்றது என்று தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தாம் எதிர்க் கட்சி என்று சொல்லிக்கொள்கின்றதே தவிர அவர்கள் உண்மையில நாட்டின் எதிர்க் கட்சியல்ல.

அதே போன்று தான் சம்பந்தன் அவர் களும் பெயரளவிலேயே எதிர்க்கட் சித்தலைவராக உள்ளார்.

அரசாங்கத்துக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை. இரு தரப்பினருக்கும் இடையில் ஒரே நிலையிலான இணக்கங்கள்தான் உள்ளன. சர்வதேச விசாரணை, தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் இவர்கள் ஒரே இணக்கப்பாட்டிலே இருக்கின்றனர்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியல்ல. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (செ-12)

## ஆட்சி மாற்றத்திற்கு...

காரணமாக அமைந்த தேர்தல்களே அவையாகும்.

இவற்றில் இலங்கையின் ஆட்சி மாற்றத்துக்கு காரணமாக அமைந்த கடந்த ஜனாதிபதித் தேர்தல் மிக முக்கியமான தாகும். உலகின் முக்கிய தேர்தல்களிலும் முதன்மையானதாகும்.

இந்தத் தேர்தல் பல முக்கிய சம்பவங்களை உள்ளடக்கியுள்ளது. அன்றைய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பொது அபேட்சகராக களமிறங்கியமை அவற்றில் குறிப்பிடத்தக்க சம்பவமாகும். இலங்கையில் மிகவும செல்வாக்கைக் கொண்டிருந்தவரும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருந்தவருமான மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டமையானது உலக அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான சம்பவமாகும்.

அதன் காரணமாகவே உலகின் முக்கியமான அரசியல் மாற்றங்களை ஏற்படுத்திய 12 தேர்தல்களில் முதன்மையானதாக 2015 ஆம் ஆண்டின் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் குறித்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## அரசியல் உப குழு...

மான்கள் எனப் பலர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் பேரவையின் இரண்டாவது கூட்டம் நேற்று காலை ஒன்பது மணியளவில் யாழ்.பொது நூலகத்தில் இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி உபகுழுவின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினரும் வாழ்நாள் பேராசிரியருமான சி.க சிற்றம்பலம், சட்டத்தரணி என்.காண்டீபன், புளொட்டின் தலைவர் ரி.பரந்தாமன், ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன், வட மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

சட்டத்தரணி வி.மணிவண்ணன், தமிழ் சிவில் சமூக அமையத்தின் பேச்சாளரும் சட்டத்தரணியுமான குமாரவடிவேல் குருபரன், சட்டத்தரணி பு.புவிதரன், யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கம், சட்டத்தரணி சேவியர் விஜயகுமார் ஆகியோர் இவ் உப குழுவில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதனை விட மேலும் மூன்று உறுப்பினர்கள் மேற்படி உபகுழுவில் உள்வாங்கப்பட உள்ளனர். இதில் இருவரை வடக்கு மாகாண முதலமைச்சரும் மேற்படி பேரவையின் இணைத் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் நியமிக்கவுள்ளார். நேற்று காலை ஒன்பது மணியளவில் யாழ்.பொது நூலகத்தில் ஆரம்பமாகிய கூட்டம் மதியம் பன்னிரண்டு மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்புடன் நிறைவுக்கு வந்தது. தெரிவு செய்யப்பட்ட உப குழு, தமிழ் மக்களின் பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்குரிய அரசியல் தீர்வு திட்டம் உள்ளிட்ட யாப்பு வரைபுகள் தொடர்பில் மக்களுடனான சந்திப்புக்களை ஏற்படுத்தி தகைமைசார் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் உள்வாங்கி தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-4)

## கொள்கையை...

மணியளவில் யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, மேற்படி பேரவையில் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள், பின்கதவால் வருவதற்கு முயற்சிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியுள்ள குற்றச்சாட்டு குறித்து ஊடகவியலாளர்கள் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது ஒரு மக்கள் அமைப்பு, நாங்கள் அரசியல் செய்யவில்லை. மக்களுக்கு எம்மால் எதனை செய்ய முடியுமோ அதனையே செய்யவிழைகின்றோம். இங்கு ஒருவரும் பின்கதவால் வந்தவர்கள் அல்ல. எல்லோருமே நேர்மையான வழியில்தான் வந்தவர்கள். எமது கொள்கையை யார் ஏற்றுக் கொண்டு பேரவையில் இணைய விரும்பினாலும் அவர்களை இணைத்துக்கொள்ள தயாராகத்தான் உள்ளோம்.

எமது கொள்கையை சுமந்திரன் ஏற்றுக்கொண்டு எம்மோடு இணைய விரும்பினாலும், அவர் இணையலாம். இது மக்களுடைய அமைப்பு. நாங்கள் அனைவருமே ஒன்றாக பணியாற்ற வேண்டியவர்கள். தேவையற்ற பிரிவினைகள் பேசி எமது அமைப்பை சிதைத்து விடக்கூடாது என்றார் அவர். (செ-4)

## புதிய அரசியலமைப்பை...

ங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் இரண்டாம் குடியரசு யாப்பு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையிலான அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக புதிய அரசமைப்பொன்று கொண்டு வரப்படும் என வாக்குறுதி அளித்திருந்தது.

இதன் அடிப்படையில் புதிய அரசமைப்புக்கான ஏற்பாடுகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இது தொடர்பிலான நடவடிக்கைகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் மேற்கொண்டு வருகின்றன.

அதேவேளை, இந்த புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு தாங்கள் ஒருபோதும் எதிர்ப்பை வெளியிடப் போவதில்லை என்று ஜே.வி.பி அறிவித்துள்ள நிலையில், இந்த புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கு எதிராகச் செயற்பட கூட்டு எதிரணியினர் தீர்மானித்து வருவதாக நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த புதிய அரசமைப்புக்கான யோசனையை எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதுடன், மறுநாள் 9ஆம் திகதி புதிய அரசமைப்புத் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறி. சேன விசேட உரை ஆற்றவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியிலேயே நீதியமைச்சரினால் மேற்படி கருத்து ஊடகங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## கடும் மழை...

சில பிரதேசங்களில் 100 மில்லிலீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதி வாகக் கூடுமென திணைக்களத்தின் வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மத்திய மலைப்பிரதேசங்களில் கிழக்குச் சரிவுகளில் மணித்தியாலத்திற்கு 50 கிலோமீற்றர் அளவில் வடகீழ் பருவ பெயர்ச்சி காற்று வலுவடைந்து வீசக்கூடுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இடியுடன் கூடிய மழை நேற்று மாலை தொடக்கம் பெய்து வருகின்ற சூழ்நிலையில் இன்று பலத்த காற்றும் மின்னல் தாக்கமும் ஏற்படக்கூடுமென தெரிவித்த அவர், மக்களை அவதானமாக செயற்படுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் பிற்பகல் மற்றும் மாலை வேளைகளில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு ஐம்பது முதல் அறுபது கிலோமீற்றர் வரை வேகத்தில் வீசலாம் என தெரிவித்த அவர், இவ்வாறான நேரங்களில் கடற்கொந்தளிப்பும் காணப்படலாமென குறிப்பிட்டுள்ளார். ஆகையால் கடற்பிராந்தியங்களை சூழவுள்ள மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு வானிலை அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார். (செ-12)

## பேஸ்புக் பாவனைக்கு...

காலமாக நடந்தேறிவரும் அதிகளவான துஷ்பிரயோக சம்பவங்களை கருத்திற் கொண்டு இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து சட்டத்துறை, வலைத்தளங்களின் தொழிநுட்ப பிரிவு மற்றும் துறைசார் வல்லுனர்களிடம் தற்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முகப்புத்தக பாவனையால் பாடசாலை மாணவர்களே அதிகளவாக இலங்கையில் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டு, அதனை தடைசெய்யுமாறு கடந்த காலங்களில் வலியுறுத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில், இலங்கையில் முகப்புத்தகத்தை பதிவுசெய்வதற்கு வயதெல்லையை அதிகரிப்பது குறித்து கவனஞ்செலுத்தப்பட்டு வருகின்றது. (செ-12)

## புதிய...

ராஜா ஆகியோர் பதிலளிக்கையில்

வருங்காலத்தில் தமிழர்களுடைய வாழ்வு எவ்வாறு இருக்க வேண்டும் எங்களுடைய பாரம்பரியத்தின் வாழ்க்கை எவ்வாறு அமைய போகின்றது? அதற்கு ஏற்றவாறு எங்களுடைய நாட்டின் அரசியல் யாப்பு இருக்க வேண்டும் என்ற கரிசனை எமக்கு உள்ளது. 1972ஆம் ஆண்டு அரசியல் யாப் பு எங்களுடைய தமிழ் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

அதிலிருந்து பலவிதமான பாதிப்புக்கள் எமக்கு ஏற்பட்டுக்கொண்டு உள்ளன, எந்த விதமான பாதுகாப்புக்களும் உத்தரவாதங்களும் இல்லை என்ற இடத்தில், நாங்கள் சில விடயத்தை ஆராய்ந்து பார்த்து அடையாளப்படுத்தியுள்ளோம், இதற்கு காரணம் யார், யார், புதிய அரசியல் யாப்பினை உருவாக்குகின்றார்களோ அவர்களுடைய கவனத்திற்கு அதனை கொண்டு வரவேண்டும் என்பதற்காக இதனை அவர்களிடம் எடுத்து கூறி இவ்வாறான கரிசனைகள் இல்லையென்றால், எமது காணி பறிபோகும், வீடு பறிபோகும், கலாசாரம் பறிபோகும், மொழி பறிபோகும் என்ற கவலை எமக்கு உள்ளது என்பதனை எடுத்து காட்டுவதற்காக தான் நாம் முயற்சிகள் மேற்கொள்கின்றோம். மக்களிடமிருந்து தங்களது எண்ணங்களை பிரதிபலிக்கும் முகமாக நாங்கள் சில நடவடிக்கைகளை எடுத்து புதிய அரசு தயாரிக்கவுள்ள புதிய அரசியல் யாப்பில் எமது பாதுகாப்பு விடயங்களுக்காக இவை இருக்க வேண்டும் என்று எடுத்து கூறும் விதமாகத்தான் நாங்கள் செயற்படுகின்றோம்.

எமது மக்களின் தீர்வு தொடர்பில் பேசப்படும் போது தனியே அரசியல் கட்சிகள் மட்டும் அதில் பங்கு பற்ற முடியாது, ஏனென்றால் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். யுத்தகாலத்தில் இங்கு வாழ்ந்தவர்கள், மக்களின் உயிரிழப்புகளிற்கும் தியாகங்களிற்கும் சரியான தீர்வை பெறுவது கடமை . அதனை தான் நாம் செய்ய முயல்கின்றோம். இதற்கு அரசியல் சாயம் பூசுவது வேதனையளிக்கின்றது.

அரசாங்கம் புதிய யாப்பு முறையை கொண்டுவரவுள்ளமை உண்மை, இதில் எங்களுடைய பிரச்சினைகளை எந்தளவிற்கு உள்வாங்கப்போகின்றோம் என்பது தான் பிரச்சினை, எம்முடைய இனம் சார்ந்து குறிப்பிட்ட விடயங்களை உள்வாங்க வேண்டும் என்று கோருவது தான் எமது கடமை. எமது தீர்வு திட்டம் நிபுணர் குழு மூலம் முன்னெடுக்கப்பட்டு மக்கள் மயப்படுத்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச வேண்டிய தேவை ஒன்று உள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பு சரியான தீர்வு திட்டத்தை உருவாக்க வேண்டும். இதற்கு ஆதரவாக இருப்பதே எமது நோக்கமாகும்.

எமது பேரவையில் மக்களின் இணைவு எந்தளவிற்கு அதிகம் உள்ளதோ, அந்தளவிற்கு எமது வெற்றி தங்கியுள்ளது, மக்கள் அதிக ளவில் இருந்தால் தான் அரசாங்கமும் அதனை கவனத்தில் எடுக்கும், மக்களின் இணைவு நடைபெற்றுக்கொண்டு தான் உள்ளது, அதனை மேலும் நாம் எதிர்பார்க்கின்றோம். எல்லோருடைய ஒத்துழைப்பையும் நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

எமது இயக்கம் பல்வேறு கட்சிகளையும் சிவில் சமூக பிரதிநிதிகளும் கொண்டது. மேலும் பல்வேறு மத நிறுவனங்களும் எம்மோடு இணைந்துள்ளன. ஆகவே இது ஒரு அரசியல் கட்சியாக ஒருபோதும் பரிணாமம் அடையாது என பேரவை இணைத் தலைவர்கள் தெரிவித்தனர்.

மேலும் பல்வேறுபட்ட நிபுணர்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ள அரசியல் விவகாரங்களுக்கான உப குழு எதிர்வரும் ஒரு மாத காலப்பகுதிக்குள் தமிழர் தரப்பிலான அரசியல் யாப்பு திட்ட வரைபுகளை தயா ரித்து கொள்ளும் எனவும் இணைத் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (செ-4,9)

## ஆட்சி மாற்றத்துக்கு...

இதற்கிடையே வரும,9) ஜனவரியில் முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது நெருங்கிய நண்பனான சீனாவுக்கு விஜய மொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியிலிருந்து அகற்றிய 2015ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் உலகின் முக்கியமான தேர்தல்களில் முதன்மையா னது என்று சீனாவின் உத்தியோகபூர்வ செய்திச் சேவை புகழாரம் சூட்டியுள்ளது.

இது தொடர்பாக சின்ஹுவா செய்திச் சேவை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உலகின் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய தேர்தல்களில் 12 தேர்தல்கள் மிக முக்கியமானவை.


இலங்கையில் கடந்த ஜனாதிபதித் தேர்தல், இங்கிலாந்து, கனடா, ஆர்ஜென்டீனா, மியன்மார், கிரேக்கம் உள்ளிட்ட நாடுகளில் நடைபெற்ற அரசியல் மாற்றங்களுக்கு

23ஆம் பக்கம் பார்க்க

வட மாகாண ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு
(C-3150) 0766883394

A/L வரலாறு
M.பத்மன் MA (History)
கற்பிக்கும் இடங்கள்
DMI யாழ்ப்பாணம் , உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி
(C-3145)
சகல A/L பிரிவினர்களுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



★ இலங்கையில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1092 கிளைகள். எமது தலைமை நிறுவனம் பிரான்ஸில் உள்ளது.
★ எமது DELF A1 சான்றிதழைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சைக்கு தோற்றவேண்டியதில்லை.
★ இலவசம்: படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES,படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை...
★ யாழ்,வன்னி,மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.
★ பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களுக்கான பிரெஞ் மொழி பெயர்ப்புகள். பாடசாலை / பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டணம் மிக குறைவு
(சி-3148)
ஆரம்பம்:-10.01.2016 முதலில் தொலைபேசி ஊடாக பதிவை உறுதிப்படுத்துங்கள்.
021 222 8093 ஏ, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ் நிலையம் ➡ புகையிரதக்கடவை ➡ AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



▬ 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
▬ நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
▬ மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
▬ அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101
(C-3146)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.